Registered at G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET, COLOMBO—12.

புத்தகம் 11 ஏவிளம்பி ௵ ஆனி மாதம் 9 திகதி 23-6-57 ஞாயிற்றுக்கிழமை துல்கஃதா பிறை 24 இதழ் 4




# பண்டா லண்டன் போகாத மர்மம் என்ன?

## எம். ஈ. பி. கோட்டைக்குள்ளே குத்து வெட்டுத்தான் முக்கிய காரணமாம்!

### பிலிப் - ஸி. பி. டி. சில்வா லடாய்

(சுதந்திரன் நிருபர்)

இலங்கைப் பிரதமர் திரு. பண்டாரநாயகா அணிமையில் லண்டனில் கூட விருக்கிற சாம்ராஜ்ய பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்வதில்லை யென்று முடிவு செய்திருக்கிறார் அல்லவா? இப்படி அவர் முடிவு செய்தமைக்கு தமிழ் அரசுக் கட்சியின் ஆகஸ்ட் போராட்டம் ஒரு காரணமாயிருந்த போதிலும், மர்மமான வேறு ஒரு காரணமும் உண்டு என்று தெரியவருகிறது.

"தற்போதைய நெருக்கடியான நிலையில் நான் இலங்கையிலேயே தங்கியிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது" என்று திரு பண்டாரநாயகா தெரிவித்துள்ளார். இவர் குறிப்பிட்ட நெருக்கடி ஆகஸ்ட்போராட்டம் பற்றியதுதான் என்று பலரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் ஓரளவு உண்மையிருந்த போதிலும் திரு பண்டாரநாயகா கருதும் பாரதூரமான நெருக்கடி இதுவல்ல.

#### லடாய்

இது காறும் பிரதமர் திரு பண்டாரநாயகா வெளிநாடுகளுக்குச் சென்றபோது மந்திரி சபைக் கூட்டங்களுக்கும் பாராளுமன்றக் கட்சிக் கூட்டங்களுக்கும் சபை முதல்வரான திரு ஸி. பி. டி ஸில்வா தான் தலைமை வகித்துவந்தார் ஆனல் இப்போது திரு. ஸி. பி. டி. ஸில்வாவிற்கும் உணவு அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கும் பலமான லடாய் ஏற்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது.

#### புரட்சி

இதன்காரணமாகத்தாமே தான் பிரதமர் இல்லாத காலங்களில் மந்திரி சபைக்கும், பாராளுமன்றக் கட்சிக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்கவேண்டும் என்று திரு. பிலிப் குணவர்த்தன வற்புறுத்துகிறாராம். திரு பிலிப் குணவர்த்தனவின் இந்தக் கோரிக்கையை மறுக்க திரு பண்டாரநாயகாவிற்குத் துணிவுமில்லை, பலமுமில்லை. ஏனென்றால் மந்திரி சபையிலும், பாராளுமன்றக் கட்சியிலும் திரு. ஸி. பி. டி. ஸில்வாவை விட திரு. பிலிப் குணவர்த்தனவுக்குத்தான் இப்பொழுது ஆதரவு அதிகமாக இருக்கிறது. எனவே திரு. ஸி. பி. டி. சில்வாவை நியமித்துவிட்டு திரு. பண்டாரநாயகா லண்டன் சென்றால் அரசாங்கக் கட்சியில் 'புரட்சி' யேற்பட்டுவிடும் என்று அவர் பயப்படுகிறார். திரு. பிலிப்பை நியமித்தால் திரு. ஸி. பி. டி. ஸில்வா கோஷ்டி அதிருப்தி யடைந்துவிடும்.

#### அரசாங்கம் கவிழலாம்

ஆகஸ்ட் போராட்டத்திற்கு முன்பு அரசாங்கக் கட்சியின் கோட்டைக்குள்ளேயே இப்படிக் குத்து வெட்டு ஏற்படுவதைத் திரு. பண்டாரநாயகா விரும்பவில்லை. அப்படி ஏற்பட இடமளித்தால் ஆகஸ்டில் அரசாங்கம் கவிழ நேரலாம்

(13-ம் பக்கம் பார்க்க)

## ஒருதமிழ்த்தலைவரின் உள்ளாந்தரங்கம்!

### உரிமைப்போரை உக்கிரமாக்கினல் வருமான வரிக்கு வகை சொல்லவேண்டும்

### தமிழ் செனட்டர் தந்த விபரம்

தமிழ்ப் பேசும் மக்களிடையே மதிப்பிழந்த தமிழ்த் தலைவர் அரசாங்கத்தை மூர்த்தண்ணியமாக எதிர்க்க முடியாதவராகவும், தமிழுரிமைப் போராட்டத்தை ஆக்ரோஷத்தோடு நடத்த முடியாதவராகவும் தத்தளித்து வருவதைத் தமிழ் பேசும் மக்கள் அவதானித்திருக்கக்கூடும்.

மேற்கூறிய இரண்டு காரணங்களையும் செய்யமுடியாத நிலையிலிருக்கும் இத் தமிழ்த் தலைவர் செய்யும் ஒரே ஒரு பணி தமிழரசுக் கட்சியைத் தாக்குவதும், அக்கட்சியோடு ஒத்துழைக்க முடியாது என்று அறிக்கை விடுவதுமாகவே இருக்கிறது.

(12-ம் பக்கம் பார்க்க)

## 'சமரசம் காண்பது பிரதமர் கடமை

### தவறினல் போர்முனையில் தான் அவர் எங்களைச் சந்திப்பார்

### இது பயமுறுத்தல் அல்ல; எங்கள் வைராக்கியத்தின் பிரகடணம்'

(சுதந்திரன் நிருபர்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வருடாந்த மகாநாடு ஒன்று ஜூலை மாதம் நடுப் பகுதியில் மட்டக்களப்பில் நடைபெறும் என்று தெரிகிறது. இம்மகாநாட்டில் மிக முக்கியமான தீர்மானங்கள் பல செய்யப்படுமென்றும் அப்படிச் செய்யப்படும் தீர்மானங்களில் தமிழ் பேசும் மக்கள் ஏகோபித்த சிரத்தை காட்ட வேண்டிய அவசியமும், அரசாங்கம் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுமென்றும் தெரிய வருகிறது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயற் குழுக் கூட்டம் சனிக்கிழமை பிற்பகலும் ஞாயிற்றுக்கிழமையும், யாழ்ப்பாணத்திலுள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. ஆகஸ்ட் சட்டமறுப்பு இயக்கத்துக்கான இறுதித் திட்டங்கள் இக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். அத்தோடு போராட்ட ஆயத்தங்களையும் துரிதப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதுவே ஆகஸ்ட் போராட்டத்திற்கு முன் நடைபெறும் இறுதிச் செயற் குழு கூட்டமாகவும் அமையும் என்று தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாட்டை ஜூலை நடுப்பகுதியில் மட்டக்களப்பில் நடத்துவதற்கான திட்டங்களும் மேற்படி கூட்டத்தில் வகுக்கப்படும்.

#### போர்முனையில் சந்திப்பு

"பிரதமரின் பேச்சுவார்த்தைகள் பற்றிய ஆலோசனையும், நான்கு அம்சத்திட்டமும், மிரட்டல்களும் எங்கள் போராட்டத் திட்டங்களைச் சோர்வடையச் செய்யமாட்டா. எங்கள் திட்டங்களை

(12-ம் பக்கம் பார்க்க)



சங்கிலியனுகத் தோன்றும் திரு செ. இராசதுரையின் சம்பிரத் தோற்றம்

உயர்ந்தது இமயமலை!

சிறந்தது தாஜ்மகால்!

ஆனல் புகழ்பெற்றது

"எலேட் பீனிஸ் ஜார்ஜட்"

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி ஆகியவை தமிழன்னையின் அழகின் அணிகலன்கள்

இன்றைய நவநாகரீக நங்கையர்களின் அழகின் அணிகலன் "எலேட்"

★ சிங்காரமான தோற்றத்தைத் தருவது...

★ பூவைப்போல், பெண்களின்மென்மையான மேனியை மலரச் செய்வது...

★ தளிர் மேனித் தங்கையர்களின் மேனியை மென்மையடையச் செய்வது...

"எலேட் பீனிஸ் ஜார்ஜட்"

கன்னியர் விரும்பும் கண்கவர் வர்ணங்களிலும் எழிலான எடுப்பான டிஸைன்களிலும், "எலேட்" பெற்றுக்கொள்ளலாம்.

சுருங்காது, நிறம் மங்காது, மடிப்புக் குலையாது என்பதற்கு 'எலேட்' உத்திரவாதம்பெற்றுள்ளது.

ஏகவினியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்

சில்லறை விற்பனை இலாகா
மெயின் வீதி,
கொழும்பு

மொத்த விற்பனை இலாகா
26, செய்சர் வீதி
கொழும்பு

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்:

# பட்டு மணலிலே படுத்திருந்த கட்டிளங் குமரி

## வெண் நிலவை வெறுத்ததும் தென்றலை ஒறுத்ததும் ஏன்?

## மாசற்ற காதலின் இடத்தைக் கடமை பிடித்துவிட்டதே என்ற காரணத்தாலா?

## செவிலித் தாயின் கண்ணீர்க் காவியம்!

(திருமலை தி. நாகராஜன்)

வானத்து வெண் மதியின் தண்நிலவில், குவலயம் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தது. அந்தக் கோல நிலவின் கொள்ளை அழகில் தண்டலை மெய்மறந்தது. அதில் தென்றல் தவழ்ந்தது. அல்லி மலர்கள் பல்லிதழ் பரப்பின. புள்ளிமான் கூட்டங்கள் பாய்ந்தோடின. முயற் குட்டிகள் புரண்டாடின. நீரோடைகள் வழிந்தோடின.

இத்துணை இன்பக் காட்சிக்கு இருப்பிடமாய்த் திகழ்ந்த சோலையருகில் காதல் மொழி பேசும் கன்னித்தமிழ் நாட்டுக் கட்டழகி யொருத்தி, பட்டுமணலில் அமர்ந்தாள். தளிர்க் கரங்களால் மண்குழைந்தாள். அவள் பால் முகத்தில் துன்பச்சாயல் படர்ந்திருந்தது. அவள் உள்ளத்திலிருந்து ஒரு பெரிய பெருமூச்சு வெளிவந்தது. அது அங்கு மிதந்து வந்த குளிர்க் காற்றுடன் கலந்தது. பின் மறைந்தது.

### வாட்டமேன்?

எத்தனையோ உல்லாசச் சோடிகள், சல்லாபம் புரியும் இந்த நள்ளிரவு வேளையில் இவள்மட்டும் ஏன் இப்படிப் பேசாத பொற்சித்திரப் பாவையாக விருக்க வேண்டும்? இன்ப நிலவோ காய்கிறது. அந்த குமரியினுள்ளமோ வாடுகிறது. அவளிடம் இவ்வயதில் என்ன கவலை குடிபுகுந்து விட்டது? அவள் என்னபருவமழையை நம்பி ஏமாந்த பூமியா? ஒருவேளை இவர்களின் தூயகாதலுக்கு, பெற்ருேரின் கட்டுப்பாடுகள் முட்டுக்கட்டையாக வந்துசேர்ந்து விட்டனவோ? ஒரு காலமும் இருக்காது!

அன்று வதிந்த மங்கையர் திலகங்கள் எல்லோரும், கருத்தொருமித்து தத்தம் தலைவர்களுடன் இல்லறம் இனிது நடத்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார்களாமே! நம் தலைவியும் அவர்கள் வழிவந்தவள்தானே...!

அவள் எதற்காக இப்படி அழுது அழுது, தன் குமுத விழிகளை கொவ்வைப் பழம் போல் சிவப்பாக்கிக் கொள்ளவேண்டும்? ஒருவேளை அவள் அன்பு அத்தான் அரசியல் ஆட்சிக்கு அடிபணிந்து பொருள் தேட வெளி நாடு சென்று விட்டானே?

### கண்ணீர்மழை

அவன் அழகன்; அரும்பு மீசை கொண்டவன். ஆர்த்தெழும் அடலேறு; கடமை வீரன். அவன் அரசனின் ஆணை பெற்ருன். அதற்கு பணிந்து கடமையை நிறைவேற்றுவதில் சித்தம் மகிழ்ந்தான். ஆனால், கடமைக்கு முன்னே காதல் குறுக்கிட்டது. அவளிடம் விடைபெற்றுச் சென்ருன். அவள் மறுத்தாள். "அன்பு அத்தான்! பிரிவுத் துன்பம் எத்துணை கொடுமையானது. யான் காலமெல்லாம் உங்களை நினைந்துஉருகுவதா? இதை என்னுல் பொறுக்க முடியாது" என்று கண்ணீர்மழை பொழிந்தாள் அவள்.

### ஏமாற்றம்

கடமை வீரன் காதலியின் கண்ணீரைக் கண்டு கலங்க முடியுமா? கடமைக்குப்பின்னர்தானே? "கண்ணே! கலங்காதே. இமைகள் இல்லாத கண்களா? விரைவில் கூடுவோம். சோலையிலே பாடுவோம். கலவி நடுப்பகுதியிலே ஆடுவோம்......" என்ருன். அவன் சென்ருன். அவள் அழுதாள். வழிமேல் விழிவைத்தாள் அவன் வரவை எதிர்பார்த்து. ஏமாந்தாள்.

### செவிலித் தாய்

செவிலித்தாய் வந்தாள். மகள் அழுகையைக் கண்டாள். வளர்த்த பாசம் கண்ணீர்க் காவியம் பாடிற்று. அவள் உள்ளம் ஏங்கிற்று. அவள் புலம்பினுள். இயற்றை அன்னையின் எழில் வதனங்காட்டும் வனப்பு மிக்க காட்சிகள் மலிந்து கிடக்கும் காலையில், அவள் ஏன் இப்படி துரும்பாக மெலிந்து காணப்படுகின்ருள்? என்று அவள் உள்ளம் எண்ணத் தொடங்கியது.

### வினயமான கருத்து

"மகளே! யான் உனக்கு யாது இடுக்கண் விளைவித்தேன்? உன்னைக் கொஞ்சும் மழலைப் பருவமிருந்து, மங்கைப்பருவம் எய்தும் வரையும் ஒரு தீங்கும் நிகழாமல் அன்போடு கட்டியணைத்து வளர்த்தேன். என் பாசத்தைக் கொட்டினேன். நீ எனக்கு நேசத்தை தந்தாய். அப்படியே இருக்கும் பொழுது நீயேன் இன்று கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிக்கின்ருய்? உன் மனதில் எழும் எண்ணந்தான் என்ன? ஒன்றையும் ஒளியாமல் என்னிடம் சொல்? நான் உன்னைக் கெஞ்சிக் கேட்கின்றேன்..." என்று அவள் வினவ, தேன் மொழியாள் தன் உட்கருத்தை "அன்னையே! கடல் வந்தேன் வண்டல் சிதைத்து" என்று வினயமாக வெளியிட்டாள். அதைக் கூறும் பாடல் இதோ:

கொண்கன் பிரிந்த,
குளிர்பூம் பொழில் நோக்கி
உண்கண் சிவப்ப
அழுதேன் ஒளிமுகம்
கண்டனனே எவ்வம்யா
தென்னக் கடல் வந்தேன்
வண்டல் சிதைத்த
தென் றேன்.

ஃ (ஐந்திணை ஐம்பது)

இத்தகைய நுண் கருத்துக்களை, புதுமை இலக்கியப் புலவர் மாற்றம் பொறையனுர் நமது காவியத் தலைவியின் வாயிலாக தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறைகின்ருர். அவர் மறைந்து அமரத்துவமடைந்துவிட்டார். என்ருலும் அவரது கருத்துப் பொதிந்த இதமான பாடல்கள் அகவாழ்விற்கு இறவாத இலக்கியங்களாக இன்றும் நின்று நிலவுகின்றன.

---

## நவீன 'ராக்கெட்'

தண்ணீருக்கு அடியில் செல்லும் 'ராக்கெட்டுகளை' தயாரிப்பதில், யு. எஸ். முன்னேறி வருவதாக, மாஜி-கப்பற்படைக் காரியதரிசி திரு. டான். ஆர். கெம்பல் இங்கு தெரிவித்துள்ளார்.

டார்பிடோவை விட இந்த ராக்கெட் வேகமாகச் செல்லுமாம். தற்போது இந்த ராக்கெட்டுகள் தயாரிக்கப்பட்டும் வருகின்றனவாம்.

அமெரிக்க ராக்கெட் சொஸைட்டி, அமெரிக்க மெக்கானிகல் என்ஜினியர் சொஸைட்டி, ஆகியவையின் கூட்டுக் கூட்டத்தில் பேசுகையில் திரு. கெம்பல் இதைத் தெரிவித்தார்.

---

## தீருமோ இலட்சியம்

—கா. சி. ஆனந்தன்—

மேளம் ஒலிக்குது!-
மேனி சிலிர்க்குது!
ஈழம் அதிருதடா!—தமிழ்
ஆளும் நிலைபெற
ஆவல் பெருகுது!
நாளும் உதிருதடா!

எட்டுத் திசையிலும்
எஃகுத் தமிழ் அணி
சட்டம் உடைப்பதிலே—அறம்
தொட்டு நடக்குது!
தொண்டு சிறக்குது!
கொட்டம் ஒடியுதடா!

வீட்டுக் கொருதமிழ்
வீரன் எழுந்தனன்!
காட்டிக் கொடுப்பவரை—உடன்
ஓட்டிக் கலைத்திட
ஒன்று திரண்டனர்!
ஆட்சி துடிக்குதடா!

கான மயில்தனைக்
கண்டவான் கோழியாய்
சேனை திரட்டுகிருர்!—இவர்
வான முகட்டினில்
வண்ணவி டொன்றினைக்
காணவி ரும்புகின்ருர்!

தூக்கு மரம்சிறை
தோட்டாத் துவக்குகள்
ஊக்கம் குறைத்திடுமோ?—எமைத்
தீக்குள் நிறுத்தினும்
தீருமோ (இ)லட்சியம்?
மாக்கள் அரசிதடா!

தொண்டர் இவர்உயிர்
தூசாய் மதித்தவர்
குண்டருக் கஞ்சுவரோ?—அட
அண்டுது ஆவணி
ஆத்ம பலத்தினைச்
சண்டியர் மிஞ்சுவதோ?

---

## தமிழ்
## சிரேஷ்ட பரீட்சை

கடந்த பரீட்சையின் வினு விடைகள்:

| | |
|---|---|
| தமிழ் மொழி | ரூ. 3-00 |
| சைவ சமயம் | ரூ. 3-00 |
| ஆங்கிலம் | ரூ. 3-00 |
| எண் கணிதம் | ரூ. 3-00 |
| ஆங்கிலக் கட்டுரைகள் | ரூ. 3-00 |
| தமிழ்க் கட்டுரைகள் | ரூ. 3-00 |

ஆங்கிலப் பரீட்சைக்கு வினு-விடைகள், குறிப்புகள் எல்லாப் பாடங்களிலும் கிடைக்கும்.

★ ஆங்கிலம்

★ ஹிந்தி

பேச, வாசிக்க, எழுத தபாலில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

சாந்தி கல்லூரி,
தபால் பெட்டி: 1398,
கொழும்பு.

---

## வாடிக்கைக்காரர்களுக்கோர் அறிவித்தல்

7-4-57 முதல் எங்கள் டெலிபோன் இலக்கம் 281 என மாற்றப்பட்டுள்ள தென்பதை அறியத் தருகிருேம்.

சிறந்த வேலைப்பாடும், உத்தரவாதமுமுள்ள அழகிய பவுண், வைர ஆபரணங்களுக்கு எந்நேரமும் எங்களிடம் விஜயஞ் செய்யுங்கள். அழகை அழகு செய்ய, அருள் பெருக, அன்பு வளர, அழைக்கிருேம்.

எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்,

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்.

---

## ஏஜண்டுகள் தேவை

கீழ் காணும் இடங்களில் சுதந்திரன் விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை. மனுச் செய்யவும்.

பத்திரிகை. புத்தக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் மனுக்கள் விசேஷமாகக் கவனிக்கப்படும்.

தம்பலகாமம்
எட்டியாந்தோட்டை
லங்காவெவ
கம்பகா
கிரியுல்ல
களுத்துறை
வப்பந்துறை
நீர்வேலி
காங்கேசன்துறை
எந்ருேம் பிற்றியா
ஹொரணை

சேர்குலேசன் மானேஜர்,
"சுதந்திரன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம், பரிதாபத்துக்குரிய பண்டாரநாயக்கா!

## இலங்கைத் தமிழர்களை இலேசுப்பட்டவர்களென்று நினைக்கிருர்

## அவர்களின் கண்ணீரைத் துடைக்க இந்தியத் தமிழர்கள் தயங்க மாட்டார்கள்

## எங்கு வாழ்ந்தாலும் தமிழன் தமிழன்தான் கடலும் மலையும் தடுத்துவிடுமா?-பார்ப்போம்

### தனிச் சிங்களச் சட்டத்தையும் குடியேற்றத்தையும் நிறுத்த வேண்டும்; கோரிக்கைகளின் அடிப்படையை ஆராய வேண்டும்; நாம்வேறு தமிழரசுக்கட்சி வேறல்ல

### இந்தியப் பத்திரிகைகளின் காட்டமான தலையங்கங்கள்

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் இன்றைய நிர்க்கதியான நிலைபற்றியும் பண்டாரநாயகாவின் இன மொழி வெறி வழிப்பட்ட எதேச்சாதிகார ஓரவஞ்சக ஆட்சி பற்றியும் உலகிலுள்ள பத்திரிகைகள் யாவும் எழுதிவருகின்றன. குறிப்பாகத் தென்ஞட்டிலிருந்து வெளிவரும் பிரபல தமிழ் ஆங்கில தினசரி வார ஏடுகளெல்லாம் இடையருது தலையங்கங்கள் தீட்டி இன்னல்பட்டு வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு ஆறுதலும் அரசாங்கத்துக்கு அறிவுரையும் நல்கி வருகின்றன.

பிரஸ்தாப தலையங்கங்கள் சிலவற்றின் பகுதிகளை இங்கு தருகிறேம். இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துக்கு விடுத்திருக்கும் கோரிக்கைகள் நான்கும் எப்படிப்பட்டவை— என்ன நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதும் அரசாங்கம் மேற்படி கோரிக்கைகள் நியாயமற்றவை என்று சொல்லி அவற்றைக்கவனிக்கமறுத்து வருவதும் தெரிந்ததே. இது பற்றி தென்ஞட்டு தி. மு. க. வின் தின இதழான நம் நாடு 10—6—57 தலையங்கத்தில் பின்வருமாறு கூறுகிறது:

### நம் நாடு

"தமிழரசுக் கட்சியினரின் 4 கோரிக்கைகளில் அடங்கிக் கிடக்கும் நியாய அநியாயங்களை ஆராய்ச்சி செய்வதற்கு முற்படுகிற பெரிய மனிதர்களும் பரந்த மனம் படைத்தவர்களும் முதலில் செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு இந்தக் கோரிக்கைகள் எழுவதற்குக் காரணமாக இருக்கும் அச்சம் தமிழ் மக்கள் உள்ளத்தில் ஊட்டப்பட்டது. பண்டாரநாயகாக்களின் முழுக்க முழுக்க சிங்கள வெறி கொண்ட நடவடிக்கைகள்தான் என்பது உண்மையா அல்லவா என்று கண்டறிவதுதான் அந்தக் காரியம்.

"பண்டாரநாயகாவும் அவர் தலைமை தாங்கி நடத்தும் சர்க்காரும் மிக மிக மட்டரகமான-ஆனல் மிதமிஞ்சிய சிங்கள இன, மொழி வெறியுணர்ச்சியினுல் வழி நடத்திச் செல்லப்படுகிறுர்கள் என்பதற்குச் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டத்தைத் தவிர வேறு சான்றும் வேண்டுமா?

"தங்கள் ஆதிக்கத்தில்சிக்கிவிட்ட சிறுபான்மை இனம் ஒன்றை தங்களுக்கு இருக்கும் அசுர பலத்தால் மிருகவெறியோடு அழித்துப் பூண்டற்றுப் போகச் செய்ய பண்டாரநாயகாக்களுக்கு ஆட்சியை தேடித் தந்திருக்கும் சிங்கள வெறியர்களின் மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கு ஆளாகிவிட்ட தமிழ் மக்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற இயற்கையான அச்சத்தால், பாதுகாப்பு உணர்ச்சியால் எழுப்பும் கோரிக்கைகளை அநியாயம் என்று கூறுவதற்கு முன், அவர்கள் கோரிக்கைகளை எழுப்பிவைத்திருக்கும் அடிப்படையை, நியாயவான்கள் சற்று கவனித்துத்தான் ஆகவேண்டும்."

தமிழரசுக் கட்சியினரின் நான்கு கோரிக்கைகளையும் நியாயமற்றவை என்று வர்ணிப்பது மட்டுமல்லாமல் பிரதமர் பண்டாரநாயகா அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் வேண்டுமானுல் வட்டமேசை மகாநாடு கூடி ஏதாவது சலுகைகள் அளிக்கலாமா என்று யோசிக்கலாமென்றும் கூறியிருக்கிறுரல்லவா? இதுபற்றி தமிழ் நாட்டின் பிரபல காங்கிரஸ் வார ஏடான 'ஆனந்த விகடன்' 16-6-57 உப தலையங்கத்தில் என்ன சொல்கிறது என்பதைப் படித்துப் பாருங்கள், கீழே தருகிறேம்.

### ஆனந்தவிகடன்

"இப்போதுதான் இலங்கைசர்க்காரும் நெருக்கடியைப்பற்றி யோசிக்க ஆரம்பித்திருக்கிறது. "இந்த (தமிழரசுக் கட்சியின்) நான்கு கோரிக்கைகளையும் ஏற்க முடியாது. ஆனல் சில சலுகைகளைப்பற்றிக் கவனிக்கத் தயாராக இருக்கிறேம். அதற்கு ஒரு வட்டமேஜை கூட்டலாம். ஆனுல் கிளர்ச்சியை அனுமதிக்க முடியாது" என்று இலங்கைப் பிரதமர் சொல்லியிருக்கிருர்.

ஆனல் தமிழர்களுக்கு இம்மாதிரி வட்டமேஜையிலோ, சலுகைகளிலோ நம்பிக்கை ஏற்படவில்லை. தமிழர்கள் அங்கு பூரண உரிமையுடன் வாழமுடியாது, படிப்படியாக அவர்களை ஒழிப்பதே சர்க்காரின் நோக்கம் என்ற அவநம்பிக்கையை தனிச் சிங்கள மொழிச் சட்டம் ஏற்படுத்திவிட்டது.

"ஆகவேஇலங்கை சர்க்கார் உண்மை சமரசத்தை விரும்பினுல் தமிழர்கள் சந்தேகத்தைப் போக்கும் முறையில் முதலில் தனிச் சிங்களச் சட்டத்தை நிறுத்திவைக்கவேண்டும். தமிழ்ப் பகுதியில் சிங்களவரைக் குடியேற்றும் திட்டங்களையும் நிறுத்திவைக்க வேண்டும். இந்த சமிக்ஞையைக் காட்டாததவரையில், தமிழர்கள் வட்டமேஜை மகாநாட்டைப்பற்றி அதிக நம்பிக்கை கொள்ள முடியாது."

நாட்டிலே இப்போது தலைதூக்கியுள்ளது மொழிச் சிக்கலே தவிர வேறெதுவுமில்லையென்றும் தமிழரசுக் கட்சியினர் தமது சொந்த நலனை முன்னிட்டு மொழி சம்பந்தப்படாத வேறு மூன்று கோரிக்கைகளையும் சேர்த்துக் கொண்டுள்ளார்கள் என்று தமிழருக்குள்ளே உள்ள ஐந்தாம் படையினர் சிலர் கூறி வருகிருர்கள். அதைக் கேட்கப் பண்டாரநாயக்காவைத் தவிர வேறு யாருமில்லை. இன்னும் சிலர் மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜாவுரிமை சம்பந்தமாக தமிழரசுக் கட்சியினர் ஏன் விடாப்பிடியாக நிற்கவேண்டும்? இவர்களுக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? என்றமாதிரியும் தெரிந்தோ தெரியாமலோ பேசுகிருர்கள். இதை பண்டாரநாயகாவும் இப்போது எடுத்துச் சொல்லி வருகிருர். இவரின் இந்த வாதத்துக்கு சென்னையிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலத் தினசரியான இந்து பத்திரிகை 8-6-57 தலையங்கத்தின் வாயிலாகச் சாட்டை கொடுக்கிறது. இதோ அந்தப் பகுதியின் தமிழாக்கம்:

### இந்து பத்திரிகை

"தமிழரசுக் கட்சியினரின் நாலுகோரிக்கைகளில் ஒன்ருன 'இலங்கை வாழ் சகல இந்திய வம்சாவழியினருக்கும் இலங்கை அரசாங்கம் பிரஜா உரிமை வழங்கவேண்டும்' என்பதை மொழிப் பிரச்னையோடு கலப்பது நல்லதல்ல. பிரஸ்தாப கோரிக்கையை மொழிப் பிரச்னையோடு கலக்கக் கூடாது என்று நாம்சொல்வதால் இலங்கை வாழ் இந்திய வம்சா வழியினருக்குப் பிரஜா உரிமை அளிக்கப்படுவதை நாம் எதிர்ப்பவர்கள் என்று அர்த்தமில்லை.

"இந்த விஷயத்தில் நாம் வேறு, தமிழரசுக் கட்சி வேறல்ல இருவரும் ஒரே கருத்து உடையவர்களாயிருக்கிறேம். இலங்கைப் பிரஜைகளாக விரும்பும் எல்லா இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினருக்கும் பிரஜா உரிமை வழங்க வேண்டுமென்று தமிழரசுக் கட்சியோடு சேர்ந்து நாமும் குரலெழுப்புகிறேம்."

பண்டாரநாயகா வாயளவில் எதைத்தான் சொல்லி வந்தாலும் தமிழ் பேசும் மக்கள் ஆகஸ்டில் நடத்தப் போகும் போராட்டம்பற்றிக் கலக்கமடையாமலில்லை. அதை அடக்கி ஒடுக்கிவிட நாளொரு திட்டமும் நிமிஷமொரு சட்டமுமாகப் படைத்துக் குவிக்கிருர். சட்ட வரம்பையும் மீறி வெறியர்களையும் காடையர்களையும் கொண்ட குண்டர் படை ஒன்றையும் திரட்டி வருகிருர்.

இதெல்லாம் இருந்தும், இப்போதுள்ள நிலையில் தாய்த் தமிழகத்தில் இருக்கும் தமிழர்கள் அதிலும் குறிப்பாக தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள் இங்குள்ளவர்களுக்கு ஆகஸ்டில் ஆதரவு கொடுத்துவிட்டால் என்ன ஆகுமோ என்ற கவலையில் அவர்செய்தது என்ன என்பதையும் அவரது நிலை [illegible] நினைப்பு எவ்வளவு தப்பானது என்பதையும் அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் தி. மு. கவின் அதிகாரபூர்வமான "ஹோம்லண்ட்" என்ற ஆங்கில வார இதழ் 9-6-57 தலையங்கத்தின் ஒரு பகுதி அப்பட்டமாகத் தெரிவிக்கிறது. அப்பகுதியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறேம்:

### ஹோம்லன்ட்

திரு பண்டாரநாயகாவும் வளரும் (நமது) இயக்கத்தைக் கண்டு உணர்வுபெறுவதாகத் தெரிகிறது. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தமது ஆகஸ்ட் போராட்டத்துக்கான முஸ்திபுகளைத் தீவிரமாகச் செய்து வருகிருர்கள். இதன் காரணமாக இலங்கை மண்ணில் தி. மு. க. தலைவர்கள் யாரும் காலடிவைக்கக் கூடாது என்று அவர் உலகறியச் சொல்லிவைத்திருக்கிருர். பாவம், பரிதாபத்துக்குரிய பண்டாரநாயகா! ஆகஸ்ட் போராட்டத்தை நடத்த அங்கு (இலங்கையில்) உள்ள தமிழ் பேசும் மக்கள் சக்தியற்றவர்கள் என்று அவர் நினைக்கிருர்."

"ஹோம்லன்ட்" (Homeland) தி. மு. க. ஆங்கில வார ஏட்டுத் தலையங்கத்தின் பிரஸ்தாப பகுதியை அப்படியே ஆங்கிலத்திலும் தருகிறேம்:

Mr. Bandaranayake too seems to be mighty conscious of the growing force — for the Ceylon Government announces to the world that D. M. K. leaders are not to be allowed to set foot on the soil of Ceylon — in view of the fact that the Tamilans there are mustering their strength for their August struggle! Poor Mr. Bandaranayake! He thinks fondly ofcourse that the Tamilians there have not got strength enough to carry on the August struggle!

சென்னையிலிருந்து வெளிவரும் தமிழரசுக் கழக வாரப்பத்திரிகையான செங்கோல் 9-6-57 தலையங்கத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு கடுமையான எச்சரிக்கை விட்டிருக்கிறது. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் கண்ணீரைத் துடைக்க இந்தியத் தமிழர்கள் தயங்க மாட்டார்கள் என்பதை அது ஒளிவு மறைவின்றித் தெரிவிக்கிறது.

அத்தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

### செங்கோல்

பரந்து கிடக்கும் இந்த உலகத்தில், தமிழ் பேசும் மக்கள் நீதியற்ற முறையிலும் நியாயத்துக்கு விரோதமாகவும், யாரால்—எங்கு அடக்கப்பட்டாலும் அவர்களிடம் அனுதாபம் காட்ட இந்தி

(13-ம் பக்கம் பார்க்க)


நோத் சிலோன் றேடிங் கம்பனி லிமிற்றெட்,
ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.


விநியோகஸ்தர்கள்:
மோட்டார் வாகனங்கள்
இரும்பு கட்டிடச் சாமான்கள்
மின்சார - மோட்டார் - உப உறுப்புக்கள்

மலிந்த மாளிகை! சிறந்த சேவை!

போன்: 587. தந்தி: "யாழ்றேட்ஸ்".



யப்பான் ஜுவல்லர்ஸ்
இரத்தின நகை வியாபாரிகள்



★ யப்பான் ஸ்பெஷல் "இரங்கூன் வைரங்கள்"
★ யப்பான் ஸ்பெஷல் "பெல்ஜியம் வைரங்கள்"
★ கல்ச்சேட் (Cultured) முத்துக்கள்
★ நம்பகமான பொத்தான் (Button) வடிவ முத்துக்கள்

உலகிலுள்ள பிரசித்தி பெற்ற இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, எவரும் மன மகிழ்வுடன் வாங்கக்கூடிய குறைந்த விலையில் இலகுவில் பெற்றுக் கொள்ள வசதியளிக்கப்பட்டுள்ளது.

YAPPAN JEWELLERS,
163, NEW CHETTY St., COLOMBO-13. T' Phone: 5489.
64, KANNADHIDDY Rd., JAFFNA. T' Phone: 518.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாரத நாட்டுச் சுற்றுப் பிரயாணம் : 2

சென்ற வாரத் தொடர்ச்சி

# ஐயகோ, வரிப் பிசாசு!

---:0:---

# ஆறு சோடிக் கண்கள் தேடியும் நாடிய காட்சியைக் காணவில்லை

---:0:---

## சேதுபதிகளுக்கு ஒரு கும்பிடு

(நாவற்குழியூர் நடராசன்)

புண்ணிய பூமி என்று பலராலும் போற்றப்பட்ட பாரத நாட்டிலே கால்வைக்கிறோம் என்று எண்ணும் பொழுது, உச்சி தொடக்கம் உள்ளங்கால்வரை குளிர்ந்தது. ஆனால் அந்தக் குளிர் அதிக நேரம் நீடிக்கவில்லை. தரையில் கால் வைத்த இடத்திலிருந்து கொதிக்கும் கும்பி மணலுக்கூடாகப் பாய்ந்து பாய்ந்து சென்று புகை வண்டி வந்து நிற்கும் இடத்தை அடைவதற்குள் பாவிகளுக்கு யமலோகத்திற் கிடைக்கும் தண்டனைகள் பற்றிய கெருட புராணக் கதைகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக ஞாபகத்துக்கு வந்தன.

### வரிப் பிசாசு

அவ்வளவும் போதாதென்று, சுங்கப் பகுதிப் பரிசோதகர்கள் செய்யும் 'தகடுதத்தங்கள்' வேறு. நமது தேசத்தில் நம்மவர்கள்தான் எம்மைப் பிய்த்துப் பிடுங்குகிறார்கள் என்றால், நாம் வேறு தேசம் செல்லும்போது--அத் தேசத்தவரின் விருந்தினராகவே செல்லும்போதுகூட அந்தச் சுங்க அதிகாரிகள் எம்மைச் சும்மா விட்டுவிடுகிறார்களா? நமது உள்ளாந்தரங்களையெல்லாம் ஊடுருவிப் பார்த்து வரி போட்டுப் பறிமுதல் செய்து அப்பாற் செல்ல விடுவார்கள். பெண்களையெல்லாம் ஒவ்வொருவராக ஓர் அறையில் விட்டு ஒரு பெண் பரிசோதகர் ஏதோ விசித்திரமான ஒரு பரிசோதனையை நடத்துகிறார். ஒருவேளை சேலைக்குள் வரி போடத்தக்க தனங்கள் ஏதும் இருக்கின்றனவா என்று பார்க்கிறார்கள் போலும்! இந்த வரிப்பிசாசு மனிதனை—இல்லை மனுஷிகளை—எவ்வளவு கேவலமான நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது என்பதை அப்பொழுதுதான் நான் கண்டேன். எம்முடன் கூட வந்த பெண்களை அந்த விதமான இழிந்த பரிசோதனைக்கெல்லாம் விடக்கூடாது என்றார் ஒருவர்.

### தொல்லை தவிர்க்க தந்திரம்

அப்படியானால் இவ்வளவிலேயே நாம் இலங்கைக்குத் திரும்ப வேண்டியதுதான் என்றார் இன்னொரு நண்பர். பரிசோதனைக்குப் பயந்தால் பாரத நாட்டைப் பார்ப்பது எப்படி என்பது அவர் கட்சி.

அதிலே எவ்வளவோ உண்மை இருக்கவே இருக்கிறது என்பதைப் பின்னர் ஒத்துக்கொண்டாலும், அந்த இக்கட்டான நிலைமையிலிருந்து தப்பிக்கொள்வதற்காக ஒரு தந்திரம் செய்யலாமா என்று மற்றொரு நண்பருக்குத் தோன்றிற்று.

பெண்களைப் பரிசோதிக்கும் அந்தப் பெண் பரிசோதகர் தான் உண்மையிலே ஒரு பெண்தான் என்பதை முதலில் எமக்கு நிரூபிக்க வேண்டும் என்று கேட்போம் என்றார் அவர்.

அப்படியானால், நாங்கள் ஆண்கள் வேஷத்தில் வருகின்ற பெண்களல்லர் என்பதை நிரூபிக்கும்படி அவர்கள் கேட்டால் என்ன செய்வது என்ற பிரச்னை எழுந்தது.

### விதியின் விளையாட்டு

இப்படியாக நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே எமக்கும் தெரியாமல் எமது பெட்டிகள் எல்லாம் சுழியோடிச் சென்று சுங்க அதிகாரிகளுக்கூடாகப் போய்ப் புகை வண்டியில் ஏறிக்கொண்டன. அந்த வேலையைக் கவனிப்பதற்கென்றே அனுபவசாலியான ஒருவரை நியமித்திருந்தோம். 'பழமுகத்திலும் அறிமுகம் பெரிது' என்ற ஆன்றோர் வாக்கிலே எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதை அப்பொழுது தெரிந்துகொண்டேன். பெட்டிகளைப் பின்தொடர்ந்து நாமும் புகை வண்டியிற் போய் ஏறிக்கொண்டோம். எம்முடன் வந்த பெண்களும் அந்தப் பெண் பரிசோதகருக்கு ஒரு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு முன்னரே சென்று வண்டியில் ஏறிக்கொண்டார்கள். அது எப்படி முடிந்தது என்று கேட்கிறீர்கள்? எல்லாம் விதியின் விளையாட்டுத்தான். விதிகளுக்கு விளையாட்டுவிடுவதுபற்றி நான் ஏற்கனவே சொல்லி வைத்த கருத்து இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கவிதையாகக் கருக்கொண்டெழுந்தது:

> விதியைப் படைத்த
> 'தெய்வம்'-அதற்கொரு
> விலக்கையும் வைத்த தடீ!
> சொதியைப் பழித்த
> சொல்லாய்-எதற்குமோர்
> சூட்சுமம் உண்டு லகில்

என்று எனக்குள்ளேயே பாடிக்கொண்டு பரவசப்பட்டு இருந்துவிட்டேன். அந்தப் பரவசத்தில், பக்கத்தில் நின்று பிராணனை வாங்கிக்கொண்டிருந்த பிச்சைக்காரக் கூட்டத்தின் கூப்பாட்டைக்கூட நான் காதிற் போடவில்லை என்றால் அதை நீங்கள் நம்ப முடியாதுதான்.

### பிச்சைக்காரர் அங்கும் – இங்கும்

மரமோ தடியோ குடியோ இல்லாத அந்த இடத்திலேகூட அவர்கள் எங்கிருந்தோ வந்து சேர்ந்துவிடுகிறார்கள். பிச்சைக்காரர்கள் எங்கள் நாட்டிலும் இல்லாமலில்லைத்தான்; ஆனால் எங்கள் தேசத்துப் பிச்சைக்காரர்களுக்கும் அத்தேசத்துப் பிச்சைக்காரர்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. இவர்கள் இரண்டுதரம் கூப்பாடு போடுவார்கள்; அதற்கிடையில் ஏதாவது கிடைத்தால் சரி இல்லாவிட்டால் இன்னொரு இடத்தைப் பார்ப்பார்கள். அவர்கள் குறைந்தது இருநூறுதரமாவது கூப்பாடு போட்டுப்பார்த்து ஏதாவது கிடைக்கும்வரை அந்த இடத்தை விட்டு நகரவே மாட்டார்கள். அந்த வகையில் அவர்கள் இவர்களைவிட எவ்வளவோ பொறுமைசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

### "என்ன கறுமம்"

வற்றாத ஜீவநதிகள் வளைந்தோடும் அந்த வளம் மிக்க நாட்டின் முதற் காட்சியே வற்றிய நீரும் வறண்ட நிலமுமாக இருந்தது. கடலின் அருகே குழி தோண்டிக் குடி தண்ணீரைப் பெறுவதற்குச் சிலர் முயற்சி செய்துகொண்டிருந்ததைப் பார்த்தபோது 'என்ன கறுமமடா' என்று என்னை அறியாமலே வாய் விட்டுச்சொல்லி விட்டேன். புகைவண்டி நகர்ந்தது. போகப் போகக் காட்சி மாறும் என்ற அங்கலாய்ப்பில் அப்புறமும் இப்புறமுமாக ஆறு சோடி கண்களை அலைய விட்டுப்பார்த்தோம். ஒருவகையான முள் மரங்கள்தான் எங்கும் செழித்து வளர்ந்திருந்தன. அவற்றிற்கிடையே அரைக் கட்டை தூரத்துக்கொரு கோயிலாகச் சிதைந்துபோய்க்கிடக்கும் எத்தனையோ கட்டடங்களைக் கண்டோம். முன்னொரு காலத்திலாவது அந்தப் பிரதேசம் சீர் சிறப்புடன் செழித்தோங்கியிருக்க வேண்டும் என்பதை அந்த அழிந்துகிடக்கின்ற கோயிற் கட்டடங்களின் அமைப்பு ஒன்றே சொல்லிக்கொண்டிருக்கின்றது.

### மோட்டார் வண்டி இல்லை

இராமேஸ்வரம்: சில நிமிஷங்களுக்கு முன்னர்தான் புறப்பட்ட புகைவண்டி, இராமேஸ்வரம் 'ஜங்ஷன்' என்ற நிலையத்தில் வந்து நின்றது. இவ்வளவு விரைவாக இராமேஸ்வரத்துக்கு வந்துவிட்டோமே என்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தோம் வண்டியிலிருந்து 'பிளாட் பாரத்தில்'. அங்கிருந்து மற்றொரு வண்டி ஏறி சில நிமிஷங்களில்இராமேஸ்வரம் என்ற புகைவண்டி நிலையத்தை அடைந்தோம். அந்த இடத்திலிருந்து இராமேஸ்வர ஸ்தலத்துக்கு ஏறக்குறைய ஒரு கட்டை தூரம் செல்ல வேண்டுமென்று அறிந்தோம். அங்கெல்லாம் எந்தவிதமான மோட்டார் வாகனங்களையும் காணமுடியாதது அந்த ஊருக்கே ஒரு தனிச் சிறப்பு. மோட்டார் வண்டிகளின் இரைச்சலிலே மூழ்கித்திணறும் எமக்குஅது ஒரு பெரிய ஆறுதலை அளித்தது. ஆனாலும், அந்த இடத்திலிருந்து கோயிலுக்கு எப்படிச் செல்வது என்று நாம் கவலைப்படுவதற்கே இடம் வைக்கவில்லை அந்த ஊரவர்கள். ஏனென்றால் அதற்கு அங்கு ஒரேயொரு சாதனந்தான்உண்டு; அதுவும் போதும் போதும் என்று சொல்லத்தக்க அளவுக்கு இருக்கின்றன, சிறு குதிரைகள் இழுக்கும்கூடாரமிட்ட திருக்கல் வண்டிகள் போன்ற 'ஜட்கா' வண்டிகள். அந்த 'ஜட்கா' ஒன்றிலே ஏறி 'ஜம்'மென்றிருந்து 'ஜரூராய்'ச் சென்று கோயிலை அடைந்தோம்.

### உள்ளே கண்ட காட்சி

கப்பலிலிருந்தே கண்ட அந்தக் கோபுரத்தை அதன் அடியில் நின்று அண்ணாந்து பார்த்தோம்; தொண்ணூறு கண்கள் கொண்டு பார்த்தாலும் அதன் அழகைக் கிரகித்துக் கொள்ள முடியாது. நாலு புறத்திலும் பெரும் பெரும் கோபுரங்களைக் கொண்ட அந்த விஸ்தீரமான கோயிலின் நீண்ட உள்வீதிகளின் அலங்கார அமைப்பே ஒரு தனி. உள்வீதியின் ஒருபுறத் தொங்கலில் நின்று பார்த்தால் அதன் மறுபுறத் தொங்கல்வரை காணும் அற்புத சிற்ப சித்திர வேலைப்பாடமைந்த காட்சியை வேறு எங்கும் காணமுடியாது. நாங்கள் அங்கு சென்றிருந்த சமையம் வடநாட்டிலிருந்து ஒரு கூட்டம் ராமபக்தர்கள் இராமேஸ்வரப் பெருமானைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார்கள். அவர்கள் அக்கோயிலினுள்ளே இருக்கும் கேணியில் நீராடிவிட்டு ஈர உடைகளுடன் இராமேஸ்வரரை வணங்கிக் கொண்டிருந்த காட்சி எம் உள்ளத்தை உருக்கியதுமட்டுமின்றி, இன்னமும் இந்த உலகில் உண்மையான பக்தர்கள் இருக்கவே இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையும் எமக்களித்தது.

### சேதுபதிகளுக்கு ஒரு கும்பிடு

இராமேஸ்வர ஸ்தலத்தின் உட்புறத்தைப் பார்த்துவிட்டு, அதன் வெளியேயும் சுற்றிப் பார்த்தபொழுது, இராமேஸ்வரப் பெருமான் அந்த ஊரில் உள்ள அத்தனை பேருக்கும் அபயமளித்து வருகிறார் என்பது நன்கு தெரிந்தது. ஏன் அப்படிச் சொல்கிறேனென்றால், அந்த ஊரிலுள்ளவர்கள் அத்தனை பேரும் இராமேஸ்வர ஸ்தலத்தை அண்டிப் பிழைக்கிறார்கள் என்று நாம் காணக்கூடியதாக இருந்தது. விவசாயமோ வேறெந்தத் தொழிலோ செய்வதற்கு வாய்ப்பற்ற அந்தஇடத்தில், அவர்கள் பிழைப்பதற்கு அந்தப் பிரமாண்டமான கோயிலையாவது கட்டி வைத்தார்களே சேதுபதிகள் என்று அந்தக் காலத்தில் அப்பிரதேசத்தை அரசாண்ட சேதுபதிகளுக்கு ஒரு கும்பிடு போட்டேன். ஆம், அந்தச் சேதுபதிகளையெல்லாம்நாம் அவ்விதம் வணங்குவதற்கு வசதியாக அக்கோயிலின் உட்புற மண்டபமொன்றிலே அழகான சிலைகளாகவும் சித்திரங்களாகவும் செய்துவைத்திருக்கிறார்கள்.

### ஊரார் தொழில்

கோயிலுக்கு வரும் பக்தர்கள் அங்குள்ள சுருவப் பொருளைக் கொள் முதல் செய்யத் தெரிந்து கொள்ளாவிட்டால், உருவப் பொருட்களையாவதுகொள்முதல் செய்துகொண்டு போகட்டுமே என்று, எத்தனையோ வகையான லிங்கங்களும் இறைவன் வடிவங்களும் விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள், கோயிலின் உள்ளேயும் வெளியேயும். கடற்கரையின் அயலே உள்ள ஸ்தலமாகையால், கடற் சிப்பிகளும் சங்குகளும், கற்களும் வகை வகையான வர்ணங்களிலும் உருவங்களிலும் அங்கு, வைத்திருக்கிறார்கள் வியாபாரத்துக்காக. வழிகாட்டிகள், 'ஜட்கா வாலாக்கள்', வறியவர்கள், வயோதிபர்கள் என்ற ரீதிகளில் பிழைப்பவர்களும் பலர். சுருக்கமாகச் சொன்னால், இராமேஸ்வர ஸ்தலத்தோடு ஒருவகையிலாவது சம்பந்தமில்லாத தொழில் செய்பவர்களை நாம் அங்கு காணமுடியாது.

## திருவள்ளுவர் தின விழா

மாத்தளை கந்தசாமி வித்தியாசாலை மண்டபத்தில் சென்ற 11-6-57ல் தமிழ் மறைத் தொண்டர் முன்னணியின் மாத்தளை உறுப்பினரின் ஆதரவில் திரு. ஆ. வ. செல்வத்துரை தலைமையின் கீழ் திருவள்ளுவர் தின விழா ஆரம்பமாயது.

உயர்திரு சச்சிதானந்த யோகீஸ்வரர் "குறளில் தவம்" என்ற பொருள் பற்றியும், செல்வி ரூபராணி யோசப் "வள்ளுவரும் நாமும்" என்ற விடயம் பற்றியும் கலாநிதி சு. வித்தியானந்தன் "இன்றைய சூழ்நிலையில் திருக்குறள்" என்ற பொருள் பற்றியும், திரு. தனங்கிய ராஜசிங்கம் "வள்ளுவன் குறள்" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

திருமதி குழந்தைவேலும் செல்வன் முத்துக்குமாரசுவாமியும் இன்னிசை விருந்தளித்தார்கள்.


சி. வி. பாட்

(C. V. BHATT)

218, 226, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

SHELL BRAND

ஷெல் மார்க் சுத்தமான இங்கிலீஸ் அலுமினியம்

சுத்தமான இங்கிலீஸ் அலுமினியத்தில் உன்னத தயாரிப்பு — ஒருக்காலும் கறுக்காது. நீண்ட காலம் பாவனைக்கு உத்தரவாதமானது. எப்பொழுதும் சுத்தமான ஷெல் மார்க் இங்கிலீஸ் அலுமினிய பாத்திரங்களையே சி. வி. பாட்டிடம் கேட்டு வாங்குங்கள்.

எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

HEAD OFFICE:-

45, Dam Street, COLOMBO.

Phone: 3732.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட் போராட்டத்துக்கு:

# 'வாய்ப் பந்தற்காரர்' கூறும் மாற்று வழி!

## ஏற்றதானுல் அவர்கள் சாதனையில் இறங்காமலிருப்பது ஏன்?

## கூடிப் பேசி முடிவு காண்போம் என்ற அசட்டு நம்பிக்கையில் காலம் தாழ்த்தினுல் நிலைமை படுமோச மடைந்து விடும்

### ஆவணியில் அறப்போர் நடத்தியே தீரவேண்டும்

"சமரசம் பேசிப்பார்ப்பதினுல் தலை முழுகி விடாது" என்று ஆகஸ்ட் போராட்டத்தைத் தவிர்ப்பதற்கு ஆலோசனை கூறுபவர்கள் சிலர் வழி சொல்லுகிருர்கள். சமஷ்டியார் நடத்த இருக்கும் ஆகஸ்ட் போராட்டத்தின் விளைவுகள் பயங்கரமானதாயிருக்குமென்பது உண்மையே. எனினும் அதற்குப் பொறுப்பாளிகள் சமஷ்டிவாதிகளாக இருக்கமாட்டார்கள். போராட்டத்தைச் சாட்டாகக் கொண்டு, வயிறுவளர்க்க வழியற்று அலைந்து லைந்து வீண் காலம் போக்கும் காடையர் கூட்டமே குழப்பத்திற்கு காலாகவிருக்கும். அதைத்தான் அரசாங்கம் அடக்க வேண்டும். அதை அடக்க அரசாங்கத்தால் முடியாவிட்டால் அதற்கு யார் பொறுப்பு?

#### நன்மையே செய்வர்

சமஷ்டிவாதிகள் தங்களைப் பின்பற்றும் மக்களின் மகத்தான பொறுப்பை உணராமல் வீம்புக்காகவும், வேடிக்கைக்காகவும், புகழுக்காகவும் அவர்களைப் பயங்கரப் படுகுழியில் வீழ்த்தி மனத் திருப்தியடைவார்களென்று எண்ணமுடியாது.

தமிழ்ப்பகுதிகளில் தகுந்த வாக்குகள் பெற்று வெற்றி பெற்ற தமிழரசு கட்சியார், தமிழினத்தின் நலன் கருதி சிங்களக் கட்சியாரின் வகுப்புவாதச் செயல்களை பல விதங்களிலும் தடுத்தார்கள். அதற்காகக் காலிமுகத் துறைமுகத்தில் தங்கள் இரத்தத்தையே இறைத்தார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களின் மக்களுக்கேற்படும் தீமையை ஒரு போதும் விரும்பமாட்டார்கள். மக்களுக்கு இதனுல் தீமையுண்டென்ற எண்ணம் ஏற்படுமானுல் வேறு பலர் செய்வது போல் தூண்டி விட்டுத் தாங்கள் பதுங்கிவிடுவர். ஆனுல் இங்கே கட்சித் தலைவர்களே முன் நின்று எதையும் சாதித்து வருகின்றனர்.

தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்களிலிருந்து விடுதலையடைவதற்குத் தமிழரசு கட்சி தோன்றியிராவிட்டால் வாய்ப்பந்தலும், ஏட்டுச் சுரக்காய்களும் தமிழினத்தைத் தலைகுனிய வைத்திருக்கும்.

#### காலம் கடத்துவது ஆபத்து

கண்ணன் தூது பற்றியும், சமரசப் பேச்சு பற்றியும், வட்ட மேசைக் கூட்டம் பற்றியும் இன்று பேசப்பட்டாலும் இவைகள் பல விதங்களிலும் நடந்து முடிந்தவைகளே. ஆனுல் மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாவென்ற முறையில் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றி மின் வேகத்தில் காரியமாற்றுகின்றனர். அரசியலார் சிங்களக் குடியேற்றம் தீவிரமாக நடைபெறுகின்றது. தமிழ்க் குடியேற்றத்தில் முன்னின்று முயலுபவரைக் காணவில்லை.

தமிழ் நாட்டின் தேவைகளான காங்கேசன் சிமந்துத் தொழிற்சாலைக்குப் போல் பணம் ஒதுக்கப்பட்ட பல விஷயங்கள் ரத்துச்செய்யப் பட்டிருக்கின்றன. இப்படியான செயல்களைத் தீவிரமாகச் செய்பவர்களிடம் சமரசம் பேசிக்கொண்டிருந்தால் என்ன நடக்கும்? நமது நாட்கள் வீணுகக்கழிந்து கொண்டேயிருக்கும். நாம் பேசிக் கொண்டிருக்கும் இடத்தையே சிங்கள வெள்ளம் வந்து மூடிவிட்ட பின் நாம்அந்நியராகஅங்குநின்று தவிப்போம். இரண்டாவது மகாயுத்தத்தின்போது ஜப்பான் தூதுவர் அமெரிக்கா

டானியல் ஞேச்

வில் சமரசம் பேசிப் பேசி நாட்களை கழிக்க அரசாங்கம் அவர்கள் கப்பல்களுக்கருகில் வெடிக் குண்டுகளைக் குவி[illegible]த்து கொண்டிருந்ததை மறந்துவிட்[illegible]டோமா?

ஐக்கிய நாட்டுச் சபைக்கு நம் விஷயத்தைச் சமர்ப்பித்துதான் காரியம் முடியப் போகின்றதா? காரியம் முடிவதானுலும் எத்தனை ஆண்டுகள் செல்லும்? அதற்குள் தமிழ்ப் பகுதிகளே இருந்த இடந்தெரியாமல் மறைந்து விடாதா? காஷ்மீர் பிரச்னை பல ஆண்டுகளாகியும்தீர்ந்து விட்டதா? மொழிச் சமத்துவம் மாத்திரம் கிடைத்துச் சிங்களக்குடியேற்றம்நடந்து கொண்டிருந்தாலும் காலக்கிரமத்தில் அதுவும் தானுக மறைந்துவிடும்.

#### பூனைக்கு மணி கட்டல்

இன்றைய அரசாங்கம் இனத்துவேஷத்தை மாத்திரமல்ல, மதத்துவேஷத்தையும் வளர்க்கிறது. இன்று கத்தோலிக்க சமயத்திற்கை வைத்திருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தால் நாளைக்கு முஸ்லிம், இந்துசமயங்களின் கதியும் அதுவாகவே முடியும். கத்தோலிக்க சமயத்திற்கு ஆபத்துஏற்படுமானுல் கத்தோலிக்கத் தமிழர் இரண்டு வகையில் உயிரைச் கொடுத்தும் எதிர்த்தே தீருவர். இப்படிப்பட்ட எதேச்சாதிகாரத்தைப் பல பக்கங்களிலுமிருந்து எதிர்க்கமுடியாமல் துடிக்கும் தமிழ்க் குலம் பூனைக்கு மணி கட்ட தீர்மானித்த எலிக் கூட்டமாக இருக்கிறது. ஆனுல் தமிழரசுக்கட்சி எலிதான் பூனை மன்னனுக்கு மணிகட்ட முன்வந்துள்ளது.

#### சொல்பவர்கள் செய்தாலென்ன?

சமரசம் பேசிப் பார்க்க வேண்டும், ஐக்கிய நாட்டுச் சபைக்கு நமது விஷயத்தைக் கொண்டு செல்ல வேண்டும், சுப்றீம் கோட்டில் வழக்குத் தொடரவில்லையே என்றெல்லாம் இன்று குற்றம்சாட்டப்படுகிறது. இதையெல்லாம் யார் செய்வதென்ற கேள்வியைப் போட்டால் பதில்சொல்வ ஆளில்லை ஆயினும் தமிழரசுக் கட்சியார் தலையில் பொறித்துவிடப் பலர் தயாராவர். அப்படியானுல் தமிழரசுக் கட்சியின் கூற்றைத் தமிழினம் முற்ருக ஏற்றுக் கொண்டதா? அக்கட்சியுடன் எல்லோரும் ஒத்துழைக்கின்றனரா? அதன் கொள்கை சரியல்லவென்று கூறிக்கொண்டு வேறு திசைகளில் நிற்கும் தமிழர்களே, நீங்களேன் அந்த முயற்சிகளில் இறங்கிப் பார்க்கவில்லை? பேச்சு மேடைகளிலேறி வாய்வீச்சுகள் வீசும் தலைவர்களே, நீங்களும் இப்படியான செயல்களைச் சாதிக்க முன்வராததேன். அப்படி நீங்களும் செயலில் இறங்கி உங்கள் செயல்களில் வெற்றியைக் கண்டுவிட்டால் மக்கள் உங்கள்வழிக்கு வருவார்களே!

"சொல்லுதல்யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லியவண்ணம் செயல்"

சமஷ்டிக் கட்சியின் நான்கு அடிப்படைத் திட்டங்களில் ஒன்ருன "சமஷ்டி அரசியல் கோரிக்கை"யை விட்டுவிட வேண்டுமென்று சொல்லுபவர்களே, கா[illegible]த்தில் இறங்காமல் ஏன் பேச்சில் காலம் போக்குகிருர்கள். அதுவும் "நெய் திரண்டு வரத் தாழியைஉடைக்க"ஏன் முயலுகிறீர்கள்?

#### இனி என்ன சமரசப்பேச்சு

சென்ற காலத்தில் சிங்கள அதிகாரிகள் தமிழன், திறக்கப்பட்ட "சோடாப் புட்டி மூச்சு"ப்போல் முதலில் புஸ்வாணம் விட்டுப் பின் அடங்கிவிடுவானென்று சொல்லி வந்தார்கள். அதைப் பொய்ப்பிக்கத் தமிழரசுக் கட்சிஒன்றே அடிக்கடி காரியமாற்றிவந்திருக்கிறது.

சமரச பேச்சுக்கும், "பொறுத்தார் பூமி ஆள்வார்" என்பதற்கும் ஏற்பத்தானே 1956ம் ஆண்டு ஆவணி மாதம் தங்கள் வேண்டுகோளைச் சமர்ப்பித்தார்கள். பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா? ஒரு வருடம் சென்றுலும் அதை எடுத்துப் பேசவே ஆட்சியாளர் விரும்பாதபோது இனி என்ன சமரசப் பேச்சு? சமரசப் பேச்சை விரும்பாததோடு தனிச் சிங்களச் சட்டமும் சாதனையில் எவ்வளவு தீவிரமாகச் செல்லுகின்றது! தமிழ் நாட்டின் தேவைகள் எவ்வளவோ புறக்கணிக்கப்படுகின்றன. தலைக்கொரு பக்கம் பேசிப் பேசிக் காலம்போக்கும் தலைவர்கள் தலைக்கொரு செயலிலாவது இறங்கினுல் எவ்வளவோ உதவியாக இருக்குமே.

#### இயக்கத்தைக் கைவிட்டார்

வெளியிலுள்ள காடையர் கூட்டத்தால் பல அட்டூழியங்கள் நடைபெறும் என்பதற்காகத் தமிழரசுக் கட்சியின் ஆகஸ்ட் இயக்கத்தைப் பின்போட்டால் நமது ஜீவாதார உரிமைகளை இனிமேல் ஒருபோதும் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படப் போவதில்லை.

எல்லாளன் ஆட்சியை எதிர்க்கப் பயந்த தந்தை கவந்திசனைத் தூஷித்து அவரின் உதவி இல்லாமலே காட்டில் மறைந்திருந்து படை திரட்டிய துட்டகைமுனுவுக்கு வெற்றியைக்

(13-ம் பக்கம் பார்க்க)

## வழியில் தயங்காது வாஞ்சையுடன் ஓடிவா

தெற்கிலும் மேற்கிலும் வாழ்தமிழ் மக்களில்
அக்கறை மிக்கபோர்ச் சொற்பறை கொட்டியே
நெக்குரு கின்றவர் நெஞ்சிலே கொஞ்சமும்
பெட்பிலாப் பதவியின் பித்திறைற் கத்திடுஞ்
சொற்படி கேட்டுந் சோர்வதோ...? உன்னினம்
எத்தகைச் சிரொடு வாழ்ந்ததென் ருழ்ந்துமே
கற்பனை செய்துபார்! காலமுன் வைத்ததை
ஒப்பியே பின்னிழுத் தொழிவது மொல்லுமோ...?

சாகசப் பேச்சினேர் "சலுகைகள்" தரவதைத்
தாகமோ டேற்றடா தமிழ்மொழி காப்பது...?
நாகமென் றறி; யவர் நாதரும் உறுதிகள்!
தேகமா பெரிதுவித் தேசமே யழியினும்
சோகமோ டுயிர்துடித் தேங்கிடுந் திங்கிளைச்
சுந்தரி: செந்தமிழ்த் தாயினுக் கிவதோ...?
வேகமா யோடறப் போர்முனை; வெற்றியின்
வாகைநீ சூடுவை...! வழியிலே மிரள்வதேன்.

எத்தனை யின்னல்கள் ஏற்றனை, இன்தமிழ்ச்
சத்துடை யுள்ளமா சஞ்சலப் படுவது...?
கத்துவோர் கத்தநம் காரியம் முற்றுறச்
சத்திய யுத்தமே சால்புடைத் தென்பதை
உத்தம காந்தியத் தத்துவங் கூறுமே...
உதிரிகள் சிலரொடும் ஒந்திபோற் "தோழர்கள்"
எத்துவோர் தோள்களிற் தொத்தியே குத்திரப்
புத்திகள் கூறிநீ, "முத்தமிழ் கொல்வையோ?

குத்திடக் கத்தியை வைத்துள குண்டர்கள்
முத்தமிழ்த் தொண்டர்தம் முதுகினைத் தாக்குவர்;
சித்திர வதையினைச் சிரிப்புட னேற்பதே
சத்தியாக் கிரகம்! அச் சத்தியப் பாதையிற்
செத்துநீ போம்வரை சிறிதுமே முறைகெடா
வித்தையைச் செய்வையேல் வெற்றியுன் பக்கமே!
ஒத்துவா...ஒன்றிவா...ஓடிவா...தேடிவா...
நத்திவா...நம்மொழி நம்மையாள் வித்திட

—"இராஜபாரதி"

DAY STAR
டே ஸ்டார்

பணிவும் பண்புமிக்க சேவையும் நாளாந்தம்
நடைபெறும் கடமை அல்லவா?

குடும்பப் பெண்ணுக்குத் தேவைப்படும் தினைமுதல்
பனைவரையுள்ள அத்தனை பொருட்களும் உள்ளன.

முன்பு
விக்டரி குரோஸரி ஸ்டோர்ஸாகவிருந்து தற்பொழுது புதிய
நிர்வாகததின்கீழ் புத்தம் புதிய தோற்றத்துடன் காட்சியளிக்கின்றது.
'மக்ஸா' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் புதிய ஸ்தாபிதம்:

டே ஸ்டார்,

[illegible], வெள்ளவத்தை. போன்: 8353.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்:

# கற்பின் பரிசு

—எம். எஸ். ஆரிபீன்

### பாத்திரங்கள்

ஜிஹாங்கிர்: டில்லியின் சக்கரவர்த்தி:

அமீர்: மன்னன் ஜிஹாங்கிரின் ஜாகிதார்:

பிர்சாஹிட்: ஜிஹாங்கிரின் மந்திரி:

நூர்ஜஹான்: ,, ,, மனைவி (ராணி)

சோரப் அப்ரித்: ஏழைப் பெண்:

(அறங்காத்த அரசர் வரிசையில் அகலாத இடம்பெற்றவர் அக்பர் சக்கரவர்த்தி. அவரின் கருவில் உருவான கடமை வீரன்தான் ஜிஹாங்கிர். இந்தியாவின் வடகோடியான டெல்லியை மொகவாய மன்னர்கள் அரசோச்சிய காலத்திலேதான் ஜிஹாங்கிர் மன்னருக்கும் அரியாசனம் கிட்டியது. அன்பையும் அறத்தையும் ஒப்பற்ற இஸ்லாத்தின் மாண்பையும் பாதுகாத்த பேரரசர் ஜிஹாங்கிர்.)

(கதவு தட்டும் ஓசை கேட்கிறது.)

ஜிஹாங்கிர்: யாரது?

பிர்சாஹிப்: வாழ்க ஜிஹாங்கிர்! நீடு வாழ்க அக்பர் பரம்பரை!!

ஜிஹா: பீர்சாஹிப்! வருக! வருக!!

(கதவு திறக்கும் ஒலி)

பிர்சா: மன்னு! மணிப் பொறியைப் பார்த்தீர்களா?

ஜிஹா: பன்னிரெண்டு ...! இந்த வேளைதான் நமது நாட்டின் நலன்களை அறிய முடியும்......

பிர்சா: உண்மை: உங்களை மதிக்கவே முடியவில்லையே!

ஜிஹா: என்ன? (வியப்புடன்)

பிர்சா: தங்கக் கிரீடம் தாங்க வேண்டிய தலையிலே தலைப்பாகை! பட்டு ஜொலிக்கவேண்டிய மேனியிலே ஓட்டாடை!! அரும்புமீசைக்குப் பதிலாக முறுக்கிவிட்ட கோடரி மீசை! ஆஹா! அற்புத ஜோடனைகள்!!

ஜிஹா: இந்த வேஷமெல்லாம் எதற்காகத் தெரியுமா?

பிர்சா: எனக்கா தெரியாது ஏந்தலே! மனக்கவலையின்றி மக்கள் வாழ்கின்றார்களா? என்று மனையெல்லாம் சென்று பார்த்திடத்தான்.

ஜிஹா: நன்றாய்ச் சொன்னீர...ஆனுல் உமது உடைகள்!...

பிர்சா: அதைப்பற்றி தாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்......இதோ......கறுத்த ஜிப்பா— கதராடைத் தோளணி.

(கதவுகள் திறக்கும் ஒலி

பிர்சா: அதோ மகாராணியாரும் வருகிறார்கள்...

ஜிஹா: நூர்ஜ......என் ராணியே! நான் சென்று வரட்டுமா?

நூர்ஜ: நிம்மதியாத் தூங்க வேண்டிய இந்தப் பொன்னுன வேளையிலே ஏன் ஊர் சுற்றப்போகின்றீர்கள்:

ஜிஹா: அப்படிச் சொல்லாதே ராணி! அரசர்களுக்கு மக்களின் அன்றாட வாழ்வு முறையும் தெரிந்திருக்க வேண்டும்! அரசனுக்கும் குடிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தால்தான் நல்லரசு நிலவும்; அன்பு பொங்கும்; ஆனந்தங்களும். ஆனுல்......

நூர்ஜ: உம்....சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள் பிரபு!

ஜிஹா: சொல்லித்தானே ஆகவேண்டும்! இதோபார்! இந்த நள்ளிரவிலே நாட்டு மக்களின் நிலைகளைக் கேட்டறிய முடியாதென்றுதானே கிண்டல் பண்ணுகின்ருய் அதை நேரில் சென்று பார்த்தறியத்தான் இந்த வேஷம்.

நூர்ஜ: (சிரித்தபடியே) இது என்ன வேஷம்! உலகமே நாடகமேடை! உலக மக்கள் எல்லாம் வேஷதாரிகள் என்பீர்களே! ஏன் உங்களுக்குப் பக்கீராக ஆசையாயிருக்கிறதா?...சேச்சே...யாராவது பார்த்துவிட்டால்...

ஜிஹா: அரசன் என்றே சொல்லமாட்டார்கள் அப்படித்தானே!

நூர்ஜ: நாதா! ஏன் உங்களுக்கிந்த வேதனை! நீதிக்காக வாதாடும் நேர்மையின் சிகரமான தாங்கள் இந்தக் கூதல் தரும் ஊதற் காற்றிலே வீதியெல்லாம் சுற்றுவது......

ஜிஹா: வீண் வேலையென்று எண்ணுதே ராணி— ஏழைகளை வாழ வைப்பது தான் வள்ளல் (நபிகள் திலகம்)-ஸல் அவர்களினது வாக்கு. அந்த வாக்கைக் காப்பாற்றுவதுஎன் கடமை.

நூர்ஜ: நபி பெருமானின் நல்வாக்கைக் காப்பாற்றத்தான் வாயிற்கடை மணியை வழியிற் கட்டிவிட்டிருக்கிறீர்களே! உம்......எல்லாம் என்விதி! இல்லாவிட்டால் இந்த நள்ளிரவிலே தனியாகத்தூங்க வேண்டுமா நான்?

ஜிஹா: அப்படிச் சொல்லாதே ராணி! நேரமாகிவிட்டது! அமைதியானஇந்த வேளையிலே எங்கள் அலுவலில் ஈடுபட விடைகொடு.

நூர்ஜ: எல்லாம் உங்கள் சித்தம்: எனக்குத் தூக்கமாயிருக்கிறது:

ஜிஹா: சந்தோஷமாகத் தூங்கு ராணி! நாங்கள்விரைவிலே திரும்பிவிடுவோம்!

நூர்ஜ: சாஹிப்!

பிர்சாஹிப்: தேவி!

நூர்ஜ: மன்னரைக் கவனமாகக் கொண்டு சேர்த்து விடவேண்டும்.

ஜிஹா: ஏன்? நானென்ன பச்சிளம் பாலகனு? அல்லது முதுகெலும்பில்லாத கோழையா?

நூர்ஜ: இல்லை பிரபு! ஊர் தூங்கும் வேளை! ஊதாரிகள் உலவும் நேரம்! கொடியவர்கள் தங்களைத் தாக்க முனைந்தால்......

பிர்சா: மகாராணி! அந்தக் கொடியவர்களுக்கு முடிவு காணத்தான் இந்த உடையிலே செல்கிறோம்.

நூர்ஜ: படைப்பலம் இல்லாமல், நடையிலே செல்கிறீர்களா? இடையில் யாராவது தடையாக இருந்தால்.........?

ஜிஹா: அந்த மடையரின் மண்டைகளையுடைத்து மண்டபத்திலே தூக்கிவிடுவேன்.

நூர்ஜ: எனக்குப் பயமாக இருக்கிறது!




ஜிஹா: பயம்......... (சிரித்தல்) பயம் பாவையர்களின் பரம்பரைச் சொத்து! அந்தப் பயத்துக்கு அடிமைப்படுவது கோழையின் வேலை! நாம் பயப்படவேண்டும் யாருக்குத் தெரியுமா? இறைவனுக்கு! நேர்மைக்கு!! நீதிக்கு!!! நியாயத்துக்கு!!!!...... பீர்சாஹிப்!

பிர்சா: வேந்தே!

ஜிஹா: எல்லாம் தயார் தானு?

பிர்சா: இதோ...... (வாளையுருவுஞ்சத்தம்)

ஜிஹா: சரி - புறப்படலாமா?

பீர்சா: தங்கள் சித்தம்.

[கதவடைக்கும் சத்தம் தொடர்ந்து நாய்களின் ஓலம்]

ஜிஹா: நாய்களைப் போல நன்றியுள்ளவர்களாக நமது உத்தியோகத்தர்களிருந்தால்......?

பிர்சா: நாட்டின் நிலைபற்றிக் கேட்கவா வேண்டும்?

ஜிஹா: அதோ...... அந்த வெளிச்சமென்ன?

பிர்சா: அதுவா? யாரோ குப்பையைக் கொளுத்திவிட்டிருக்கிருர்கள்.

ஜிஹா: அதுசரி! நமது அமீரைப்பற்றி அடிக்கடி அசம்பாவிதமான செய்திகள் பரவிவருகின்றதே! உமக்குத் தெரியாதா......?

பிர்சா: அமீரைப்பற்றியா?

ஜிஹா: ஆம்!.........எமது ஜாகிர்தார். அவனைப்பற்றித்தான்.

பிர்சா: ஆஹா! அதைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஜிஹா: எப்படி......?

பிர்சா: அன்பு தவழும் இப்பொன்னுட்டிலே அக்கிரமம் செய்கிருனும்.

ஜிஹா: (ஆத்திரத்தில்) என்ன?

பிர்சா: கேளுங்கள் மன்னு!

ஜிஹா: பிர்சாஹிப்! வே [illegible] யிலே போகிறோம் மறந்து விடவேண்டாம். நான் இப்போது மன்னனுமில்லை-நீர் மந்திரியுமில்லை......தர்வேசிகள்......தர்வேசிகள்!

பிர்சா: உண்மை...... உண்மை......மறந்துவிட்டேன்.

ஜிஹா: அமீர் கன்னியரைக் கற்பழித்துத் திரிவதாகவும் கதைகள்.

பிர்சா: பலமாக அடிபடுகின்றனதகன்.

ஜிஹா: எப்படியிருந்தாலும், எந்த விஷயத்தையும் கண்ணுரக்கண்டு, காதாரக் கேட்டு ஆராய்ந்து தெளிவு படுத்துவதே அறிவுடையோர்க்கு அழகு.

[இவ்வேளை கதவிலே பலமாக அடிக்கும் சத்தம் கேட்கிறது]

பிர்சா: அதோ! ஒரு சத்தம்.

ஜிஹா: யாரோ தட்டுவது போலிருக்கிறதல்லவா?

பிர்சா: ஆம்-வாருங்கள். யாரென்று பார்க்கலாம்......

கதவு தட்டும் சத்தம்)

குரல்: சோரப்! சோரப்!!

பெண்: உம்......... என்ன? யாரது?

குரல்: கதவைத் திற!

பெண்: பாதியிரவிலே, பனிப்பெய்யும் வேளையிலே உங்களுக்கு இங்கு என்ன வேலை......நீங்கள் யார்?

குரல்: தெரியாதா? ஜிஹாங்கிர்மன்னரின் ஜாகிர்தார்!

பெண்: ஆ! வருகிறேன்—இதோ திறந்துவிடுகிறேன்.

(கதவு திறக்கும் சப்தம்)

பெண்: நீங்கள்......

அமீர்: இரண்டுங் கெட்ட இந்த வேளையிலே இம்மண்டலத்தின் அரசனுன ஜிஹாங்கிரினின் ஜாகிர்தார் ஏன் வந்தேன்என்று விழிக்கிருயா

பெண்: (சமாளித்தவளாய்) இல்லை! அப்படி ஒன்றும் இல்லை!! நிற்கிறீர்களே! கட்டிலிலே அமருங்கள் பழங்கள் சொண்டு வருகிறேன்!

அமீர்: பழங்கள் எதற்கு பெண்ணே?

பெண்: பசியாற. ஏழை நான்......என்னிடமுள்ளதைத்தானே தரலாம் பிரபு!

அமீர்: பெண்ணே! ஏன் இப்படி எட்டி நிற்கிருய்?

பெண்: பரவாயில்லை. இதோ வந்துவிட்டேன் பழங்களை எடுத்துக்கொண்டு வருகிறேன்.

அமீர்: (தனக்குள்ளே) ஆஹா? என்ன அழகு! என்ன அழகு! (முணுமுணுக்கிருன்)

கொண்டைச் செருக்கழகும்
முத்துத் துராயழகும்
செவ்வாய்
முறுக்கழகும் சேலைமுகப்பின்
கருக்கழகும்... ஆஹா
ஆஹா!...
இவளை இன்றைக்கு

[காலடிச் சத்தம் கேட்கிறது]

பெண்: பிரபு......இதோ பழங்கள்! பசியோடு இருக்கிறீர்கள் திருப்தியாக உண்ணுங்கள்.

அமீர்: வேண்டாம் பெண்ணே! வீணுகச் சிரமப்படாதே! உன் அன்பு ஒன்றே போதும்!

பெண்: ஆஹா! உங்கள் உதார குணத்திற்கு உவமானமே இல்லையே...பசியாறுங்கள்...உம்...சும்மா இருக்கிறீர்களே......

அமீர்: சும்மா இருக்க முடியாதுதானே உன் சுந்தர ரூபத்தைத் தேடி ஓடி வந்தவன் எப்படிச் சும்மா இருக்க முடியும்?

பெண்: ஆ!

அமீர்: அஞ்சாதே! என் அஞ்சுகமே! எல்லாம் உன் நன்மைக்குத்தான்.

பெண்: எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!

அமீர்: புரியாத புதிர்தானே இவ்வுலக வாழ்வு! தெரியாதா உனக்கு! மரியாதையில்லாது பேசுகிறேனே என்று மருளாதே! உரிமையோடு அருகே வா என் அன்பே!

பெண்: ஜமீர்தார்! நீங்களா பேசுகிறீர்கள்! நீங்களா இந்தக் கீழான செயலில் ஈடுபடத் துணிந்தீர்கள்?

அமீர்: மடப் பெண்ணே! மனிதன்தானே நானும் துணிவுடன் கூறுகிறேன். இனி யாரும் எம்மைத் தடுப்பாரில்லை.

பெண்: ஐயோ? இது என்ன அக்கிரமம்! ஊர் தூங்கும் இரவிலே, உத்தம மன்னன் ஜிஹாங்கிரின் நாட்டிலே, வேரில்லா மரமான என்னை வீணுக்கும் கொடிய எண்ணத்தை விட்டுவிடுங்கள்! பிரபு—விட்டுவிடுங்கள்.

அமீர்: உன் கட்டழகைக் கண்ட பின்பா?

பெண்: யா! பார்வதிகார்! யா! பார்வதிகார்!! ஆ ஆண்டவனே! ஆ!! ஆண்டவனே!!

அமீர்: (கோர சிரிப்பு) அஹ்ஹ ஹ்...ஹ ஹ்ஹா...அவன் இங்கு வரமாட்டான்.

பெண்: ஐயோ! யாறப்பனு!! வேண்டுமென்றே தண்டனையை விதித்தாயா?......

அமீர்: ஏண்டி அலறுகிருய்!......இப்படி வா! வா!!

பெண்: ஆ! அல்லாஹ்! ஐயோ......(வாய் பொத்தும் சத்தம்) ஆண்டவா தூபோ!......

அமீர்: (வெறியோடு) ஆ! கையைக் கடித்துவிட்டால் கணப்பொழுதில் தப்பிவிடலாம் என்று கனவுகாணுதே! மெய்யாகச் சொல்லுகிறேன், என் விருப்பத்துக்கு இசைந்தாலொழிய......உய்யமாட்டாய்! உருத் தெரியாமல் ஆக்கிவிடுவேன்!!

பெண்: அற்ப பதரே! நடமாடும் பிணமே!! அரசனின் பணியாள் என்று அர்த்த இரவிலே ஆதரவு தந்தேன்! அன்பின் சோதரனுக மதித்துப் பரிவு காட்டினேன்!! நீ இப்படிப்பட்ட இரக்கமற்ற அரக்கனென்று தெரிந்திருந்தால்

அமீர்: யாரோடு பேசுகிருய்...தெரியுமா?...

பெண்: தெரிகிறது! அறிவே இல்லாத மனித உருக்கொண்ட மிருகத்தோடு பேசுகிறேன் என்று தெரிகிறது!!

அமீர்: அதிகம் அளக்காதே! ஆபத்து நேரும்!!

பெண்: அற்பனே! அக்பர் பரம்பரைக்கே அவதூறு தருபவனே! அன்புக்கும் அறத்துக்கும் தாய்களான ஆயிஷா! பாத்தும்மா! முதலியோரின் பண்புமிகு பரம்பரையில் உதித்த பாவையரைப் பாழ்படுத்தும் பண்பற்றவனே! உன் உயிருக்குப் பயமிருந்தால் ஓடிவிடு இவ்விடத்தைவிட்டு!

அமீர்: பேஷ்! அழகான பேச்சு! நிறுத்திவிட்டு வாடி! எல்லாம் எனக்குத் தெரியும். (கையைப் பிடித்து இழுத்தல்)

பெண்: ஆ...ஐயோ! விடு... என்னை விட்டுவிடு.

அமீர்: மீண்டும கடித்துவிடலாம் என்று பார்க்கிருயா?

பெண்: ஐயோ! ஐயோ!! அல்லாஹ்......அல்லாஹ்...... (கதவிலே தட்டும் சத்தம்)

அமீர்: யாரது? (வாளுருவும் சத்தம்)

(கதவுடையும் சத்தம்)

இரு உருவங்கள்: அஹ்...... அஹ்...... அஹ்......அஹ்ஹா! அற்ப பதரே! அசையாதே! அசைந்தால்......

அமீர்: என்ன?

(12-ம் பக்கம் பார்க்க)

இன்லண்ட்&ஓவர்சீஸ்
டிரேட்ஸ் லிமிட்.,

எங்கள் ஸ்தாபனத்துக்கு உங்களை அழைக்கின்ரேம்.

ஜுகி தையல் மெஷின்கள், றீகல் பைசிக்கிள்கள், ஸ்கூட்டர் மோட்டோர் சைக்கிள்களும், விவசாய யந்திரங்களும், மசாலைத் தூளும், கோப்பித்தூளும் இன்னும் ஏனைய சாமான்களும் பெற்றுக் கொள்ளுமிடம்.

சுலபமான மாதத் தவணையிலும் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ஏஜண்டுகள் தேவை.

கிளை:—
32, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

INLAND & OVERSEAS TRADES LTD.,
180, BARBER STREET, COLOMBO - 13.
Phone:- 78194.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மானம் ஒன்றே பெரிதென மதிக்கும் தமிழர்

## சலுகைகள் பெற்று வாழ ஒருபோதும் உடன்படார்

## பிறப்புரிமைகள் அளிக்கப்படும் வரை அறப்போர் நடத்தியே தீருவர்

## வள்ளுவர் வகுத்த வழியில் காந்தி சென்று வெற்றிக் கொடி நாட்டியது நமக்கோர் எடுத்துக்காட்டு

அணிமையில் தமிழ் மறைத் தொண்டர் முன்னணியின் மாத்தளை உறுப்பினர் ஆதரவில் மாத்தளையில் நடந்த வள்ளுவர் விழாவில் கலந்து காலாநிதி சு. வித்தியானந்தன் சொற்பொழிவாற்றினார்.

அவர் நாட்டின் இன்றைய சூழ் நிலையை விளக்கியும், தமிழன் தமிழனாகச் சகல உரிமைகளுடனும் இங்கே வாழவேண்டுமானால் அவன் செய்ய வேண்டியது என்ன என்பதைத் தெளிவாக்கியும் பேசினார்.

அன்னாரின் பேச்சின் கருக்கம் இங்கே தரப்படுகிறது.

அடிப்படை உரிமையுடன் வாழும்காலம் போய், 'நியாயமான அளவு' உரிமையுடன் வாழ விடலாமா என்று ஆராயப்படும் சூழ்நிலையில்—உலகிலே வேறெங்கும் இதுவரை கண்டறியாத கொடுங்கோலாட்சித் திட்ட அமைப்பிலே, தமிழன் இன்று வாழ்கின்றான்.

தன் இனத்தின் வெற்றிக் கொடி — விடுதலையின் அறிகுறி, வானத்தில் இனி எப்பொழுது பட்டொளி வீசிப் பறக்கப் போகின்றதோ என்று ஏங்கிய வண்ணம் இருக்கின்றான் தமிழன்.

### பரிதாபகரமான சூழ்நிலை

அவனுடைய தாய்மொழி —தலைசிறந்த உலக மொழிகளிலே உயிர்த்துடிப்புடன் விளங்கும் உயர் மொழி, ஆட்சி மொழியாகக் கணிக்கப்படாது, நாளுக்கு நாள் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் உயிர்க் கொலை செய்யப்பட்டு வருகின்றது.

தமிழன் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவந்த பிரதேசங்களில் பிற பிரதேசத்தினர் வந்து குடியேறி அவனைச் சுரண்டி, அவன் மீது ஏறிச் சவாரி செய்கின்றனர்.

நாட்டின் ஆட்சியிலே அவனுக்குப் பங்கில்லை. வெள்ளையர் ஆட்சிபீடத்திலிருந்து இறங்கியதும், தனக்கும் ஆட்சியிற் பங்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்தான். ஆனால் கரையான்புற்றெடுக்கக் கருநாகம் குடிபுகுந்த கதையாகிவிட்டது.

அன்று தன் தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய நாட்டிலே இன்று கள்ளத் தோணியாகக் கணிக்கப்பட்டு, நாடற்றவனாக வாழ்கின்றான். அல்லும் பகலும் உழைக்கும் உத்தமர்கள் எலும்பும் தோலுமாக பிரஜா உரிமையற்று, உருமாறி கண்ணீர் வடித்தவண்ணம் இருக்கின்றனர். இலங்கையில் இதுதான் இன்றைய சூழ்நிலை.

### சத்தியாக்கிரகம்

ஆம், இத்தகைய சூழ்நிலையிலேதான் நாம் இன்று வாழ்கின்றோம். இந்நிலையில் நாம் செய்யவேண்டியது யாதென்பதைத் திருக்குறள் வகுத்துக் காட்டுகின்றது.

''அகழ்வாரைத் தாங்கு
நிலம் போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல்
தலை''

என்கின்றார் வள்ளுவர். கொடுமை வளர வளரக் குமுறும் எரிமலையாகிவிட்டனர் தமிழ் மக்கள் வாய்ப் பேச்சோடு நில்லாது வள்ளுவர் வகுத்த அறப்போரில் இறங்குவதுதான் வழி. இந்த அறப்போர் ஒன்றுதான் எமக்குச் சுதந்திரம் அளிக்க வல்லது. காந்தியடிகள் தென்னாபிரிக்காவில் தொடங்கிய அறப்போருக்குச் சத்தியாக்கிரகம் என்று பெயர் கொடுத்தார். சத்தியாக்கிரகத்தை ஆக்கிரகித்து நிற்பது, அதாவது உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகுதல்தான் சத்தியாக்கிரகம் எனப்படும். துராக்கிரகத்தை ஒழிக்கச் சத்தியாக்கிரகம் செய்யும் போது, துராக்கிரகிகள் செய்யும் அடாத செயல்களை அன்புள்ளத்தால் தாங்கும் பொறுமை ஏற்படுகின்றது. அடிபட்டவன் அன்புள்ளத்தால் பொறுமையோடு ஏற்று அஞ்சாது நிற்கும்போது, அடித்தவன் உள்ளத்தில் இரக்கம் தோன்றும்; அவ்விரக்கம் அவன் மாட்டுள்ள தீக்குணத்தை நீக்கும். இதனை வள்ளுவர்,

''ஒறுத்தார்க் கொருநாளை
யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்''

என்று விளக்கிக் கூறுகிறார்.

### தமிழர் மானமுடையோர்

திருக்குறள் கூறும் இந்தச் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்து, பொறுமைப் போர் நிகழ்த்தியே காந்தியண்ணல் இந்திய நாட்டிற்கு விடுதலை தேடிக் கொடுத்தார். இந்த நெறியே எமக்கும் சாலப்பொருத்தமானது. இப்பொறுமைப் போர் சத்தியத்தை நிலை நாட்டத் தொடுக்கும் போர் பேடித்தன்மையின் அறிகுறியல்ல; மானத்தின் அறிகுறி. மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமான் போன்றவர் தமிழர்; மானத்திற்கு இழுக்கு வரின் உயிர் நீப்பவர். எனவே மானத்துடன், மனிதராக வாழ்வதற்குத்தான் இவ்வழி வள்ளுவரால் சிறந்ததெனை எடுத்தோதப்படுகின்றது. மானமுள்ள தமிழர் 'நியாயமான' சலுகைகள் பெறுவதற்கு ஒருபொழுதும் உடன்படார், அடிப்படை உரிமைகள்—பிறப்புரிமைகள் அளிக்கப்படும்வரை அவர் அறப்போர் நடத்தியே தீருவர்.

### பிரச்னை தீர வழி

எனவே 'நியாயமான அளவுக்குத் தமிழை உபயோகிப்பதற்கு'ச் சட்டம் வகுப்பதற்குத் தமிழரிடையே உலாவும் ஐந்தாம்படையினரின் உதவியை நாடும் பண்டாரநாயகா அம்முயற்சியைக் கைவிட்டு, தாமும் சத்தியாக்கிரகியாக மாறுவாராயின் பிரச்னை தானகத் தீர்ந்துவிடும். சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடித்து ஒழுகுபவன் பிறர்க்குத் தீங்கு செய்ய ஒருப்படான் என்பதை அவர் அப்பொழுது உணர்வார்.

''முறை செய்து காப்பாற்று
மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும்''

என்று திருக்குறள் கூறுகின்றது. ஒற்றையாட்சித் தலைவன், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறித்த கொடுங்கோலன் என்றெல்லாம் தூற்றப்படும் எமது முதல் அமைச்சர்,

''தன்குற்ற நீக்கிப்
பிறர்குற்றம் காண்கிற்பின்
என் குற்ற மாகு மிறைக்கு''

என்னும் குறள் உண்மையை உணர்வாராக. பிறரிடத்துக் குறை கண்டு அவற்றைச் சுடியமுன், தம் ஆட்சியிலுள்ள குற்றங்களைய—ஈழத்தின் பழங்குடி மக்களாகிய தமிழருக்குத் தாம் செய்யும் அநீதிகளை முதலில் நீக்குவாராக.

### எண்ணமல் பேசுதல்

இன்னும் சில குறட் பாக்களை அவருக்கு எடுத்துக் கூற விரும்புகிறோம்.

''எண்ணித் துணிக கருமந்
துணிந்த பின்
எண்ணுவ மென்ப திழுக்கு''

ஈழத்தில் அண்மையில் முதல் மந்திரிப் பதவி ஏற்ற தலைவர்கள் எண்ணமற் பேசுவதை ஒரு கலையாக ஆக்கிக் கொண்டுவிட்டனர். இந்தப் பரப்பரையில் வந்த பண்டாரநாயகா, ''இருபத்து நான்கு மணித்தியாலத்தில் சிங்களத்தை அரசாங்க மொழியாக்குவேன்'' என்று எண்ணமற் சொல்லியதன் விளைவே இன்றைய சிக்கலான சூழ்நிலை. மேலும்,

''இடிப்பாரை யில்லாத
[வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்''.

இன்று பிரதமரைச் சூழ்ந்துள்ள அமைச்சர்கள் பிரதமரை இடித்துரைத்து நல்வழிப்படுத்தாது அவர் அழிவைக் கோலுவதற்குத் 'திக்விஜயங்கள்' செய்து வருகின்றன; நெருப்பிலே நெய்யூற்றி வருகின்றனர். கெடுப்பாரில்லாதே கெடுகின்றான் நாட்டுத் தலைவன்.

### அடக்கி ஆள எண்ணுவது பகற் கனவு

பிரதமருக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகின்றேன்:

''வேலன்று வெற்றி
தருவது மன்னவன்
கோலதூஉம்கோடாதெனின்''

'தொண்டர் படை' என்ற பெயரில் தாங்கள் திரட்டும் காடையர் குழுவும், இராணுவப் படையும், பொலீசுப் பட்டாளமும் வெற்றி அளிக்கப்போவதில்லை. இவற்றினால் தமிழரை அடக்கி ஆளலாம் என்று பகற் கனவு கொள்ளவேண்டாம். தமிழர் வள்ளுவர் வாக்கு நன்கு உணர்ந்தவர். கொடுங்கோலாட்சியை செங்கோலாட்சியாக மாற்றி அமையுங்கள். அப்பொழுது வெற்றி எய்தலாம்.

இறுதியாகப் பிரதமருக்கு ஓர் எச்சரிக்கை.

(10-ம் பக்கம் பார்க்க)

## செயற்கை சந்திரன்கள்

### ருஷியாவும்! அமெரிக்காவும் தயாரித்து வருகின்றன

இந்த வருஷம் வானத்தில் ஒரு செயற்கை சந்திரனை ஏற்படுத்த ருஷிய அரசாங்கம் திட்டம்போட்டுள்ளது.

இரவில் இந்த செயற்கை சந்திரன் வானத்தில் ''கிடு கிடு'' என்று ஒரு திசையிலிருந்து மற்றொரு திசைக்கு போவதை நாம் காண முடியும். இம்மாதிரி இது ஒரு இரவுக்குள்ளாக பலதடவை பூமியை சுற்றிவரும்.

பறக்கும் குண்டுமூலம் இந்த செயற்கை சந்திரன் இன்னும் சில மாதங்களில் வானத்துக்கு அனுப்பப்படும்.

பூமிக்கு வெளியே வானத்தில் உள்ள நிலைமைபற்றி அறிந்துகொள்வதற்காக இந்த செயற்கை சந்திரன் ஏற்படுத்தப்படுகிறது.

செயற்கை சந்திரனை அனுப்புவதற்காக ருஷிய சர்க்கார் தீவிர ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

இந்த செயற்கை சந்திரன் ஒரு பெரிய பந்துபோல இருக்கும். அதற்குள்ளாக பல நுணுக்கமான விஞ்ஞான கருவிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

### பறக்கும் குண்டு

பறக்கும் குண்டு மூலமாக இந்த செயற்கை சந்திரன் வானத்துக்கு அனுப்பப்படும். ஒரு பெரிய பறக்கும் குண்டின் முனையில் பல பறக்கும் குண்டுகள் பொருத்தப்பட்டிருக்கும். முதலில் இந்த பெரிய பறக்கும் குண்டு வானத்தில் கிளம்பும். அதனுடைய சக்தி குறையும் சமயத்தில் அதன் முனையில் உள்ள இன்னொரு பறக்கும்குண்டு வானத்தில் வேகமாகக் கிளம்பும். வானத்தில் இன்னும் உயரே போன பிறகு அதிலிருந்து இன்னொரு பறக்கும் குண்டு உயரே பாய்ந்து செல்லும். கடைசியாகப் போகும் பறக்கும் குண்டின்முனையில் இந்த செயற்கை சந்திரன் வைக்கப்பட்டிருக்கும்.

வானத்தில் பல நூறு மைல் தூரம் போன பிறகு இந்த செயற்கை சந்திரன் பறக்கும் குண்டிலிருந்து பிரிந்துவிடும். பிறகு அது அங்கிருந்து கொண்டே வெகு வேகத்தில் பூமியை சுற்ற ஆரம்பிக்கும்.

வானத்தில் அந்த பிரதேசத்தில் உள்ள நிலைமையை செயற்கை சந்திரனுக்குள் உள்ள விஞ்ஞான கருவிகள் பதிவுசெய்துகொள்ளும். பிறகு அவை தானக இயங்கும் கருவிகள்மூலம் பூமிக்கு தெரிவிக்கப்படும்.

### 16 தடவைகள் சுற்றும்

இந்த செயற்கை சந்திரன் பூமியை 90 நிமிஷத்துக்குள்ளாக ஒரு தடவை சுற்றி வந்துவிடும். எனவே அது பூமியை ஒரு நாளில் 16 தடவைகள் சுற்றிவரும். இரவிலே இந்த செயற்கை சந்திரன் வானத்தில் ஒரு நட்சத்திரம் போல் பிரகாசத்துடன் காணப்படும். அடிவானத்திலிருந்து உதயமாகி 12 நிமிஷத்துக்குள்ளாக அது மறு பக்கம் மறைந்துவிடும். மறுபடியும் கொஞ்ச நேரம் கழித்து அது திரும்பவும் உதிக்கும்.

இந்த செயற்கை சந்திரன் வான எல்லையில் சில காலம் நீடித்து நிற்கும் என்று ருஷிய விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அதன் சுற்றும் வேகம் குறைந்துபோனால் அது பூமியின் எல்லைக்குள் பாய்ந்து கீழே விழும். அப்படி விழும்போது எரிந்து கருகிவிடும் என்று அந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.


### அமெரிக்காவின் முயற்சி

அமெரிக்காவும் இத்தகையதோர் செயற்கைச் சந்திரனைத் தயாரித்து வருகிற செப்டம்பர் மாதத்தில் வானத்தில் விடத் திட்டமிட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இருசாராரின் செயற்கைச் சந்திரன்கள் இரண்டையும் உலகத்தில் உள்ள எல்லா மக்களாலும் பார்க்க முடியும் என்று சொல்லப்படுகிறது.


எவரி 5 அந்தர்

மேடைத் திராசு



எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும்.

கே. என். அப்துல்காதர்ராவுத்தர் & கம்பெனி
312, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1957 ஜூன் மாதம் 23-ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# நெருக்கடிக்கு காரணஸ்தர் யார்?

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கவர்ணர் ஜெனரலுடைய சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது விவாதம் நடைபெற்றது. விவாதத்தின் இறுதிக் கட்டத்தில் பேசிய பிரதமர் திரு. பண்டாரநாயகா ''நெருக்கடியான ஒரு நிலையிலே இந்த விவாதத்தை நடத்துகிறோம்'' என்று குறிப்பிட்டார். அவர் கருதிய 'நெருக்கடியான நிலைமை' ஆகஸ்ட் போராட்டத்தைப் பற்றியதாகும். ஆகஸ்ட் போராட்டம் இந்த நாட்டில் ஒரு நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்தும் என்பது உண்மைதான் மக்களுக்கு மட்டுமல்ல, திரு. பண்டாரநாயகாவின் அரசாங்கத்திற்கும் அது நெருக்கடியை உண்டு பண்ணவே செய்யும்.

ஆனால் இத்தகைய நெருக்கடி யொன்று உருவாவதற்கு காரணஸ்தர் யார்? இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் தான் காரணஸ்தர் என்று பழியை வேறொருவர் தலையில் சுலபமாகச் சுமத்திவிடப் பார்க்கிறார் பிரதமர். பிரச்னையின் ஆணி வேரைக் கிளறிப் பார்க்க விரும்பாதவர்களும், அஸ்திவாரத்தை அகழ்ந்து பார்க்க முடியாதவர்களுமான சிலர், தமிழரசுக் கட்சியினர் ஆகஸ்ட் போராட்டத்தை ஆரம்பித்து நாட்டைக் குழப்பக் காடாக ஆக்கிவிட முனைகிறார்கள் என்று தவறாக நினைக்கிறார்கள். அதனால் தமிழரசுக் கட்சியானது தமிழ்பேசும் இனத்தின் ஜீவமரணப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டுப் படுத்துத் தூங்க வேண்டும் என்று புத்திமதி கூற முன் வருகிறார்கள்.

இன்று உருவாகியுள்ள நெருக்கடிக்கு காரணஸ்தர் தமிழரசுக் கட்சியினர் அல்ல. அப்படியானால் வேறு யார்? நான்கு சாரார் இன்றைய நெருக்கடிக்கு காரணஸ்தர் ஆவர்.

1. ஈரின மக்கள், இரு மொழி பேசி வாழும் இந்த நாட்டிற்கு, ஒவ்வாத ஒரு ஒற்றையாட்சி அரசமைப்புத் திட்டத்தை வகுத்துக் கொடுத்த சோல்பரிக் குழுவினர் முதலாவது காரணஸ்தர்.

2. இந்த அரசமைப்புத் திட்டத்தின் கீழ் சகல அரசியல் அதிகாரங்களையும் பெரும்பான்மையினராகிய தங்கள் கையில் அபகரித்துக் கொண்டு, அநியாய பிரஜா உரிமை, வாக்குரிமை சட்டங்களையும், சிங்களக் குடியேற்றத் திட்டங்களையும் வகுத்துக் கொண்டு, தமிழ் பேசும் மக்களை நசுக்கி வந்த யு. என். பி. யினர் இரண்டாவது காரணஸ்தர்.


3. தங்கள் சொந்த நலனையும் பட்டம் பதவிகளையும் நோக்காக கொண்டு, சதித் திட்டங்களை வகுத்த யு. என். பி. யினருக்கு உறுதுணை புரிந்து வந்த திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். நடேசன், வி. குமாரசாமி போன்ற ஒத்துழைப்புத் தலைவர்கள் மூன்றாவது காரணஸ்தர்.

4. இறுதியாக, யு. என். பி. யின் தமிழ் இன ஒழிப்புத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வருபவர்களும், தமிழ் மொழியின் உரிமையையும் அந்தஸ்தையும் கடந்த ஆனி மாதத்தில் ''சிங்களம் மட்டும்'' சட்டத்தின் மூலம் அழித் தொழித்தவர்களுமான எம். ஈ. பி. யினர் நான்காவது காரணஸ்தர்.

இந்த நான்கு பிரிவினருள் கடைசியாகவுள்ள எம். ஈ. பி குழுவினரின் தலைவர் திரு. பண்டாரநாயகா 'சிங்களம் மட்டும்' சட்டத்தை கொண்டுவந்ததன் மூலந்தான் நாட்டில் இன்றைய கொந்தளிப்பு நிலை கொதிப்பு நிலையையடைந்திருக்கிறது. இந்தக் கொதிப்பு நிலையைப்போக்கி சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையே சுமுகமான கூட்டுறவை ஏற்படுத்தி, கூட்டாட்சி மூலம் நாட்டில் நல்லாட்சி மலர வழி செய்வதற்காகவே ஆகஸ்ட் போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளார்கள் தமிழரசுக் கட்சியினர். சத்தியாக்கிரகத் தத்துவத்தின்படி சாத்வீகப் போராட்டம் மேற்கொள்ளப் படுமாகையால் குழப்பம் என்ற பேச்சிற்கு இடமேயில்லை. குழப்பம் ஏற்படுவதாயிருந்தால் அது ஆட்சியாளரின் ஆதரவுபெற்ற குண்டர்களாலேதான் ஏற்படவேண்டும். அப்படியேற்படுவதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. தடுப்பதற்குச் சுலபமான வழி, தமிழரசுக் கட்சியினர் தமது நியாயப் பூர்வமான போராட்டத்தைக் கைவிடவேண்டும் என்று கேட்பதல்ல: இப்போராட்டத்திற்கு காரணமாயுள்ள 'சிங்களம் மட்டும்' சட்டம், சிங்களக் குடியேற்றம், போன்றவற்றை உடனடியாகக் கைவிடுவதும், மலைநாட்டு மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்னையைத் தீர்ப்பதும்,சமஷ்டி ஆட்சி ஏற்பட வழிவகுப்பதுமேயாகும்.

இவற்றை விடுத்து ''நியாயமான அளவு தமிழ் பிரயோகத்தை'' ஆலோசியுங்கள் என்று கேட்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோன்ற செய்கையாகும். அரசாங்கத்தின் எந்த வாக்குறுதியையும் நம்பி தமிழ் பேசும் மக்கள் போராட்டத்தைக் கைவிடும் நிலையில் அவர்கள் இல்லை. இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து சிங்கள அரசியல் வாதிகள் தமிழ்பேசும் மக்களைத் திட்டமிட்டு ஏமாற்றி வந்திருக்கிறார்கள். இந்த ஏமாற்று வித்தை மேலுந் தொடர்ந்து கொண்டே போகிறது. நம்பி நம்பிக்கெட்டழிந்த ஒரு சமூகமாகிவிட்டது தமிழ் பேசும் இனம். இன்னுமின்னும் நம்பி ஏமாற அது தயாராயில்லை.

கபினட் ஆட்சி முறையில் மந்திரிகளுக்கு கூட்டுப்பொறுப்பு உண்டு என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒருபுறம் பிரதமர் திரு. பண்டாரநாயகா நியாயமான அளவுதமிழ்ப் பிரயோகம்பற்றித் தமது நான்கு அம்சத் திட்டத்தை வெளியிட்டுத் தமிழ்பேசும் மக்களை இன்னொருமுறை ஏமாற்றப் பார்க்கிறார். மறுபுறம் உணவு மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன அரசாங்கத்தின் அந்தரங்கத்தைச் சிங்கள மக்களுக்கு வெளியிட்டிருக்கிறார்:




அம்பலம்:

# “லெட்டர் ஹெட்” சங்கங்கள்

# விலாசம் இல்லாத ‘ஈழத் தமிழர் முன்னணி’

(ஒரு அரசியல் விமர்சகர்)

தமிழ் பேசும் இனத்தின் ஆகஸ்ட் போராட்டத்தைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் நோக்கத்திற்கு, தமிழ் பேசும் இனத்தின் விபீஷணர்களான சிலரும் உடந்தையாகக் காரியமாற்றிவருகிறார்கள். தமிழரசுக் கட்சி மீது இத்தகையோர்களுக்கு உள்ள ஆத்திரம் எல்லாம் தங்களையும் ஒரு மனிதராக மதித்து தமிழரசுக் கட்சி அழைப்பு விடவில்லையேஎன்பதுதான். இது எவ்வளவு தவறான குற்றச்சாட்டு! தனி மனிதர்களையெல்லாம் ஒரு கட்சிஅழைத்துப் பேசி முடிவு செய்வதென்றால் அது சாத்தியமா? பொதுவாகத் தமிழரசுக் கட்சி ஆகஸ்ட் போராட்டத்திற்கு உதவுமாறு சகலரையும் கேட்டுள்ளது. தமிழையும் தமிழினத்தையும் காப்பாற்றவேண்டும் என்று உண்மையான அக்கறை யாருக்காவது இருந்தால் அவர்கள் அழைப்புவரும் வரை காத்திருக்கவேண்டுமா? தமிழ்ப் பணி புரிய அவர்கள் அழையாமலே குதித்தோடி வரவேண்டாமா?

தலைவீங்கித் தனத்தினால்-தற்பெருமையினால்-தமிழரசுக் கட்சி மீது அதிருப்தி கொண்ட சிலர் தமிழரசுக் கட்சியின் செயல் திட்டங்களில் ஓட்டை காண்பதையே தங்கள் பணியாகக்கொண்டு பத்திரிகைகளில் அறிக்கைகள் விட்டுவருகிறார்கள். தமிழரசுக் கட்சியின் திட்டங்கள் சரியானவை அல்ல என்று கண்டால் மாற்றுத் திட்டங்கள் வெளியிட இவர்களுக்கு சக்தியுமில்லைத் திராணியும் இல்லை. இத்தகைய வரட்டுப் பேர்வழிகளிடம் கடன்பட்ட பத்திரிகை ஆசிரியர்கள் சிலர் அவர்களுடைய செல்லாக்காசு. அறிக்கைகளுக்கு தங்கள் பத்திரிகைகளில் ஏழு எட்டுப் பந்திகளை ஒதுக்கி, நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

இப்படியாகத்தான் அகில இலங்கைத் தமிழ்ச் சங்கம் என்ற ஒரு இல்லாத ஸ்தாபனத்தின்பெயரால்சிலவாரங்களுக்கு முன்பு ஒரு பத்திரிகையில் நீண்ட அறிக்கையொன்று பிரசுரமாயிற்று.

கொழும்பில், கொழும்புத் தமிழ்ச் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. இதன் தலைவர் மதிப்புக்குரிய திரு கே. மதியாபரணம் அவர்களாவர். அகில இலங்கைத் தமிழ்ச் சங்கம் என்று ஒன்று இருக்கிறது இதன் தலைவர் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்களாவர். மூன்றாவது ஒரு சங்கம்—டுப்ளிக்கேட் சங்கம்—அகில இலங்கைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயரில் பத்திரிகையில் மட்டும் முளைத்திருக்கிறது. இதன் தலைவர் யாரோ ஒரு எம். பி. பாரதியாம்! வேடிக்கை! வேடிக்கை!

இந்த சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? யார் இதன் உறுப்பினர்கள்? உறுப்பினர்களின் தொகை என்ன? எங்கே தலைமைக் காரியாலயம்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இந்த செயற்கைத் தலைவரிடமிருந்து பதில் கிடைக்க முடியுமா என்று சவால் விட விரும்புகிறோம். அப்படி இருந்தால் அந்த விவரங்களை அவர் சுதந்திரன் வாயிலாக வெளியிட முன்வருவாரா!

கடிதத் தலைப்பை மட்டும் அச்சிட்டு வைத்திருக்கும் இந்த ''லெட்டஹெட்'' சங்கத்திற்கு ஏழு கலம் எட்டுக் கலம் முக்கியத்துவம் கொடுக்கும் அந்த ஆசிரியரையும் அவர் தம் பத்திரிகையையும் பற்றி தமிழ் மக்கள் காறி உமிழ வேண்டாமா?

இதே போலவே ''ஈழத் தமிழர் முன்னணி'' என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தின் அறிக்கைகள் சில பத்திரிகைகளிலும், இலங்கை வானொலியின் தமிழ்ப் பகுதியிலும் அடிபட்டன சில வாரங்களுக்கு முன்பு. நாம் விசாரித்துப் பார்த்ததில் அந்த ஸ்தாபனத்தின் விலாசமே தெரியவில்லை வானொலி நிலையத்துக்குக் கொடுக்கப்பட்ட விலாசத்தில் சென்று பார்த்தபோது ஸ்தாபனமுமில்லை. சம்பந்தப்பட்ட அறிக்கையில் கையெழுத்துப்போட்ட ஆளும் இல்லை.

இப்படியான போலிச் சங்கங்களுக்கும் முன்னணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் தியாகத்தின் மீதும், ஓயா உழைப்பின் மீதும் கட்டியெழுப்பப்பட்ட தமிழரசுக் கட்சியின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைபோட முனைகின்றன சில பத்திரிகைகளும், இலங்கை வானொலியும். இப்படியான சதிச் செயல் தமிழ் இனத்திற்குச் செய்யும் துரோகச் செயலாகும்.

எனவே தமிழ் பேசும் மக்கள் தங்களிடமே தோன்றியுள்ள இத்தகைய துரோகிகள் கூட்டத்திடம் விழிப்பாய் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

கடந்த திங்கட்கிழமை உணவு மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன களனியிலுள்ள வித்தியாலங்காரப் பிரிவேனாவின் பரிசளிப்பு விழாவில் கூறியிருப்பதைத் தமிழ் மக்கள் அறியவேண்டும்:

"If the country was toexist truly united there must by necessity, be only one language. Our Tamil brotheren ought to realise that some day there should be only one language in Ceylon, and that must, nenecessarily, be the majority language"

*Times of Ceylon* 18-6-57

''நாடு உண்மையாக ஐக்கியப்பட்டு இருக்க வேண்டுமானால் ஒரே ஒரு பாஷை மட்டுந்தான் அந்த நாட்டில் இருப்பது அவசியமாகும். என்றோ ஒரு நாள் இலங்கையில் ஒரே ஒரு மொழி மட்டுந்தான் இருக்க வேண்டும் என்பதையும் அப்படி இருக்க வேண்டிய மொழி பெரும்பான்மையினருடைய மொழியாகவே இருக்கும் என்பதையும் நமது தமிழ் சகோதரர்கள் உணர வேண்டும்''

டைம்ஸ் ஒப் ஸிலோன் 18-6-57

இந்த நிலையில் அரசாங்கத்தின் நான்கு அம்ச வாக்குறுதிகளினாலும், சட்டங்களினாலும் என்ன பயன்? இந்த மனோபாவத்தான் அரசாங்கத்தின் அந்தரங்கம் என்பதைப் புத்தி சொல்லும் பிரமுகர்கள் உணர்வார்களானால் ஒரு சுயாட்சித் தமிழரசுக்காகப் போராட வேண்டியதன் அவசியத்தை அவர்களும் உணர்ந்தவர்கள் ஆவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாக்அவுட்'-சக்திமிக்க அரசியல் எதிர்ப்பு ஆயுதம்!

## மிக முக்கியமான வேளையில் கச்சிதமாகக் கையாண்டனர் தமிழரசுக் கட்சியினர்

### பாராளுமன்றத் திறப்பு விழாவில் தமிழ் புறக்கணிக்கப்பட்டதின் எதிரொலி

இலங்கையின் மூன்ருவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரைத் தேசாதிபதி சர் ஒலிவர் குணதிலகா 13-6-57 வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்து சிங்களத்தில் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தத் தொடங்கும் போது தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் அனைவரும் சபையை விட்டு வெளியேறினார்களல்லவா?

இது பற்றிப் பலரிடையே பலதரப்பட்ட அபிப்பிராயம் நிலவியது. குழப்பமடைந்தவர்களுக்கு விளக்கம் கொடுக்க உதவும் என்ற நம்பிக்கையில் பிரஸ்தாப சம்பவம் பற்றி யாழ்ப்பாணத் தமிழன்பர் ஒருவர் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி யொருவரோடு அன்றைய தினம் பாராளுமன்றக் கட்டடத்துள்ளேயே நடத்திய சம்பாஷணைக்குக் காது கொடுத்த சுதந்திரன் நிருபர் இங்கே அதை அப்படியே தருகிருர்.

"'சார், முதல் கோணல் முற்றும் கோணல்' என்று சொல்வார்களே, அது அரசியலுக்கும் பொருந்துமல்லவா?"

"அரசியலுக்கு அது பொருந்துமோ இல்லையோ எனக்குத் தெரியாதப்பனே. ஆனல் இலங்கை அரசியலை எடுத்துக்கொண்டால் இதற்கு இடமேயில்லை. ஏனெனில் அது ஏற்கனவே கோணிவிட்டது. தமிழ் பேசும் மக்களைச் சுற்றிவளைத்து நசுக்குமளவுக்கு கோணிவிட்டது. மேற்கொண்டு இனிக் கோண எங்கே இடமிருக்கிறது? அது போகட்டுமே. நீங்கள் எதற்காக இதைக் கேட்டீர்கள்?"

"பிரமாதமாக ஒன்றுமில்லை. சரியாகவோ பிழையாகவோ முதன்முதலாக ஒரு காரியத்தை ஆரம்பிக்கும்போது அதற்கு ஊறு செய்வதுபோன்று......?"

"எதைக் குறிப்பிடுகிறீர்கள்? நாம் அப்படி ஏதாவது செய்தோமா?"

"ஆமாம் இலங்கையின் மூன்ருவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை இன்று தேசாதிபதி ஆரம்பித்து வைத்து..."

"ஒகோ! அதுவா? ஆரம்பித்து வைத்து சிம்மாசனப் பிரசங்கத்தை சிங்களத்தில் நிகழ்த்தத் தொடங்கியவுடனே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் நாம் அனைவரும் வெளியேறினேமே, அது சரியில்லையென்கிறீர்களா?"

"அப்படி நான் சொல்லவில்லை. தேசாதிபதி சிங்களத்தில் பேசுகையில் நீங்கள் அதுபுரிந்தாலும் சரி புரியாவிட்டாலும்சரிகேட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவுமில்லை. நீங்கள் வேறுவிதமாக அன்று நடந்துகொண்டிருக்கலாம் என்பது என் அபிப்பிராயம்"

"சரி சொல்லுங்களேன், அது எப்படி?"

"தேசாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மாத்திரமே நிகழ்த்தப்படும் என்பதும் தமிழில் கண்டிப்பாக நிகழ்த்தப்படமாட்டாது என்பதும் உங்களுக்கு முன்னதாகவே தெரியுமல்லவா, எனவே சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்தப்படவிருந்த அன்று நீங்கள் அனைவரும் பாராளுமன்றக் கூட்டத்தை முற்ருகப் பகிஷ்கரித்திருக்கலாம். அதை விட்டுவிட்டு இதற்கு முன் எப்பொழுதுமே நடைபெருத ஒரு புதுவிதமாக நீங்கள் நடந்துகொள்வானேன்?"

"இது உங்களுக்குப் புதுமையாகத் தோன்றினலும் ஜனநாயக அரசியல் முறையில் இதைப் புதுமை என்று சொல்வதற்கில்லை. இந்த வெளியேற்றம் இருக்கிறதல்லவா, இது காந்தியடிகள் கண்டுபிடித்த சக்திவாய்ந்த அரசியல் எதிர்ப்பு ஆயுதங்களில் ஒன்று"

"என்ன காந்தி கண்டுபிடித்த எதிர்ப்பு ஆயுதமா?"

"ஆமாம். இதால் யாருக்கும் கெடுதியில்லை. பண்பாட்டை விரும்புகிறவர்கள், கடமை—கண்ணியத்தைக் கடைப்பிடிப்பவர்கள் கைக்கொள்ளத் தகுந்த ஆயுதம் இது"

"நீங்கள் ஏதோ செய்தது செய்ததுதான். அதற்குக் காரணம் கூறுகிறீர்கள்"

"அப்படியொன்றுமில்லை. நாம் எதையுமே ஆலோசிக்காமல் செய்வதில்லை உங்களுக்கு ஒன்று சொல்கிறேன், அரசியல் அரங்கிலே வெளியேற்ற நாடகத்துக்கு உள்ள சக்தி அலாதியானது. ஒரு விஷயத்தை நாம் ஆட்சேபிக்கிருேம்—அது வேண்டாம்' என்று ஆயிரம் தடவை கத்துவதுகூடத் தரமுடியாத பலனை எல்லாம் ஒரு வெளியேற்ற நாடகம் தந்துவிடும். உள்ளத்தில் இருப்பதை உறைப்பாகச் சொல்லுவதற்கு இதைக் காட்டிலும் சிறந்த வழி வேறு கிடையாது. இதை வேறுவிதமாகச் சொன்னல் 'இல்லை அல்லது வேண்டாம்' என்று வாயால் கத்துவதற்குப் பதிலாகக் காலால் கத்துவதுதான் வெளியேற்றம் ஆங்கிலதில் வாக் அவுட் என்று சொல்லப்படுவது. வாயால் கத்தினல் சத்தத்தைக் கேட்கலாம்; காலால் கத்தினல் காணலாம். அவ்வளவுதான் வித்தியாசம்"

"எனக்கு என்னமோ..."

"இன்னமும் சந்தேகமாயிருக்கிறது. அப்படித்தானே?"

"என்ன சார்? ஒரேயடியாக இப்படிச் சொல்லிவிட்டீர்கள்!"

"பரவாயில்லை புரியும்படி சொல்கிறேன் நாங்கள் சிம்மாசனப் பிரசங்கம் சிங்களத்தில் ஆரம்பமான போது வெளியேறியதன் மூலகாரணம் நம் முன்னிலையில் தமிழ் தாழ்த்தப்படுவதையும் அதன் உரிமை பறிக்கப்படுவதையும் காண சகியோம் என்பதை அனைவருக்கும் எடுத்துக் காட்ட வேண்டுமென்ற எண்ணந்தான். கூட்டத்துக்கு ஊறு செய்ய வேண்டுமென்பதல்ல. நாம் அன்று பாராளுமன்றத்தை முற்ருகப் பகிஷ்கரித்திருந்தால் இது விஷயம் நம்மோடு நின்றுவிடுகிறது. அது மட்டுமல்லாமல் பாராளுமன்ற நிகழ்ச்சிக் குறிப்பேட்டிலும் இடம் பெருது போகும். இப்பொழுது சொல்லுங்கள் நாம் நடந்துகொண்ட மாதிரி பொருத்தமானதா அல்லவா என்று."

"சே! இந்த விஷயமெல்லாம் எனக்கு முன்பு தட்டுப்படவில்லையே. யாரோ சிலர் நீங்கள் செய்தது பாராளுமன்ற [illegible] மானது; உலகில் எங்குமே [illegible] எல்லாம் பேசக் கேட்டேன்.

(12-ம் பக்கம் பார்க்க)

### பெரியாரின் திண்டாட்டம்

திருச்சியில் நடந்த ஜாதி ஒழிப்பு மகாநாட்டில் ஈ. வெ. ரா பேசுகையில் கீழ் கண்டவாறு குறிப்பிட்டார்.

"காமராஜரை ஆதரிப்பதால் நான் மிகவும் கவலைப் படுகிறேன்.

வெளியே சொல்லக்கூட வெட்கமாக இருக்கிறது. இப்போது என்னுடைய நிலைமை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கிறது."

அவர் மேலும் பேசியதாவது "திராவிடநாடு பிரிவினையை காமராஜர் எதிர்க்கிருர்" திராவிட நாடு பிரிவினையால் நாட்டுக்கு கஷ்டம் ஏற்படும்" என்று அவர் (காமராஜர்) பேசி இருக்கிருர். ஆனல் திராவிட கழகத்தின் கொள்கை இனத காமராஜர் கடுமையாக எதிர்க்கிருர்.

## அண்ணு—ராஜாஜிக்கு லோகியாவின் அழைப்பு!

### ஆகஸ்ட் போராட்டத்தில் கலந்து கொள்ள!!

#### மந்திரி பக்தவத்ஸலம் கிண்டல்

இந்திய சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு லோகியா சென்னை இராச்சியத்தின் பெயரைத் தமிழ் நாடு என்று மாற்ற வேண்டுமென்றும் மற்றும் 17 கோரிக்கைகளை வற்புறுத்தியும் எதிர்வரும் ஆகஸ்ட்டில் ஒரு போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தாரல்லவா? இப்போராட்டத்தில் கலந்து கொள்ள தி. மு. க. தலைவர் திரு சி. என். அண்ணுத்துரையையும் திரு இராசகோபாலாச்சாரியாரையும் அவர் அழைத்திருக்கிருர்.

சோஷலிஸ்ட்கட்சி நடத்தவிருக்கும் உத்தேச ஆகஸ்ட் போராட்டத்தை சென்னை இராச்சியத்தின்பெயர் மாற்றம் சம்பந்தப்பட்ட மட்டில் திரு அண்ணுத்துரை ஆதரித்துப் பேசியதும், தமிழ் நாட்டில் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள ஒரே கட்சியான தி. மு க போராட்டத்தில் பங்கு கொள்ளவிட்டால் அது வெற்றிபெறுமென்று கூறியதும் தெரிந்ததே.

இதையடுத்து திரு லோகியா ஒரு கூட்டத்தில் பேசுகையில் சொன்னதாவது:

"18 அம்சக் கோரிக்கைகளுக்காகச் சோஷலிஸ்டு கட்சி போராட்டம் நடத்தப் போகிறது. சென்னைக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்ற கோரிக்கையும் இதில் ஒன்று. இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு அளிப்பதாகத் திரு. அண்ணுத்துரை கூறியிருக்கிருர்.

#### ஒன்றை ஆதரிப்பது போதாது

சோஷலிஸ்டு கட்சியின் மற்ற கோரிக்கைகளையும் போராட்ட திட்டங்களை தி. மு. க தலைவர் அண்ணுத்துரை யோசிக்கவேண்டும்.

ஏற்கனவே நான் (லோகியா) அண்ணுத்துரையை சந்தித்து பேசியிருக்கிறேன் சோஷலிஸ்டு கட்சியின் 18 அம்ச போராட்ட திட்டங்கள் பற்றி மீண்டும் நான் அண்ணுதுரையை சந்தித்துப் பேசவிரும்புகிறேன். சோஷலிஸ்டுகட்சியின் 18 அம்ச போராட்ட திட்டங்களில் ஒன்றை மட்டும் அண்ணுதுரை ஆதரிப்பதை விட எல்லாவற்றையும் ஆதரிப்பது பற்றி அவர் யோசிப்பது நல்லது."

இவ்வாறு லோகியா கூறினர்

#### பக்தவத்சலம் கிண்டல்

இந்த நிலையில் திரு. அண்ணுத்துரை சோஷலிஸ்டு கட்சிப் போராட்டத்தில் கலந்துகொள்ளச் சம்மதிப்பாரா என்ற சந்தேகம் தென்னுட்டு அரசியல் வட்டாரங்களில் பலமாக அடிபட்டு வருகிறது.

ஆனல் சென்னை மந்திரி திரு பக்தவத்சலம் அணிமையில் வடஆற்காடு காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் பேசுகையில் அறிஞரும் லோகியாவும் ஒன்றுசேரப் போகிருர்களாமே என்று கிண்டலாகச் சொன்னர்.

#### ராஜாஜிக்கு அழைப்பு

திரு லோகியா தமது உத்தேச ஆகஸ்ட் போராட்டத்தில் கலந்துகொள்ளத் திரு இராசகோபாலாச்சாரியாரையும் அழைத்திருக்கிருர்; "வேலை கொடு அல்லது சோறுபோடு, வரிப்பளு வைக்குறை" என்பன போன்ற கோரிக்கைகளுக்காகவும் சோஷலிஸ்டு கட்சி போராட்டம் நடத்த இருப்பதால் மத்திய அரசாங்கத் [illegible]ன்வரித்திட்டத்தைஎதிர்க்கும் இராசகோபாலாச்சாரி போன்ற அரசியல் மேதைகள் தமது போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று விரும்பி அன்னருக்கு அழைப்பு அனுப்பியிருக்கிருர். ராஜாஜி வெறும் பேச்சோடு நிறுத்திக் கொள்ளாமல் செயலில் இறங்கி அவசியம் ஏற்பட்டால் சிறைக்குக்கூட செல்லவும் வேண்டுமென்று திரு லோகியா அவருக்குச்சுட்டிக் காட்டியுள்ளார்.

மன மகிழ்ச்சியும் முக மலர்ச்சியும் மாதரிடையே நிலவ

★ மதிப்பிற்குரிய மணிப்புரி சாரிகளும்
★ பெருமை மிக்க பெங்களூர் சாரிகளும்
★ கவர்ச்சி மிக்க காஞ்சிபுரம் சாரிகளும்

அவசியம் தேவை.

இவற்றை எங்கள் ரஞ்சனுஸ் ஜவுளி மாளிகையில் தங்கள் தகுதிக்கேற்ற மாதிரியில் பெறலாம்.

சாரிகளுக்கு ஏற்ற சோளியும் கிடைக்கும்.

ரஞ்சனுஸ்டோர்ஸ்,

52, பேங்ஷால் வீதி, கொழும்பு - 11.

போன்: 6531.

வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு

ஓர் அறிவித்தல்

★ எங்களிடம் ஆங்கில மருந்து வகைகள் டிஞ்சர்ஸ், சல்பா மாத்திரைகள், பெனிஸிலின் போன்ற ஊசி மருந்துகள் புதியனவாகக் கிடைக்கும்.

★ நாங்கள் வி. பி. மூலமாகவும் மருந்துகள் அனுப்புவதால், நீங்கள் உங்கள் இடத்திலிருந்தவாறே ஓடர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

★ எங்கள் ஸ்தாபனம், மருந்துச்சாலை தொழிலில் 20 வருஷங்களுக்கு மேலாக அனுபவமுள்ளவர்களால் நடத்தப்படுவதால் உங்கள் ஓடர்கள் எவ்வகையானதாக இருந்தாலும் மிகக் கவனமுடனும் உடனுக்குடனும் கவனிக்கப்படுகிறது.

ஓர் முறை விஜயம் செய்து பாருங்கள் அல்லது ஓடர் அனுப்புங்கள். திருப்தியடைவீர்கள்.

பெட்டா பார்மஸி
இங்கிலீஷ் மருந்து ஷாப்
23. டாம் வீதி. கொழும்பு-12.

தந்தி: Tinctures. போன்: 7213.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஷ்டி அரசமைப்பிலேயே சிறுபான்மை இனம் பாதுகாக்கப்படும்— —சென்ற வாரத் தொடர்ச்சி

# உயிரை, உரிமையை, உடைமையை பாதுகாக்கவே போராட்டம்

## இதை வகுப்பு வாதமென்று வர்ணிக்கும் தோழர்கள் பம்பாயில் என்ன செய்தார்கள்?

## மராத்தியருக்கும் குஜராத்தியருக்கும் தனித்தனி மொழிவழி இராச்சியம் கோரி இரத்தம் சிந்தவும் செய்தார்களே - அது என்ன வாதமோ?

## இந்தியாவைத் துண்டாடும் முயற்சியில் முஸ்லிம்களுக்கு ஆதரவளித்த 'டுஸ்னியும்கொ'களுக்கு இணைந்து வாழும் தமிழரசுக் கோரிக்கை மட்டும் கசப்பானேன்?

செ. குமாரசாமி

நாம் பேசுவது வகுப்பு வாதம் என்று குறை கூறுபவர்களுக்கு கூறுகின்றோம், சிங்கள வகுப்பு மக்களுக்கு இல்லாத உரிமை எதையும் எம் வகுப்பு மக்களுக்கு நாம் கோரவில்லை. ஏற்கனவே உள்ள எமது உரிமைகள் சூறையாடப்படுகின்றன; எங்கள் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. நிறுத்துங்கள் இந்தக் கொள்ளையை என்று தான் கூவுகிறோம் இது வகுப்புவாதமா?

20 வருடங்களுக்கு மேலாக மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வந்த பிரஜாஉரிமையைப் பறித்தார்கள் பறித்த உரிமையைத் திரும்பக் கொடு என்று கேட்கிறோம். புதிதாக எதையும் நாம் கோரவில்லை.

150 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டிலே சிங்களத்தோடு தமிழுக்கிருந்த சமஅந்தஸ்தைப் பறித்தார்கள். பறித்த உரிமையை திரும்பிக் கொடு என்று கேட்கிறோம். புதிதாக எதையும் நாம் கோரவில்லை.

2000 ஆண்டுகளாக நாம் அனுபவித்து வந்த நம் பொன்கொழிக்கும் பூமியை கொள்ளையடிக்கிறார்கள். எம்மைக் கொள்ளையடிப்பதை நிறுத்துங்கள் என்று தான் கேட்கிறோம். புதிதாக எதையும் நாம் கோரவில்லை.

### என்ன பெயர்

எமது வீடு சூறையாடப்படுகிறது; எமது தொண்டை திருகப்படுகிறது. இந்த நேரத்திலே, எமது உயிரையும் உடமையையும் பாதுகாக்க நாம் போராடுகிறோம். இது வகுப்புவாதமா? எமது தற்காப்புக்காக நாம் போராடுவது வகுப்புவாதமானல் எம்மை ஆக்கிரமிக்கும் சிங்கள வெறிக்கு என்ன பெயர்? இந்தச் சிங்கள வெறிபிடித்தவர்களுடன் கைகோத்துக் குலவி வரும் நம் டுஸ்னியும்கொ தோழர்களுக்கு என்ன பெயர்? நாம் வகுப்புவாதிகளானல் உங்கள் இலட்சணத்தில். எம்மை வகுப்புவாதிகள் என்று கூற உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது தோழர்களே? திற்க.

### பெருமையில் பங்கு

இந்த நாட்டில் மாத்திரமல்ல, இந்தப் பரந்த உலகமனைத்திலுமே—புதிதாகஒரு உரிமை கோரியல்ல—ஏற்கனவே எமக்கிருக்கும் உரிமைகளை இன்னொருவன் கொள்ளையடிப்பதை எதிர்த்து நின்று, எமது உரிமையை நாம் தொடர்ந்து அனுபவிக்கப் போராடுவது வகுப்புவாதமானல், நாம் வகுப்புவாதத்தை வரவேற்கிறோம். எம்மை வகுப்புவாதிகள் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிறோம்; பெருமிதம் காண்கிறோம்!

ஆனல் இந்தப் பெருமையையும் பெருமிதத்தையும் நாம் மாத்திரம் தனித்து அனுபவிக்கவில்லை என்பதையும் எடுத்துக் கூற விரும்புகிறோம். எமது கம்யூனிஸ்ட். தோழர்களுடன்தான் இந்த வகுப்புவாதப் பெருமையைப் பகிர்ந்துகொள்ளுகிறோம்.

### 'விழல்'நியாயம்

இந்தியா சுதந்திரத்திற்காகப் போராடியபொழுது, முஸ்லிம் வகுப்பு மக்கள் பெரும்பான்மை இந்து வகுப்பாரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை கோரிச் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடினர்கள். வகுப்புக் கலவரங்கள் கொழுந்துவிட்டெரிந்தன. லட்சக்கணக்கான இந்து—முஸ்லிம் மக்களின் இரத்தப் பிரவாகத்திலே முஸ்லிம் வகுப்பாரின் சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரித்த மாக்ஸிஸ—லெனினிஸ—ஸ்டாலினிஸக் கோட்பாடுகள் இலங்கைத் தமிழ் பேசும்மக்களைப் பொறுத்தவரை மாத்திரம் வகுப்புவாதமாக வெளுறிவிட்டனவா? இந்திய நாட்டைப் பிளந்து துண்டாட இந்திய முஸ்லிம் மக்களுக்கு ஆதரவளித்த கம்யூனிஸ்ட் தோழர்கள், இந்த நாட்டிலே, பிளவுபடாத ஐக்கிய இலங்கையிலே இணைந்து வாழும் ஒரு சமஷ்டித் தமிழரசை ஏன் எதிர்க்கிருர்கள்?

இந்திய நாட்டின் முஸ்லிம் மக்களுக்கிருக்கும் சுயநிர்ணய உரிமை இலங்கை நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்கு மாத்திரம் வகுப்புவாதமாகிவிட்டதா? என்ன 'விழல்' நியாயம் தோழர்களே? எம்மை வகுப்புவாதிகள் என்று கூற என்ன உரிமை இருக்கிறது உங்களுக்கு?

### பம்பாய் இராச்சிய அமைப்பு சம்பந்தமாக....

அண்மையிலே நடந்த இன்னுமொரு உதாரணம் காண்பிக்க விரும்புகிறேன். 1956லே இந்தியாவிலே மொழிவழி இராச்சியங்கள் அமைக்கப்பட்டன. ஒரு மொழி மக்களுக்கு ஒரு இராச்சியம். ஆனல் 2கோடி மராத்தி மொழி பேசும் மக்களும் 1.6 கோடி குஜராத்தி மொழி பேசும் மக்களும் சேர்ந்து வாழும் இரு மொழி இராச்சியமாக—இராணுவ முக்கியத்துவம் கருதி—பம்பாய் இராச்சியம் அமைந்தது இந்த அமைப்பை எதிர்த்து மராத்தி மொழி மக்களுக்கு ஒரு தனி இராச்சியம் அமையுங்கள்; குஜராத்தி மொழி பேசும் மக்களுக்கு இன்னெருமொழிவழி இராச்சியம் அமையுங்கள் என்று கூறி, குஜராத்தி வகுப்பு மக்களுக்கும் மராத்தி வகுப்பு மக்களுக்குமாக வகுப்புவாதம் பேசிய கம்யூனிஸ்ட் தோழர்களின் பெருமையிலே, தனிமொழித் தமிழ் இராச்சியம் அமையுங்கள் என்று கூறும் நாமும் பெருமையடைகிறோம்; பெருமிதம் காண்கிறோம்!

எனவே, வகுப்புவாதிகள் என்று எம்மீது பழிசுமத்தும் தோழர்களைக் கேட்கிறோம்: உங்கள் வகுப்புவாதம்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

### புறமுதுகில் குத்தாதீர்

இனிமைத் தமிழ் பேசும் இந்த தோழர்களைக் கேட்கிறோம்; பம்பாய் இராச்சியத்தைத் துண்டாடி குஜராத்திய மராத்திய தனி மொழி இராச்சியங்கள் அமைக்கும்படி பம்பாயில் போராடிய கம்யூனிஸ்ட் சிங்கங்களைக் கேட்கிறோம்: பம்பாயில் நீங்கள் எந்தக் கொள்கைக்கும் எந்த இலட்சியத்திற்குமாகப் போராடிப் பொன்னன உங்கள் 'சிவப்புச்' செந்நீரைச் சிந்தி நூற்றுக்கணக்கானவர்களைப் பலிகொடுத்தீர்களோ, அதே கொள்கைக்கும் இலட்சியத்திற்குமாக இன்று நாம் இந்த நாட்டிலே போர்க்களம் குதிக்கிறோம்; அருமைத் தோழர்களே! நீங்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டாம். சிங்கள வகுப்பு வெறிக்கும் சிங்க ரெஜிமென்டின் (Sinha Regiment) துப்பாக்கி ரவைகளுக்கும் எம் வீரத் தமிழ் நெஞ்சங்களைத் திறந்து கொடுக்கும் பொழுது, தோழர்களே! எங்களைப் பின்னல் ஒழித்திருந்து புறமுதுகில் குத்திவிடாதீர்கள் என்றுதான் கோருகிறோம்!! காட்டிக்கொடுக்கும்காக்கை வன்னியர்களாகிவிடாதீர்கள் என்றுதான் நாம் எழுப்பும் கூக்குரல். இதுதான் இந்தப் பயங்கர வேளையிலே உங்களுக்கு நாம் விடுக்கும் அறைகூவல்.

### தலைவர்கள் நம் பக்கம்

இந்த எமது போராட்டத்திலே முதல்தர கம்யூனிஸ்ட் தலைவர்கள் எம் பக்கத்தில்தான் நிற்கிருர்கள்; உம் பக்கத்திலல்ல. போலந்தின் கொமுல்க்காவும், யூகோஸ்லாவிய டிட்டோவும்போராடிய இலட்சியத்திற்காகத்தான் நாமும் போராடுகிறோம் நாம் இதிலே தனித்து நிற்கவில்லை.

கடைசியாக எமது தோழர்கள் குழப்பிவிட்ட குட்டையிலே உண்மை நிலையை மறந்து கலங்கி நிற்கும் சில (கம்யூனிஸ்ட்) அனுதாபிகளுக்கு ஒரு வேண்டுகோள்!

### நாம் கோரும் தமிழரசு

அருமை நண்பர்களே! ஆரம்பத்திலே, கம்யூனிஸத் தாய்நாட்டிலே சமஷ்டி ஆட்சி எவ்வளவு மகோன்னத நிலையை அடைந்துவிட்டது என்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அந்நாட்டு மக்கள் இனங்கள் தத்தம் நல்வுரிமைகளைப் பேணி வளர்க்கையிலே—அதேசமயத்திலே—சோவியத் ருஷ்யத் திருநாட்டையும் எவ்வாறு கட்டி எழுப்பினர்கள் என்பதையும் குறிப்பிட்டேன். இங்கிருப்பது போல, நாம் கோரும் தமிழரசு எந்தக் கம்யூனிஸக் கோட்பாட்டிற்கோ அல்லது இந்த நாட்டிலே சோஷலிஸம் வளர்ச்சி பெறுவதற்கோ எந்தவிதத்திலும் இடையூருக நிற்கவில்லை.

### அரசியல் விடுதலை முதலில்

இன்னும் சுரண்டலற்ற சோஷலிஸ சமுதாய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையிலே முதற்படியில் நிற்கும் ஸ்தாபனம் சமஷ்டி ஆட்சி யார் விரும்பினலும் சரி விரும்பாதுவிட்டாலும் சரி, இந்த உலகின் எதிர்காலச் சமுதாய அமைப்பு கம்யூனிஸக் கோட்பாடுகளின் அத்திவாரத்தில்தான் கட்டியெழுப்பப்படும். இது பற்றி யாரும் சந்தேகப்படதேவையில்லை. கவலை தெரிவிக்க இடமுமில்லை. ஆனல் இலங்கைத் தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்த அள

(15-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த-இந்து மதக் கலகம்

புத்த மதத்துக்கு மாறியவர்களுக்கும், இந்துக்களுக்கும் இந்தியாவில் கலகம் மூண்ட போது, பழைய காங்கிரஸ் பிரமுகர் (எம். எல். ஏ.) ஒருவரின் வீட்டுக்கு யாரோ தீ வைத்து கொளுத்தினர்கள் இந்த கலகம் சம்பந்தமாக 400 பேருக்கு மேல்கைது செய்யப்பட்டு இருக்கிருர்கள்.

கலகம் "யாவ்லி" என்னும் இடத்தில் நடந்தது.

புத்த மதத்துக்கு புதிதாக மாறிய சிலர், ஊர் வலமாக போனர்கள். அவர்கள் இந்து சாமிகளை தாக்கி கோஷம் போட்டுக் கொண்டு போனர்கள் என்று கூறப்படுகிறது. இதனல் இந்துக்கள் ஆத்திரம் அடைய கலகம் ஏற்பட்டது என்று கூறப்பட்டது

கலகத்தின் போது ஒருவரை ஒருவர் ஈட்டியால் தாக்கினர்கள்; தடியால் அடித்தார்கள் இதன் விளைவாக ஒருவர் செத்தார். 24 பேர் காயம் அடைந்தார்கள்.

கலகத்தை அடக்க முயற்சித்த ஒரு பொலீஸ் அதிகாரியும், 8 பொலீஸ்காரர்களும் காயம் அடைந்தார்கள்.

மத்திய பிரதேச சட்டசபை மெம்பராக இருந்த காங்கிரஸ்காரர் ஒருவருடைய வீடு கொளுத்தப்பட்டது.

கலகம் சம்பந்தமாக 400 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

கலகம் அடங்கிவிட்டது, சில இடங்களில் சில்லரை கைகலப்புகள் நடக்கின்றன. இவைகளை தடுக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று பெரிய அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

## மானம் ஒன்றே...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"அல்லற்பட்டாற்ருதழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

முன்பு தமிழ் நாட்டுக் கற்புக்கரசி கண்ணகிக்குப் பாண்டிய மன்னன் தீங்கிழைத்தான்; அல்லற்பட்டு ஆற்ருது அவள் அழுதாள். அவள் கண்ணீர் மதுரையையே அழித்தது. இன்று வட பகுதியிலே புகையிலைத் தோட்டங்களிலும், கிழக்குப் பகுதியில் கல்லோயாப் பள்ளத்தாக்கிலும், மத்தியப் பகுதியில் இரப்பர் தேயிலைத் தோட்டங்களிலும் கொடுமை பொருது வடிக்கும் கண்ணீர் இந்த ஒற்றை ஆட்சி அரசாங்கத்தை வேரோடு அறுத்தே தீரும்.

### வெற்றியின்சின்னமாக சிரிப்பு

தமிழ்ப் பெருமக்களே, இன்றைய சூழ்நிலையைக் கண்டு ஏங்காதீர்கள். நாம் சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோமாயின் காந்தியண்ணல் கண்ட வெற்றி எமக்கும் எய்தும். எனவே. இடுக்கண் வருங்கால் நகுக. சிவபெருமான் முப்புரம் எரித்த பொழுது சிரித்த புன்முறுவலாக இருக்கட்டும் இச்சிரிப்பு—வெற்றியின் சின்னமாக.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்

ANANDA MEDICAL HALL 174 SEA STREET COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# சுமதியின் சமாதி

—"யோகம்"

காற்று பேரிரைச்சலுடன் கோரமாக வீசியது. தென்னை மரங்களின் ஓலைகளையெல்லாம் பிய்த்துப் பிடுங்கி வீசி விளையாடியது. வானத்திலே பூரண சந்திரன்! வெண் பஞ்சுக் குவியல் போன்ற முகில்கள் வேகமாக ஓடின.

அந்தச் சிறிய வீட்டில் சுமதி அமைதியின்றிப் புரண்டுகொண்டிருந்தாள். மேசையின்மேல் கைவிளக்கு எரிந்துகொண்டிருந்தது.

"ஏனடியம்மா இன்னும் விளக்கை அணைக்காமல் விட்டிருக்கிறாய். சும்மா இரவும் பகலும் எழுதி எழுதி என்னதான் கண்டாயோ. அந்தப் பேப்பர்காரன்கள் என்ன உனக்கு காசு கீசு அனுப்புகிறாங்களா? உன்னுடைய பைத்தியம்.........!" என்று வெறுப்புடன் முணுமுணுத்த சுமதியின் சிற்றன்னை மறுபுறம் திரும்பிப் படுத்தாள்.

எங்கோ தொலைவிலிருந்து காற்றோடு கலந்து வந்த

"நினைவே அவந் நினைவே
எனை நீங்காமல் உறவாடுதே
கண்கள் தூங்காமல்........."

என்ற பாட்டுக் கேட்டது. அவள் எழுந்து உட்கார்ந்து மேசைக்கு எதிரே இருந்த கணவனின் படத்தைப் பார்த்தாள்.

மறுகணம் அவள் சிந்தனை அலைகள் வானத்தில் ஓடும் வெண் முகில்களை முந்திக்கொண்டு வேகமாக ஓட ஆரம்பித்தன.

சுமதி ஏழை; ஆனால் அழகும், ஆற்றலும், இனிய குரலும், எழுதும் திறனும் உடையவள். அதனால்தான் சுதாகர் தன் சொந்த அத்தையின் மகளைக்கூட மணந்து கொள்ளாமல் எத்தனையோ பேருடைய வெறுப்புக்கிடையில் அவளை மணந்துகொண்டான்.

அன்றொரு நாள் மாலை அவன் அலுவலகத்திலிருந்து அலுத்துக் களைத்து வந்தான். அவள் அவன் காலடியில் உட்கார்ந்து சப்பாத்தைக் கழற்றினாள். அடுத்த கணம் கையில் தேநீருடன் அவன் அருகில் வந்து நின்றாள். அவன் அவளைப் பிடித்து கதிரையில் உட்கார வைத்து வழக்கம்போல் ஏதாவது குறும்பாகப் பேசுவான் என்றுதான் அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவன் வெறுப்புடன் அவளைப் பார்த்தான். "சுமதி நேற்று யார் இங்கு வந்தது" என்ற வார்த்தைகள் வெடித்தன.

"நேற்று...ஆமாம்...பத்திரிகையின் ஆசிரியர் வந்திருந்தார். உங்களிடம் சொல்ல வேண்டுமென்றுதான் இருந்தேன். மறந்துவிட்டேன்"

"ஆகா மறந்துவிட்டாயா? உன்னைப்பற்றி உலகம் என்ன பேசுகிறது தெரியுமா? பத்திரிகைத் தொடர்பே வேண்டாமென்று எத்தனை தடவை சொல்லிவிட்டேன்"

"தயவு செய்து மன்னித்து விடுங்கள். அந்த விஷயத்தில் குறுக்கிடாதீர்கள். இன்றைய நிலையில் சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாகப் பங்குகொள்ள முடியாதவள் நான். எனவே எழுத்து மூலமாவது......"

"நிறுத்து......! சுதந்திர இயக்கம்—போராட்டமாம்—சேவை செய்கிறாளாம். வேஷம் போடுகிறாயா, வெட்கம் கெட்டவளே? நீ அவனை ஒருகாலத்தில் காதலித்தாய். அந்தக் கோழை ஏழையான உன்னை மணந்துகொள்ள துணியவில்லை. வெட்கம் ரோசம் ஏதாவது உனக்குண்டா? விபசாரி........."

"போதும் நிறுத்துங்கள். நான் விபசாரியுமில்லை வேஷம் போடவுமில்லை. அவன் என் சொந்த அண்ணன்மாதிரி......"

"அண்ணனுமில்லே...அண்ணன். அதுதான் அவன் கடிதங்களைப் பெட்டிக்குள் பூட்டி வைத்து பூசை செய்கிறாய் இல்லையா? 'உங்களை விட உயர்ந்த பொருள் உலகில் இல்லை'யென்றாயே. அத்தனையும் ஜாலம்தானே?"

"எது வேண்டுமானாலும் சொல்லுங்கள் பொறுத்துக் கொள்ளுகிறேன். என்னை விபசாரி என்று மட்டும் சொல்லாதீர்கள்..." அவள் விக்கி விக்கி அழுதாள்.

"சுமதி, போனது போகட்டும். இனிமேலாவது எழுதுவதை நிறுத்திவிடு. அதோடு சனியன் எல்லாம் தொலைந்துவிடும்."

"அதை மட்டும் கேட்காதீர்கள். என்னால் முடியாது......"

"சீ நாயே...என்னைக்காட்டிலும் உனக்கு அது பெரிதாகிவிட்டதா?"

"காதலும் தேசத்தின் விடுதலையும் ஒரு பெண்ணுக்கு இரு கண்கள்போன்றவை"

'பேச்சு வேறா உனக்கு? போடி வெளியே நாயே. உன்னால் எனக்கு ஏற்படும் அவமானம்...? வெளியே தலைகாட்ட முடியவில்லை. போடி......போ......போய்த் தொலை" என்று அவள் தலையைப் பிடித்துத் தள்ளினான்.

"என்னால் உங்களுக்குச் சிரமம் வேண்டாம். நான் போகிறேன் ஆனால் ஒன்று. சுமதி குற்றமற்றவள் என்பதை மீண்டும் சொல்லிவிட்டுத்தான் போக ஆசைப்படுகிறேன்.

ஃ ஃ ஃ

சுமதி கணவனின் அன்பை இழந்து விட்டாள். அவன் நினைவு வரும்போது அவள் நெஞ்சம் வேதனையால் துடிக்கும். நினைவு வரும்போது என்று சொல்வது தவறு. அவனை அவள் மறந்ததேயில்லை. ஆனால் அவன்தான் அவளை மறந்துவிட்டானே! 'சுதாகர்! என் இதயராணி என்றெல்லாம் என்னை அழைத்தீர்களே, அவையெல்லாம் வெறும் கனவுதானா?' என்று முணுமுணுத்தாள். மறுகணம் பிரபல ருஷிய எழுத்தாளர் மார்க்ஸிம் கார்க்கியின் 'அம்மா' என்ற நாவலைப் படிக்க ஆரம்பித்துவிட்டாள். கார்க்கியின் கற்பனையிலே தோன்றிய பவலையும் அவனுடைய அன்னையையும் எண்ணியபோது அவள் நெஞ்சம் ஏதோ ஒருவித வேதனையால் துடித்தது. நம் நாட்டில் பவலைப் போன்ற வீரர்களும் அன்னையருமிருந்தாலோ என எண்ணினாள். மறுகணம் அவள் இதயத்து வேதனை மறைந்துவிட்டது. சுதந்திரக் கொடி பறக்கும் தன் இலட்சியத் திருநாடு கண் முன் வந்து நின்றது.

நாட்கள் ஓடிக்கொண்டேயிருந்தன. சாத்விகப் போராட்டத்தில் பங்கு கொள்ள துணிந்துவிட்டாள் அவள். தொண்டர் படையில் சேர்ந்தது மட்டுமல்ல, கிராமம் கிராமமாகச் சென்று நாட்டின் விடுதலை பற்றிப் போதிக்கவும் செய்தாள்.

அன்று ஆகஸ்ட் 20—ம் திகதி! சாத்விகப் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது. அவள் தொண்டர் படையினரின் மத்தியிலே கொடியேந்திச் சென்றாள். அவள் உள்ளத்திலே எல்லையற்ற திருப்தியும் பெருமையும் ஒளி வீசின. தான் பேசும் மொழியும், வாழும் நாடும் விடுதலையடையப்போவதாக எண்ணிக் களிப்புறுவனைகொண்டாள்.

ஒன்று இரண்டு என்று நாட்கள் மேலும் ஓடிக்கொண்டிருந்தன. அன்றொரு நாள் மாலை......அவள் போர்ப்படையின் முன்னணியில் சென்றுகொண்டிருக்கையில் திடீரென்று கேட்ட வெடிச் சத்தம் அவளைத் திடுக்கிட வைத்தது. 'சுதாகர்' என்று அலறியபடி அவள் கீழே விழுந்தாள்.

யாரோ ஒரு இன வெறியன் அவளைச் சுட்டுவிட்டு ஓடி மறைந்து விட்டான். சுமதியின் நெற்றியில் இரத்தம்வழிந்தோடியது. "சுமதி ...சுமதி! என்னசெய்கிறது?" கண்ணீர் பெருக்கிய கண்களுடன் கேட்டனர் ஏனையோர்.

"கவலைப்படாதீர்கள். இன்னும் எத்தனையோ பேருடைய குருதி பெருகி ஓடலாம், இரத்தக் கடலையே காண நேர்ந்தாலும் நம் உரிமையை இழக்க முடியாது......அண்ணா......" என்றாள் அவள். அதன்பின் அவள் பேசவேயில்லை. கழுத்தில் தொங்கிய தாலிச் சரட்டை கைகள் இறுக்கிப்பிடித்தன. வாய் மெதுவாக 'சுதாகர்' என்று முணுமுணுத்தது.

மறுநாள் சுமதி கண்களைத் திறந்தாள். அவை யாரையோ தேடி அலைந்தன. யாரோ ஒரு பெரியவர் மட்டும் கவலையுடன் அவள் அருகில் இருந்தார்.

"சுமதி...என்னவேணும்?" பெரியவர் கேட்டார்.

"அவர் வரமாட்டாரா?" அவள் குரல் நடுங்கியது, கண்கள் கண்ணீரைக் கக்கின.

"சுதாகர் தானே, இப்போது வந்துவிடுவான். நீ தந்த விலாசத்துக்கு அறிவித்திருக்கிறோம். பயப்படாதேயம்மா" என்று பெரியவர் ஆறுதல் கூறிக்கொண்டிருக்கும் போதே சுதாகர் உள்ளே வந்து விட்டான். அவன் முகத்தில் வேதனையோ துடிப்போ தெரியவில்லை. அவள் படுக்கையருகில் போய் நின்றான்.

"சுதாகர் இன்னும் அதிக நேரம் நான் பிழைத்திருக்க மாட்டேன். கடைசி நிமிஷத்தில் உங்கள் காலடியில் விழுந்து வணங்க முடியாதவளாய் இருக்கிறேன்......" ஈனக் குரலில் அவள் பேசினாள்.

"என் காலடியில் ஏன் நீ விழுந்து வணங்க வேண்டும். எவனால் எங்கள் வாழ்வு பாழானதோ அவன் சற்றுமுன் நான் வரும்போதுகூட உன் அருகில் நின்றானே அப்புறம் ஏன் என்னைக் கூப்பிட்டாய்?" வெறுப்புடன் கேட்டான் சுதாகர்.

"பத்திரிகை ஆசிரியரைத் தானே குறிப்பிட்டீர்கள். இன்று உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அவன் என் அண்ணன். என்றோ ஒரு காலத்தில் என் அன்னையின் அக்கா பைத்தியம் பிடித்து அலைந்தாள். அப்போது இரவு பகல் என்று பாராமல் கிராமம் எல்லாம் சுற்றுவாள். பைத்தியம்பிடித்த அவளைக்கூட யாரோ கெடுத்துவிட்டார்கள். அந்தப் பாவச் சின்னம் பிறக்கு முன்பே அவள் வீட்டை விட்டு எங்கேயோ ஓடிப் போய்விட்டாள் அவள். பைத்தியக்காரி எங்கே போனாள் என்று யாருமே தேடவில்லை. அவளுடைய மகன்தான் அவன். யாரோ அக்குழந்தையை எடுத்து வளர்த்து மனிதனாக்கிவிட்டார்கள். அவனைப் பார்க்கும் போது என் பெரியம்மாவின் [illegible] வேறு எதுவுமில்லை. இதை உங்களிடம் கூறவிரும்பவில்லை. கூறினால் நீங்கள் நம்பவும் மாட்டீர்கள். நம்பினாலும் என் குடும்பத்தைப் பற்றிக் கேவலமாகப் பேசுவீர்கள் என்றுதான் விட்டேன். இப்போது நான் குற்றமற்றவள் என்பதை நம்புவீர்களா?" சுமதி அவனையே பார்த்தபடி கிடந்தாள்.

"சுமதி உன் தாய்நாட்டுப் பற்று எனக்கு இருக்கவில்லை. உன்னை சந்தேகித்தது எனது தவறு. மன்னித்துவிடு சுமதி மன்னித்துவிடு" என்றான் அவன். "நீங்கள் என்னைச் சந்தேகித்தீர்கள். அதற்காக நான்பட்ட வேதனை சொல்லமுடியாது. ஆனால் அப்படி ஒரு நிலை ஏற்பட்டபடியால்தான் இன்று நாட்டின் விடுதலையியக்கத்தில் பங்குகொள்ள முடிந்தது. சுதாகர் என் மீது உங்களுக்கு உண்மையான அன்பிருந்தால் உடனே போராட்டத்தில் நீங்களும் குதியுங்கள். செய்வீர்களா?" என்றுகேட்டபடி சுதாகரின் கையை பிடித்து அவன் முகத்தை மெதுவாக வளைத்தாள்.

மறுகணம் அவன் அவளை முத்தமிட்டான். அதனால் அவள் நெற்றியில் போடப்பட்டிருந்த கட்டிலிருந்து இரத்தம் பெருகி அவன் நெற்றியிலும்பட்டது.

"சுமதி ரொம்ப வலிக்கிறதா?" என்று பரிவுடன் கேட்டான். அவளோ அன்றொரு மங்கிய நிலவொளியிலே கடலின் கரையிலேஎத்தனையோ பேர் அங்குமிங்கும் போய்க்கொண்டிருக்கையில் திடீரென உலகம் உறங்குவதாக எண்ணிக்கொண்டு முதல் தடவை முத்தமிட்டானே அந்த நினைவுச்சுழலிலே லயித்துக் கிடந்தாள்.

"சுதாகர்.........சில கணங்களின்பின் அவள் மெதுவாக கூப்பிட்டாள்............நமது இலட்சியம் வெற்றி பெறும் ......சுதாகர்......" அவ்வளவுதான் அவனைப் பிடித்திருந்த கைகள் சோர்ந்துவிழுந்தன. கண்கள் மெதுவாக மூடிக்கொண்டன.

ஃ ஃ ஃ

சுமதியின் சமாதிக்கு அருகே மலர்களை வைத்துவிட்டு அவன் உட்கார்ந்தான். சுமதி நாட்டுக்காக தன் உயிர் நீத்த தியாகி, மாசற்ற என் மனைவி என்ற வார்த்தைகள் அவன் இதயத்திலே......எத்தனையோ எண்ணங்களை உண்டாக்கின. தொலைவில் "தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்ற பாட்டு கேட்டது. சுதாகர் ஓடினான். நாட்டின் சுதந்திர போராட்டத்தில் பங்குபற்ற வேகமாக ஓடினான். சுமதியின் சமாதி ஆயிரம் ஆயிரம் பேரின் இதயத்திலே வீர உணர்ச்சியை ஊட்டிக்கொண்டிருந்தது.


## பினாங் - சிங்கப்பூர்

### பிரயாணிகளே!

30 வருடங்களாக இரும்புக் கடை நடாத்திவரும் மலேயன் டிரேடிங் கம்பெனி, (சிங்கப்பூர் இரும்புக் கடை) பிரயாணிகளுக்கு சகல வசதிகளையும் ஒழுங்கான முறையில் நடாத்தி இவ்விடமிருந்து கப்பல் ஏறும் வரை சகல வசதிகளையும் ஒழுங்கானமுறையில் செய்து கொடுக்கப்படும்.

எங்களின் சேவைகளை பினாங்—சிங்கப்பூர் சென்ற பிரயாணிகளிடம் இருந்து நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுமிருக்கின்றோம்.

### மலேயன் டிரேடிங்கம்பெனி,

(சிங்கப்பூர் இரும்புக் கடை)

128-130, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

தந்தி: "டிறேடிங்" போன்: 547.



## கட்டிடச் சாமான்கள்

- அஸ்பெஸ்டோஸ் கூரை தகடுகள்
- அஸ்பெஸ்டோஸ் தட்டை ஓடுகள்
- சிமேந்து
- சினைச்சட்டி பைப்புகள்
- சினைச்சட்டி பிட்டிங்ஸ்
- கல்வனைஸ் பைப்புகள
- கல்வனைஸ் பிட்டிங்ஸ்
- கல்வனைஸ் தகடுகள்
- கல்வனைஸ் கூரை தகடுகள
- ஈய நூல்
- 'மட்டோபார்' கொங்கிரீட் வலை
- 'மட்டோபார்' இணைத்த வலை
- இரும்பு கொங்கிறீட் கம்பிகள்
- எக்ஸ்பான்டெட் வலை
- "கொறேய்ட்" மரத் திராவகம்
- "கொறேய்ட்" கிருமி மருந்து
- முள்ளுக் கம்பி

முதலியன முதலியன

இவற்றை எங்களிடம் மிகவும் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

### சாமுவேல் சன்ஸ் அன் கம்பெனி

லிமிட்டெட்,

371, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாடக விமர்சனம்:

# மட்டக்களப்பில் 'சங்கிலியன்'

ஈழத்திலே தமிழன் படை நடத்தி, பகையடைக்கி நின்முன்! ஈழத்திலே, சீரெடுத்தான், பேரெடுத்தான்; மொழி வளர்த்தான், தன் பழி ஒழித்தான் தமிழன்! இந்த நிலை மாறியது ஏன்? தமிழரசு வீழ்ந்தது ஏன்...?

விளக்கம் வேண்டுமா? 'சங்கிலிய'னிடம் கேளுங்கள்! தமிழே இதயகீதமாக தமிழினமே தாரக மந்திரமாக, தமிழகமே தம் வாழ்வாக வாழ்ந்த சுத்த வீரன் சங்கிலியன்!

சங்கிலியனுடைய வரலாறு ஒரு கறைபடிந்த காவியம்! இறகொடிந்த கதை! ஈட்டி தொடுக்கும் வீரமும், காட்டிக்கொடுக்கும் கயமையும் நிறைந்த சஞ்சல ஓவியம்!

அமரத்துவம் வாய்ந்த, கடைசித் தமிழ் மன்னனை சங்கிலியனின் வரலாற்றை, மட்டக்களப்பு தமிழரசுக் கட்சிக் கிளையைச்சேர்ந்த சுமார் முப்பது நடிகர்கள், சென்ற 16-6-57-ல் நகராண்மைக் கழக மண்டபத்திலே சிறப்பாக நடித்து அனைவரினதும் ஏகோபித்த பாராட்டுகளையும் பெற்றுர்கள்!

## கருத்தும் வசனமும்

சங்கிலியனின் வீர வரலாறு தமிழர்களுக்குப் புதியது அல்ல. சரித்திரச் சான்றுகளை வைத்து சிறப்பாகக் கதையை அமைத்திருந்தார்கள். தமிழர்களின் கடைசி மன்னன் சங்கிலியன், காக்கைவன்னியன் என்ற தன்னுடைய படைத் தலைவனுல் காட்டிக் கொடுக்கப்பட்டான், தன் இனத்தைச் சேர்ந்த துரோகிகளினுலேயே அவன் சாகடிக்கப்பட்டான் என்ற உண்மையை நன்ருக வலியுறுத்தியிருந்தார்கள்.

வசனங்களை எழுதியது திரு எஸ். இராசதுரை எம். பி. யென்ருல், அதன் சிறப்பைக் கூறவும் வேண்டுமா என்ன...? நாடகத்துறையில் மிகவும் அனுபவம்பெற்றதாயிற்றே அவரது பேனு...முக்கியமாக சோகக் கட்டங்களில் வசனங்கள் சோபித்தன......

காக்கைவன்னியனுல் சிறைப்படுத்தப்பட்ட சங்கிலியன் சீறுகின்ருன்...அந்தக் கட்டத்தை திரு இராஜதுரையின் பேனு அற்புதமாக உருவாக்கியிருந்தது!

## காட்சிகள்

காட்சிகள் என்றதும் பேனு நகர மறுக்கிறதே! தயாரிப்பாளர்கள் காட்சி ஜோடனைகளிலும், ஒளிப்பதிவிலும் இன்னும் அதிகம் கவனம் செலுத்தியிருக்கலாம்! தெருக் காட்சிகள் மாடமாளிகைக் காட்சிகளாகவும் பூந்தோட்டக் காட்சிகள் போலவும் காட்சியளித்தன!

## ஆடலும் பாடலும்

பாடல்களைத் திமிலைத்துமிலனும், ஆடை அலங்காரங்களை என். அருளானந்தம், எஸ். குமார், எஸ். கணேசமூர்த்தி முதலியோரும்வேஷ அலங்காரத்தை எஸ். கணேசபூபதியும் நடன அமைப்புகளை இரா. பத்மநாதனும் கவனித்துக் கொண்டார்களாம்! ஆமாம், அந்த நடனங்கள்......பத்துப் பன்னிரெண்டு பெண்கள், மேடையில் அலங்கார உடைகளுடன் தோன்றி இப்படியும் அப்படியும் ஆடிஞல் அது கோஷ்டி நடனமாகிவிடுமா என்ன?

பாடல்களை எழுதிய 'திமிலைத்துமிலன்' பாராட்டுக்குரியவர். அவற்றை ஒலிப்பதிவு செய்த 'றஹீநியா' கலைஞர்களும் அதற்குரியவர்கள்தான்!

## சங்கிலியன் நடிப்பு

நடிகர்கள் என்றதும் வெண்பற்களைக் காட்டி மோகனச் சிரிப்புக்குரிய ஒரு முகம் மனக் கண்முன்தோன்றுகின்றது.....அதற்குரியவர் சங்கிலியனுக நடித்த மட்டக்களப்பு பாராளுமன்றப் பிரதிநிதி திரு செ. இராஜதுரை அவர்கள்தான்! அவரது கணீரென்ற அழகுக் குரலும், 'பளீ'ரென்ற சிரிப்பும், காதலில் கனிவும், வீரத்தில் விறைப்பும் கலந்திருந்த சிறந்த நடிப்பும்ரசிகர்களைப் பிரமிக்க வைத்தன! எல்லோரும் 'இராஜதுரை சிறந்த பேச்சாளன்' என்றுதான் எண்ணியிருந்தார்கள். ஆனுல் அவர் ஒருசிறந்த நடிகரும் கூட என்பதை தமது அற்புத நடிப்பால் நிரூபித்துவிட்டார்.

காதற்காட்சிகளில் அழகாகச் சிரித்தும்,உரம் நிறைந்த வீரக் காட்சிகளில் சிங்கமெனச் சீறியும், காட்டிக் கொடுத்துவிட்டானே காக்கைவன்னியன் என்றதும் கதறிய சோகம் படிந்த சூழ்நிலையும் எல்லோருக்கும் பிடித்திருந்தன.

இந்த மனிதர் சதா அரசியல் மேடையென்று கிடப்பவர்...இவருக்கு நடிக்க எப்படி நேரம் கிடைத்தது? இதற்குப் பதில் இராஜதுரையவர்களின் திறமைதான்! அதற்கு என்றுமே தமிழகத்தில் மதிப்பும் மரியாதையும் இருக்கும்......

## அப்பாமுதலியாரும் அரசமுனிவரும்

நடிப்பில் அடுத்தபடியாகப் பாராட்டுச்குரியவர்கள் அப்பாமுதலியாக நடித்த கா. சிவநந்தனும், அரசமுனிவராக நடித்த எஸ். பாக்கியராஜாவும்தான்! அரச முனிவராகத்தோன்றி மேடை அதிரப் பேசி 'அப்ளாஸ்' பெற்ருர் பாக்கியராஜா. 'எனது மகளைச் சங்கிலியன் கற்பழித்துவிட்டானு' என்றதும் கதறி அழுத 'அப்பாமுதலி' ஆனந்தனின் நடிப்பு உள்ளத்தைத் தொட்டது.

## பெண் பாத்திரங்கள்

சங்கிலியனின் மனைவியாக அன்புத் தலைவியாக ஆருயிர்க் காதலியாகத் தோன்றிய செல்வி லில்லி செபஸ்தியானும், ஆடக சௌந்தரியாக, வீரத் தாயாகத் தோன்றிய செல்வி சிவயோகம் பொன்னம்பலமும் நடிக்கவேயில்லை! ஆனுல் இருவரும் உண்மைப் பாத்திரங்களாகவே மாறி நாடகத்திற்கு உயிர் கொடுத்தார்கள்!! அடாடா...இந்த சிவயோகம்—! வீரத் தாயாகத் தோன்றிக் கதறியபோது ஹாலிலே மழை பெய்தது—பலர் அழுதுகொண்டிருந்தார்கள்!

## காக்கைவன்னியன்

வில்லன் — காக்கைவன்னியன்! இப்பாத்திரத்தை ஏற்று நடித்தவர் அறப்போர் அணித்தலைவர் அரியநாயகம் அவர்கள்; தாடியும் மீசையுமாகக் காட்சியளித்த அவர் தோற்றம் பிரமாதமாகவிருந்தது.

வெள்ளையன் தலைவனுக எஸ். சூசைப்பிள்ளை, ரீட்டாவாக செல்வி மகேஸ்யோன் மேரி, காக்கைவன்னியனின் மனைவியாக லைலா கங்கையா அவை நடன ராணியாக மலர் கங்கையா, தளபதியாக மாணிக்கவாசகர், பரநிருபனுக எம் கைலாசபிள்ளை, வீரமகேந்திரனுக எஸ், புவனேந்திரன், வீரசூரியனுக எஸ்.கீர்த்திதாஸ், முத்து வேலராக கருணைரெத்தினம் முதலியோரும் நடித்தார்கள்!

## ஹாஸ்ய நடிப்பு

காட்சிகள் மாற்றத்தில் நேரம் செலவாகுமல்லவா? அந்த இடை வேளைகளை திரப்ப இரா. பத்மநாதன், எஸ் கணேசமூர்த்தி, மாஸ்டர் சிவலிங்கம் முதலியோரைப் பயன்படுத்தியிருந்தார்கள்! அதையிட்டுநாமும் சிரிக்கவேண்டியதுதான்! ரசிகர்கள் சிரிக்க வேண்டுமென்று அவர்கள் பட்ட பாடு......சுவை நிறைந்த உயர்ந்தரக ஹாஸ்ய நடிப்பு இரா. பத்மநாதனுடையது; பாராட்டுக்குரியதும் அதுதான்!

## தீர்ப்பு

மொத்தத்தில், பூங்கோதை தயாரிப்பு என்ற முழு நீள நாடகம் ஒரு சிறந்த தயாரிப்புதான், ஆங்காங்கே மின்னிக்கொண்டிருந்த சில குறைகளை மறந்துவிட்டால்! இன்றைய சூழ்நிலையில், கடைசித் தமிழ் மன்னனின் வீர வரலாற்றையும், அவனைக் காட்டிக்கொடுத்த காக்கைவன்னியனின் கறைபடிந்த செயலையும் மக்கள் பார்க்க வேண்டும், படிக்க வேண்டும்! ஏனென்ருல், இன்றைய சூழலிலும் தமிழர்களைத் தமிழர்களே காட்டிக் கொடுக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிருர்களே!

—தேன்மொழி

# கற்பின் பரிசு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர்: மூர்க்கனே! முதலில் அவளை விட்டுவிடு! ஊருறங்கும் வேளையிலே, ஆதாரமற்ற பெண்களைக் கெடுத்துச் சீரழிக்கும் வீணனே எடுத்துக்கொள் உன் வாளை! தடுத்துக்கொள் உன் சாவை!

அமீர்: (சிரித்து) அஹ்...... அஹ...ஹா...பகலிலே பக்கிர் வேஷம்! இரவிலே பாவையரை மோசம் செய்யும் பட்டாணி வேஷம்! ஏ! நரைத்த கிழவனே உன்னை என்ன செய்கிறேன் என்று பார்?

[வாளுருவும் சத்தம்]

பெண்: ஆ! ஐயோ! ஆ...!!

ஒருவர்: அலருதே? பெண்ணே! அந்த அரக்கனை நான் பார்க்கிறேன்!

அமீர்: உம்.........சரிதான் வாடா! ஜிஹாங்கிரின் ஜாகிர்தார் அமீரைத் தெரியாத குடிப் பயலே! பார் உன்னை என்ன செய்கிறேனென்று!

ஜிஹா: பார்க்கிறேன் அதையும்!

[வாட் சண்டையின் ஒலி—பெண்ணின் கிக்கவிடும் ஒலி—தொடர்ந்து வாட் சண்டையின் ஒலி—வாள் ஒன்று விழும் சத்தம்]

அமீர்: வேண்டாம்! வேண்டாம்! விட்டுவிடு என்னை விட்டுவிடு......

ஒருவர்: முட்டாளே! உன் போன்ருரின் குட்டுக்களை— அறியத்தானே—பட்டாணிக் கோலத்தில் பாதி இரவிலே வந்தேன்—பார்—நன்ருகப் பார்......என்னைப்பார்! நான் யாரென்று புரிகிறதா?

(வேஷம் கலைந்த பின்)

அமீர்: ஆ! மன்னன்! ஜிஹாங்கிர்—ஜிஹாங்கிர்!

ஜிஹா: அகங்காரப் பேயே! அக்கிரமத்தின் இருப்பிடமே! அறம் வளர்க்கும் என்னுட்டில் மறம்—பேணும் மடையர்க்கு இடமில்லை!... பிர்சாஹிப்...! பிர்சாஹிப்!!

பிர்சா: வேந்தே!

ஜிஹா: இந்த வீணனை வெட்டி வீழ்த்துங்கள்!

பிர்சா: நானு?வேண்டாம்... நான்...நான்...

ஜிஹா: சரி! நானே அப்புனித பணியைச் செய்கிறேன்! மனித மிருகத்தை வெட்டுகிறேன்! மாதர் குலத்தை விடுவிக்கிறேன்!

(வாளுருவும் சத்தம்—தொடர்ந்து அலறும் சத்தம்...தலையுருளும் சத்தம் பெண்ணின் அவலக்குரல்)

ஜிஹா: பெண்ணே! வருந்தாதே! உன்னைப்போன்ற உத்தமிகள் இந்த மண்ணின் மாணிக்கங்கள்; அவற்றை உடைத்தெறியும் மனித மிருகங்களை உருவழிப்பதே என் கடமை!

பெண்: வேந்தே; நல்ல சமயத்தில் நாயன் என்னைக் காப்பாற்றினன்—என் மானத்தைக் காப்பாற்றினன்—உங்களுக்கு என் தலை தாழ்ந்த நன்றி!

ஜிஹா: எழுந்திரு பெண்ணே! என்னை ஏன் வணங்குகிருய்! அருளாளனும் அன்புடையோனுமாகிய ஆண்டவனை வணங்கு! நான் மன்னன்தான்! ஆனுல்... மனிதன்...மனிதன் இதோ? இந்தப் பணப்பெட்டியைப் பெற்றுக்கொள்! இதிலே நூறு அஷிரபுகள் (தங்க நாணயங்கள்) இருக்கின்றன!

பெண்: ஆ...எனக்குப் பரிசா? இந்த ஏழைக்குப் பரிசா!

ஜிஹா: ஆம்! உனக்குத்தான் பரிசு! உன் துணிவுக்குத்தான் பரிசு! உன் கற்பைக் காப்பாற்றுக் கங்கணம் பிடித்த வீரத்திற்குப் பரிசு; உன் களங்கமில்லாத கற்பின் பரிசு!



'சங்கிலியன்' நாடகத்தில் சங்கிலியனுகத் தோன்றி நடித்த மட்டக்களப்புப் பிரதிநிதி திரு செ. இராசதுரை சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கும் காட்சி.

# சமரசம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் தொடர்ந்து நடத்திக் கொண்டே போவோம். இதற்கிடையில் சுமுகமான முடிவுகளைச் செய்து சமரஸம் காணமுடியுமானுல் அது பிரதமரின் பொறுப்பாக விருக்கும். தவறிஞல் எங்களை அவர் போர் முனையில்தான் சந்திக்க வேண்டியிருக்கும். இதை நாங்கள் ஒரு பயமுறுத்தலாகச் சொல்லவில்லை. அசைக்கமுடியாத வைராக்கியமும் உறுதியும் வாய்ந்த எங்கள் தீர்மானம் இது என்பதையே வெளியிட விரும்புகிறோம்'' என்று தமிழரசுக்கட்சித் தலைவர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினுர்.

## பொதுக் கூட்டம்

ஞாயிற்றுக்கிழமை மாலையில் (23-6-57) யாழ்ப்பாணம் முற்றவெளியில் தமிழரசுக் கட்சியின் மாபெரும் பொதுக் கூட்டமொன்று நடைபெறும் என்று தெரிகிறது. இக் கூட்டத்திற்கு திரு வி. வன்னியசிங்கம் தலைமை தாங்குவார். மட்டக்களப்புப்பிரதிநிதி திரு, செ. இராஜதுரை, உடுப்பிட்டி பிரதிநிதிகளும் தலைவர்களும் பேசுவார்கள்.

## ஒரு தமிழ்த் தலைவர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் இவர் திரு பண்டாரநாயகாவுக்கு அந்தரங்க ஒத்தாசை புரிந்து வருகிருர். அதாவது ''சமஷ்டிக் கோரிக்கையில் தமிழ் பேசும் மக்கள் ஒருமுகப் பட்டவர்களாக இல்லை'' என்று திரு. பண்டாரநாயகா நொண்டிச் சாட்டுக் கூறி மழுப்புவதற்கு பயன் படும் அறிக்கைகளை இவர் தயாரித்து வெளியிட்டு வருகிருர்.

இந்தத் தமிழ்த் தலைவரைப் பற்றி ஒரு தமிழ் செனட்டர் அபிப்பிராயம் கூறுகையில் ''இந்த ஆசாமி ஒருபோதும் பண்டாரநாயகா அரசாங்கத்தை எதிர்த்து தமிழுரிமைப் போரை நடத்த மாட்டார். அப்படி எதுவும் செய்தால் இவருடைய வருமான வரி வழக்கொன்று சடையப் பட்ட விஷயம் அம்பலத்திற்கு வந்து விடும். 'அரசியலில் பாரதூரமாக இறங்க மாட்டேன்' என்று அந்தரங்க வாக்குறுதி அளித்த தன் பேரிலேயே இவர் ஒரு வருமானவரி வழக்கிலிருந்து தப்பினுர் என்பதை நான் அறிவேன்' என்று ஒரு கனியான வீட்டில் வைத்து நண்பர்களிடம் தெரிவித்தாராம்.

## 'வாக்-அவுட்'..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அதனுல்தான்......''

''அதனுலென்ன? உண்மையை இப்பொழுது அறிந்துகொண்டீர்கள். அது மட்டுமல்லாமல் நீங்கள் தெரிந்தனுப்பிய பிரதிநிதிகள் எந்த வகையில் பணி செய்கிருர்கள் என்பதையும் தெரிந்துகொண்டீர்கள்.

''ஆமாம். ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே. அன்று நீங்கள் செய்தது சரியில்லையென்றுசொன்னவர்கள்கூட ஒரு விஷயத்தை ரொம்பப் பாராட்டினுர்கள். 'என்ன இருந்தாலும் இந்தத் தமிழரசுக் கட்சிக்காரர்கள் நினைத்ததைச் செய்து முடித்துவிடுவார்கள். எவ்வளவு கச்சிதமாக, எதுவித சந்தடியுமில்லாமல் கண்ணியமான முறையில் இவர்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறினுர்கள். அந்தக் காட்சி...... அபாரம்!' இப்படிப் பேசிக் கொண்டார்கள்''

''அதையாவது சொல்ல அவர்களுக்கு மனம் வந்ததே! சரி நேரமாகிறது. நான் வரட்டுமா?''

''சரி போய் வாருங்கள். சாவகாசமாகச் சந்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமா பதில்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

புளோரு யோசப்,
யாழ்ப்பாணம்

'மனிதனும் பிராணிகளும்'—மிகவும் நீண்ட கட்டுரை. அழகாக எழுதப்பட்டிருக்கிறது! வளர்மதிக்குப் பொருத்தமில்லையே......?

செல்வி லீலா பொன்னையா,
மட்டுக்கொல்லை

உமது விஷயங்களும், பத்மராணியின் விஷயங்களும் கிடைத்தன......ஓய்வு எடுக்கவும் எடுத்தாய்...அழகாக எழுதப் பழகியிருக்கின்றாயே! 'அன்பு எங்கே...?' என்று கேட்டால், 'இன்பக் கண்ணீர்' நன்றாக எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால்...'மாமா ஏமாற்றம்' அடையமாட்டாரா என்ன?

செல்வராணி இளையதம்பி,
யாழ்ப்பாணம்

உமது முதற் கட்டுரை...? புதிய விஷயங்களைத்தான் மாமாவும் மருமக்களும் அதிகம் விரும்புவது!

எஸ். மகேஸ்வரி, கல்முனை

நீர் வரைந்தனுப்பிய படங்களில் சில அழகாக இருக்கின்றன...படங்களை வெளியிடும் திட்டமெதுவும் இப்பொழுது இல்லையே!

ம. சபாரெத்தினம், சித்தாண்டி

தரமுள்ள எந்த விஷயத்தையும் மாமா நிராகரிப்பதேயில்லை ரத்தினம்! முயன்றால் வெற்றி கிட்டாமலா போகும்?

வ: யோகாநந்தசிவன்,
வட்டுக்கோட்டை

உமது நெடுங்கதை சோபிக்கவில்லையே...! வேறு ஏதாவது எழுதி அனுப்பினாலென்ன?

## பாவம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யத் தமிழர்களுக்குஉரிமையுண்டு இதை உணர்ச்சியால் மட்டுமல்லாமல், மனித உணர்ச்சியின்பேரிலும் நாம் கூறமுடியும். இலங்கைத் தமிழர்களின் உரிமைப்போர் அப்பட்ட அரசியல் பிரச்னையன்று. அதிலே, மொழிப்பிரச்னையும் ஒரு தனி அம்சமாக விளங்குகின்றது. குறிப்பாக, இலங்கைஅரசபரிபாலனத்தில் சிங்களத்தோடு தமிழுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அந்தத் தீவில் வாழும் தமிழர்கள் கிளர்ச்சி நடத்துகின்றனர். இந்த ஒரு பிரச்னையில் இந்தியத் தமிழர்களும் அனுதாபமுடையவர்களாக இருக்கின்றனர் என்பதை நாம் வெளிப்படையாகவேகூறுகிறோம்-ஒளிக்கத் தேவையில்லை.

இன வெறிபிடித்த சிங்களவர்களால் இலங்கைத் தமிழர்களின் உயிருக்கும் உடமைக்கும் கேடுநேராமல் பண்டாரநாயகாவின் ஆட்சி பாதுகாக்குமென்றே இன்னமும் நம்புகின்றோம். நமது நம்பிக்கை பொய்யானால், இலங்கைத் தமிழர்களின் கண்ணீரைத் துடைக்க இந்தியத் தமிழர்கள் தயங்கமாட்டார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகில் எங்கு வாழ்ந்தாலும் சரி தமிழன், தமிழன் தான்! தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒரே இனம் தான்! இதை கடலும் மலையும் தடுத்துவிடுமா?—பார்ப்போம்!

## 'வாய்ப் பந்தற்காரர்'...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தது அவனது படைப் பலமா? இல்லை உறுதியான மனப் பலந்தான். அப்படியான மனப்பலத்துடன் கடவுள் துணை வேண்டி இயக்கத்தை நடத்தாது கைவிட்டால் முட்டுக்கட்டையாளர் வாய்ப் பேச்சுடன் நின்றுகொள்வர். காரியத்தைச் சாதனை மூலம் காட்டி வந்த தமிழரசுக் கட்சியாரில் நம்பிக்கை வைத்திருந்தமக்கள் சோர்வடைந்து நம்பிக்கையை இழந்துவிடுவர். பின் இப்படியான ஓர் தமிழ் இயக்கம் தோன்ற முடியாதபடி ஏற்பட்டுவிடும்.

### ஒதுங்கியவர்களும் ஒன்றுசேர்வர்

இன்றைய நிலைமையில் தமிழ் மக்களின் ஒற்றுமை விரும்பத்தக்கதுதான். ஆனால் பூரண ஒற்றுமையைக் காத்திருந்து ஒரு போதும் பெறமாட்டோம். நமக்குள் பல பிளவுகளிருந்தாலும் வல்லமையுள்ள ஓர் கட்சி முன்நின்று காரியத்தை நடத்தும்போது தான் அதைத் தேடி ஒற்றுமை ஓடி வரும்.

தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு என்பவற்றை நடத்தும் போது ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி வைத்தியசாலைகளிலும், சிறைக்கூடங்களிலும், துருப்பிடித்த தூக்குமேடைகளிலும் அவர்கள் வதைக்கப்படும்போது தான் ஒதுங்கி நிற்கும் தமிழினத்தின் நரம்புகளில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தம் தானாகவே துடிக்கும். இனிமேலும் நாம் பார்த்திருப்பதா "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்" என்ற வீரகர்ச்சனை ஒவ்வொருவர் நாவிலும் நடம்புரியும். "இனியும் நாம் கைகட்டிக்கொண்டிருந்தால் உத்தமரைப் பலிகொடுத்த அதமராவோம், வீரனை நடுவழியில் விட்டோடிய பேடியாவோம்" என்ற உணர்ச்சித் துடிப்பில் தாங்களாகவே ஒன்று சேர்ந்து விடுவர்.

## பண்டா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று திரு. பண்டாரநாயகா பயங்கொண்டிருக்கிறார்.

### லண்டன் பிரயாணம் ரத்து

எனவேதான் அவர் இந்த உள் வீட்டுக் கலகத்தைத் தடுப்பதற்காக லண்டன் பிரயாணத்தையே ரத்துச் செய்யவேண்டிய நிலையேற்பட்டது என்று விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. ஆனால் வெளியில் ஆகஸ்ட் போராட்டத்தை உத்தேசித்தே பிரதமர் லண்டன் பிரயாணத்தைக் கைவிட்டதாக எண்ணும்படி பிரசாரம் செய்யப்படுகிறது.


எல்பின்ஸ்டன் (கொழும்பு)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

எம். ஜி. ராமச்சந்திரன்-பானுமதி
பத்மினி - டி. எஸ். பாலையா

நடிக்கும்

மதுரை வீரன்

விரைவில் வருகிறது!

என்.டி. ராமராவ் ஜமுனா

(நடிக்கும்)

அமர கீதம்

8-வது மகத்தான வாரம்!!



இன்னும் சில நாட்களுக்கு மாத்திரமே காண்பிக்கப்படும்
பிறகு பார்ப்போம் என்று இருந்து விட்டீர்களானால் நிச்சயம் ஏமாறுவீர்கள்
இன்றே பாருங்கள்

ஒன்றுபட்டிருந்த குடும்பத்தில் பொறுமைப் பேய் புகுந்ததன் விளைவு......?
பழிவாங்கும் படலத்தின் வலிவு......? சமுதாயத்தின் ஓரக் கண்களுக்குள்ள
சக்தியின் முடிவு......? வீட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்ட வனிதையின்கதி என்ன?

பதில் கூறுவது — பார்த்தவர்களும் கேட்டவர்களும் போற்றிப் புகழும்

எங்கள் வீட்டு மகாலட்சுமி



நடிகர்கள்: ஏ. நாகேஸ்வரராவ், சாவித்திரி,
கண்ணாம்பா, ரங்கராவ், கே. ஏ. தங்கவேலு, சுந்தரிபாய்,
எம். என். நம்பியார், ராஜசுலோசனா, அங்கமுத்து, ஏழுமலை, பார்வதி,
மாஸ்டர் சரத்பாபு, (ரூட்) நாய்.

நடனங்கள்: ஈ. வி. சரோஜா, ஏ. கே. சோப்ரா.

செண்ட்ரல் (கொழும்பு) பிரகாஷ் (பூண்டுலோயா) போகம்பரை (கண்டி) ராணி (யாழ்ப்பாணம்) செண்ட்ரல் (நாவலப்பிட்டி)
தினசரி மாலை 6, இரவு 9-30, சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணி, ஞாயிறு காலை 10 மணி

அரோஜா (மட்டக்களப்பு) மீபுர (நீர்கொழும்பு) தினசரி மாலை 6-30, இரவு 9-30, ஞாயிறு பிற்பகல் 2-30.

முருகன் (ஜிந்துப்பிட்டி)
தினசரி மாலை 6, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு பிற்பகல் 2, ஞாயிறு காலை மெட்னி 10 மணிக்கும்
எம். ஜி. ராமச்சந்திரன் நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்

ஸ்ரீ காளிங்கன் (இணுவில்)
[illegible]

ஒடியன் (கல்கிசை)
தினசரி மாலை 6, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு பிற்பகல் 2, ஞாயிறு காலை மெட்னி 10 மணிக்கும்
நான் பெற்ற செல்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

### காற்று

காற்றின் நிறம் என்னவென்றே தெரியாது. அதனைக் கைகளாற் பிடிக்கவும் முடியாது. ஆனால் அது சாமானியமான ஒன்றல்ல. காற்று இல்லாவிட்டால் அரை விநாடி கூட எம்மால் வாழமுடியாது. காற்றே எம் உயிர். மூச்சு என்ற பெயரில் நம் உடலுள் போவதும் வருவதுமாய் இருக்கிறது காற்று. மற்றும் உயிரினங்களைக் கூட, ஏன்? உலகையே காற்றுத்தான் இயக்குகின்றது. நமக்கு முதலில் அத்தியாவசியமானது காற்றே. அதற்குப் பின்புதான் மற்றவைகள். பலூனுக்குள் புகுந்து அதைப் பறக்கச் செய்வது காற்று. பந்தினுட் சென்று அதைத் துள்ளவைப்பது காற்று. வண்டிகளின் உருளைகளுட்புகுந்து கொண்டிருப்பது காற்று. முகில்களை ஓட்டி மழையைத் தருவது காற்று. கெட்ட நாற்றத்தை அகற்றுவது காற்றும். நீரினுட்புகுந்து சீவன்களைக் காப்பது காற்று. நிலத்தினுட் சென்று உயிர்களைக் காப்பது காற்று.

இப்படிக் காற்றின் செய்கைகளைக் கணக்கின்றிச் சொல்லிக்கொண்டே போகலாம். இத்தகைய நல்ல காற்றைச் சுவாசித்துச் சக்திபெற்று நெடுநாள் வாழ்வோமாக!

—செல்வி மு. இராஜேஸ்வரி
கந்தகெதரை

### விடைக்கு விடை

ஒரு கோமாளி எஜமானுக்கு ஒரு அறிவுள்ள வேலையாள் இருந்தான். ஒருநாள் வேலையாள் கொஞ்ச முட்டைகள் வாங்கி வந்திருந்தான். எஜமான் எத்தனை என்று வினவினார். அதற்கு அவன் விசித்திரமாக விடையளித்தான். அதாவது நான்வாங்கிவந்த முட்டைகளின் தொகையை இரண்டால் பிரித்தால் ஒன்று மிஞ்சும், மூன்றால் பிரித்தால் இரண்டு மிஞ்சும், நாலால் பிரித்தால் மூன்று மிஞ்சும், ஐந்தாற் பிரித்தால் நாலு மிஞ்சும், ஆறாற் பிரித்தால் ஐந்துமிஞ்சும், ஆனால் ஏழால் பிரித்தால் சரியாக அடங்குமென்று கூறினான். இவ்விடை எஜமானுக்கோ புதிராகவிருந்தது.

விடைக்கு விடை: 119(நூற்றிப் பத்தொன்பது)

—கே. ட. கோபன்
(வ. ம. இல 505)
கல்லாறு

நீதிக் கதை(20)

### பொழுது விடிந்து விட்டதே!

சிறுமி குணுவுக்கு வயது ஆறுதான் இருக்கும் ...இந்த வயதில் கூட அவள் பலே கெட்டிக்காரியாக விளங்கினாள்......

ஆடுவாள், பாடுவாள், பேசுவாள், நடிப்பாள்...... எங்கு திரும்பினாலும் அவள் இருப்பாள்...போக்கிரி; நல்ல குறும்புக்காரி...!

ஒருநாள் ரயில் வண்டியில் பிரயாணம் செய்யும் வாய்ப்பு குணுவுக்குக் கிடைத்தது. அதுவும் மலை நாட்டுப் பிரயாணம்......!

ரயில் 'விசில்' ஊதியது... புறப்பட்டது: குணுவுக்கு எல்லாம் ஒரே புதுமையாக இருந்தன...'சட சட' என்ற ஓசை, நிலையங்களிலே நின்று நின்று புறப்படும் நிகழ்ச்சி, ஜனங்களின் கூக்குரல்...அப்பப்பா... என்ன விநோதமான காட்சிகள்...! இவைகளையெல்லாம் குட்டிக் குணு கவனித்துக்கொண்டே வந்தாள்.

அப்போது ஓடிக்கொண்டிருந்த ரயில் ஒரு சுரங்கத்தினுள் பிரவேசித்தது...ஒளி போய், ஒரே இருள்...விளக்குகள் எரிந்தன!

குணு கொட்டாவி விட்டாள். 'அப்பாட...' என்று ஆயாசத்துடன் சாய்ந்து கண்ணை மூடிக்கொண்டாள்.

இப்போது ரயில் சுரங்த்திலிருந்து வெளிப்பட்டு ஓடிக்கொண்டிருந்தது. இருள் இல்லை...குணு கண் விழித்தாள்!

"ஐயோடா! இன்று சீக்கிரம் பொழுது விடிந்து விட்டதே!" என்று ஆச்சரியத்துடன் கூவினாள் குணு...

—தேன்மொழி

### உங்கள் பதில்

**என்ன செய்வது?**

வளர்மதிப் போட்டிகளில் குறிப்பிட்ட சிலரே பரிசுகளை எல்லாத் தடவைகளிலும் பெற்றால், எழுத்து ஆர்வம் கொண்டவர்கள் எப்படித் திருப்திப்படுவது? எதிர்வரும் போட்டிகளில் 'ஒரு சிலரை'த் தவிர்த்து 'அனைவருக்கும்' சந்தர்ப்பம் அளிக் அளிக்கப்பட வேண்டும்.

—தாபி. எஸ், ரமணி.

**பாராட்டு!**

வளர்மதிக்கு, உதயகுமார், அலோஷியஸ், தேன்மொழி, லீலா பொன்னையா, திலகம், இராசேந்திரம், குணபூஷணி, சிவசுந்தரம் போன்றவர்கள் எழுதியனுப்பும் புதுப் புது விஷயங்கள் என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டன!

—வெள்ளவத்தை எஸ். சிவகுமார்.

**முன்னேற முடியுமா?**

செல்வி வே. கமலாதேவி எழுதிய 'நான் யார்?' கட்டுரையை வேறு ஒரு பத்திரிகையிலிருந்து வெட்டியனுப்பியிருக்கின்றேன்! இப்படி எழுதினால் முன்னேற முடியாதே!

—செ. சரோஜினிதேவி.

**வேண்டும்—வேண்டாம்**

'உங்கள் பதில்'—இப்பகுதியை ஆரம்பித்தமைக்கு நன்றி—அ. அ. மஹ்மூது.

'உங்கள் பதில்'—ஒரு அனுவசியமான பகுதி. அதைவிட 'மாமா பதிலே' சிறந்தது!

—வி. சந்திரா.

'மாமா பதிலும்' 'உங்கள் பதிலும்' சிறந்த பகுதிகள் மருமக்கள் கண்டிப்பாக விரும்பிப் படிப்பார்கள்.

—லீலா பொன்னையா.

'உங்கள் பதில்'—யோசனை மட்டமானது. எனது அனுதாபங்கள்!—எலிசபெத் தங்கராஜா.

**தனித் தமிழில்!**

மருமக்கள் இயன்ற அளவு பிறமொழிச் சொற்களை நீக்கி, தனித் தமிழில் எழுதப் பழக வேண்டும்.

—சோ. இராசேந்திரம்.

**குப்பைக் கூடை பெரியதா?**

உங்கள் குப்பைக் கூடை மிகவும் பெரியதா? எத்தனை நூறு விஷயங்களை விழுங்கி விட்டது! வருந்துகிறேன்!—அருள் பேரின்பநாயகம்.

**ஓவியருக்கு?**

ஓவியருக்கு வளர்மதியில் இடமேயில்லையா? ஒரு சித்திரப் போட்டி வைத்தால், ஆஹா, எத்தனை நல்லது!

—புதுமடம் 'கலாம்'

(இப்பகுதிக்கு மருமக்கள் கடிதங்கள் எழுதும்போது தங்கள் அபிப்பிராயங்களை மட்டுமே எழுதவேண்டும். பாராட்டுரைகள், கண்டனங்கள், யோசனைகள், விமர்சனங்கள்—இவற்றிற்கு வரவேற்பு உண்டு.—சுதந்திரன் மாமா)

### அமைதி

அமைதி நிறைந்துள்ளவனே உலகத்தைப் பேணிப் போற்றி நடப்பான். அமைதியற்றவன் உலகத்தை அவனுடைய வாழ் நாட்கள் பூராவும் போற்ற மாட்டான். எடுத்த காரியத்தை சரிவரச் செய்யமாட்டான். இருதயத்தில் அமைதியிருந்தால் தான் நல்ல வேலைகளை தக்க சமயத்தில் பயன்படுத்துவான். இருதயத்தில் சாந்தியிருந்தால்தான் வெளி உலக விவகாரங்களை பத்திரிகைகளில் படிப்பதற்கு மனம் வரும்.

நாட்டின் தலைவர் மொழிப்பிரச்னை சம்பந்தமாக குழப்பமடைந்து கொண்டு வருகிறார். அப்படி இருப்பவர்கள் எந்த முக்கிய வேலையையும் கவனிக்க மாட்டார். மக்களும் அந்த வழியில் தான் சஞ்சலப் பட்டும் சண்டையிட்டும் அவதிப்படுவார்கள். அதனால்தான் வள்ளுவர் பெருமான் பின்வருமாறு கூறியுள்ளார்:

"அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி"

இதை நாம் உணர்ந்தால் எதிர் நோக்கிவரும் பிரச்னைகளை தடுத்து நிறுத்த முடியும். கடந்தகாலத்தைப் பற்றி சிந்திக்காமல் நடக்கப் போகும் விஷயத்தைப்பற்றி அமைதியான இடத்திலிருந்து அலசி ஆராயவேண்டியது தான்நமது கடமை, "வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டும்" அப்படிபோடாது விட்டு விட்டால் அது நம்மைக் கண்டிப்பாக அழித்து விடும்.

அமைதியே வாழ்க்கைப் பாதையில் பிரதானம். கடவுளை நினைத்துசாந்தி.சாந்தி, சாந்தி என சொல்லுங்கள். அது உங்களுக்கு எடுத்த கருமத்தை வெற்றியுடன் நிறைவேற்றஉதவும். உங்கள் இருதயத்தில் புயல்வீசமாட்டாது. புழுதி எழும்பமாட்டாது. நிரந்தரமான அமைதி கிடைக்கும்.

—கா. நடனசபாபதி
அக்கரைப்பற்று

### மாமா பதில்

**செல்வி க. அன்னபூரணம்**
**யாழ்ப்பாணம்**

உமது நீண்ட கண்டனக் கடிதத்தைப் படித்தேன். 'மாமா பதிலி'ல் தரப்பட்டவைகள் பிழையாகவோ, நீர் குறிப்பிடுவதைப் போல மறதியாகவோ எழுதப்பட்டவை அல்ல! உமது கடிதம் மாமாவுக்கு ஆச்சரியத்தையே அளிக்கிறது! ஒருவேளை வேறு யாராவது அக்கடிதங்களை எழுதியிருப்பார்களோ...? எனினும் விஷயத்தை மாமா காதில் போட்டமைக்கு நன்றி!

**சி. சதாசிவம், சாவகச்சேரி**

கவிதையிலே கதை! புது முயற்சிதான்......பாராட்டுகிறேன். காகிதத்தின் ஒரே பக்கத்தில் மட்டுமே விஷயங்கள் எழுதப்பட வேண்டும்.

(13-ம் பக்கம் பார்க்க)

### வளர்மதி புதிய மருமக்கள்

1649 க. பொன்னம்பலம் சிலாபம்
1650 சி சின்னராஜா, எழுதுமட்டுவாழ் வடக்கு
1651 சு. பத்மநாதன், தெல்லிப்பழை
1652 ந. தியாகராஜா, வட்டுக்கோட்டை
1653 செ. விஜயலட்சுமி, சங்கானை
1654 க. பரமேஸ்வரி, உப்புக்குளம்
1655 சி. பிலிப் நேரி, யாழ்ப்பாணம்
1656 ஏ. ஏம் அலாய், கட்டுகாஸ்தோட்டை
1657 எம். என். ஏ. முதலிப், உடத்தலவின்னை
1658 எம். ஏ. எம். சஹாப்தீன், மாத்தறை
1659 ந. செல்வநாயகி, கொக்குவில் கிழக்கு
1660 வே. மீனாம்பிகை, உரும்பிராய்.
1661 வே. மதிவ் தனி, உரும்பிராய்
1662 கு. சிதம்பரநாத சர்மா, களபூமி
1663 எஸ். தெட்சணமூர்த்தி, மட்டக்களப்பு
1664 வ. மாணிக்கவாசகர், வேலணை
1665 எஸ். மணிமேகலை, நீர்கொழும்பு
1666 பொ. தியாகராசா, மிருசுவில்
1667 வி. ஆனந்தன், நுங்கம் பாக்கம் சென்னை-6
1668 வே. அன்னலட்சுமி, மீசாலை
1669 அமிர்தலிங்கம் குகமணி, அளவெட்டி
1670 ஏ. திருச்செல்வம், நெடுந்தீவு
1671 த. செல்வரத்தினம் கோப்பாய்
1672 எம். வருதராஜா, அக்கரைப்பத்தனை
1673 சு. மகேஸ்வரி, திருகோணமலை
1674 சு. நடராஜா, துகேகொடை
1675 லெ. அஹமது லெவ்வை, தம்பாளை
1676 ஆ. இ. ராசேந்திரம் மாகோ
1677 ச. சோதிநாதன், யாழ்நகர்
1678 வ. அழகுதுரை, அரசடித்தீவு
1679 சு. விக்னேஸ்வரி, கொட்டாஞ்சேனை
1680 எஸ். காளியன் ரஞ்சன், எல்ல
1681 டி. எஸ். தம்பி, காரைதிவு
1682 அ. அனந்தகுமாரசாமி, காரைநகர்
1683 சி. ஆனந்தம், மண்டூர்
1684 கே. ஏ. புஹாரித் தம்பி, தம்பாளை
1685 பெ. வள்ளியம்மாள். ஒப்பநாயக்கா
1686 ஆ. சண்முகலிங்கம், வேலணை
1687 என். வி. மூர்த்தி, சாம்பல் தீவு
1688 ஆ. ஆதம்லெவ்வை அக்கரைப்பற்று
1689 மு. கா. காதர் நெயினா, உடப்பு
1690 சு. இராகேந்திரம், கரவெட்டி
1691 எஸ். கே. நாஸர் பரிதா, மாத்தளை
1692 சந்திரா இராஜதுரை, கல்லாறு
1693 ச. சுப்பிரமணியம், தன்னாமுனை
1694 ச. மரியன் தன்னாமுனை
1695 எஸ். சிவானந்தம், மீசாலை
1696 க. பாலசுப்ரமணியம், தெல்லிப்பளை
1697 எம். ஜி. கபிலதாஸ் கோவில்பட்டி
1698 பா. பாக்கியநாதன் மட்டக்களப்பு
1699 என். இராமனுதன், மத்துகம
1700 க. ராஜசேகரன், கட்டுகுத்தாலை
1701 கு. நா. நாகேஸ்வரி சரவணை
1702 க. கனகசபாபதி, புங்குடுதீவு

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 6.

பெயர்.................................................

பாடசாலை.................................................

விலாசம்.................................................

.................................................

................................. ................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

# அரசாங்கத்தின் துரோக நடவடிக்கைக்கு பலி

## அன்று மலைநாட்டு தமிழர்கள் இன்று இலங்கைத் தமிழர்கள் அனைவரும் நாளை ....? முஸ்லிம்கள் என்பது நிச்சயம்

### களுத்துறை வாலிபர் மன்ற மகாநாட்டில் கண்டனம்

**இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களைப் பிரிக்க எத்தனை எத்தனையோ சூழ்ச்சிகள் நடைபெற்றன—நடைபெற்றுவருகின்றன! இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின் மூலம் 10லட்சம் மலை நாட்டுத் தமிழர்களையும் நாடற்ற பிரஜைகளாக்கிய போது இந்தியர்களைத்தான் வெளியேற்ற விரும்புகிறோம், இலங்கைத் தமிழருக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டோம் என்றனர். ஆனால் நடந்ததென்ன?**

**இன்று இலங்கைவாழ் தமிழ் பேசும் இனத்தின் ஒரு அங்கமாகிய இஸ்லாமிய மக்களைப் பிரித்தெடுக்க பலவித சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன! அன்று மலை நாட்டுத் தமிழருக்கு—இன்று இலங்கைத் தமிழருக்கு—நாளை இஸ்லாமிய மக்களுக்கு என்பதில் இனியும் ஏதாவது சந்தேகமிருக்க முடியுமா?''**

இவ்வாறு களுத்துறை பொதுநல வாலிபர் மன்ற முதலாவது மகா நாட்டில் மட்டக்களப்பு பொதுநல வாலிபர் மன்ற பொதுச் செயலாளர் திரு அ. தருமராசா தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

இம் மகாநாடு களுத்துறை மாக்கார் பாத் மன்ற அலுவலகத்தில் சென்ற 11-6-57ல் நடைபெற்றது. திரளான மக்கள் சமூகமளித்திருந்தனர்.

திரு தருமராசா தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:

தென் இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தமிழ் மொழியில் காட்டும் ஆர்வத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். இம் மகா நாட்டுக்கு வந்துள்ள முஸ்லிம் மக்களைக் கொண்டே தமிழ் மொழியின்மேல்அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் அபிமானத்தையும் அளவிடலாம். எவர் என்ன சொன்ன போதிலும். எங்கள் தாய் மொழியாகிய தமிழை மறவோம். சிங்களம் மாத்திரம் என்ற சட்டத்தை தகர்த்தெறிவோம் என்று திடம் கொண்டிருப்பதுபோல் நீங்கள் காட்சியளிக்கின்றீர்கள்.

தமிழரசுக் கட்சியினர் நடத்த இருக்கும் சாத்விகப் போராட்டத்தை முறியடிக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி திரட்டும் தொண்டர் படையை நான் மனமார எதிர்க்கிறேன். களுத்துறைக் கிளைச் சங்கமும் உண்மையிலே எதிர்க்கின்றது என்பதை உங்கள் மூலம்அறிகின்றேன். தமிழரசுக் கட்சியினர் நடத்தப்போகும் சாத்வீகப் போராட்டத்தில் தென் இலங்கை முஸ்லிம்களாகிய நீங்களும் பங்கு பற்றி சிங்களம் மாத்திரம் சட்டத்திற்கு ஆட்சியாளருக்கு எதிர்ப்பைக் காட்டும்படி பொது நல வாலிப மன்றத்தின் சார்பில்கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டம் நடக்கும் சமயத்திலே ஒரு முஸ்லிம் பெரியார் ''நீங்கள் எந்த முறையில், எவ்வாறு போராட்டம் நடத்தப் போகின்றீர்கள் என்று கேட்டார். அக் கேள்விக்கு திரு அ. தருமராசா பதில் அளிக்கையில் போராட்டம் காந்திஜீயின் அன்பு அகிம்சையைப் பின்பற்றியதாக இருக்கும் என்றும் தொண்டர்களுக்கு எவ்வித இடைஞ்சல் வந்தபோதிலும் எதுவித கலகத்திற்கும் செல்லமாட்டார்கள் என்றும் தலைவர்கள் இடும் கட்டளையை மனப்பூர்வமாக ஏற்று போராட்டத்தை நடத்துவர் என்றும் கூறினார்.

பின்னர் கீழ்க்கண்டவர்கள் களுத்துறைக் கிளையின் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: ஐ. எல். எம். எம். சாலிம் மரிக்கார், பொதுச் செயலாளர்: எம். எஸ். எம். தாவுஸ், இணைச் செயலாளர்கள்: ஏ. எல். எம். பகாவுதீன், எம். ரீ. ஏ. மன்சூர், பொருளாளர்: எம். எஸ். எம். சாபி, கலைவளர்ப்பாளர்: ஏ. ஏ. எம். நியாஸ், விளையாட்டுப்பகுதி: ஒ எல். எம். சமீம், எம். எஸ். எம் இஸ்மத், எம். எஸ். ஏ. பரீட்.

---

### மாணவர் முன்னேற்றக் கழகம்

பலாங்கொடை ரோ. க. க. பாடசாலை மாணவ முன்னேற்றக் கழகக் கூட்டம் சென்ற 7-6-57-ல் ரோ.க.க.த. பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர் திரு சுவக்கீன் தலைமையில் நடைபெற்றது.

கழக அறிக்கை செயலாளர் தமிழ்ச் செல்வனுல் வாசிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

செல்வியர்:ருசேந்திரமணி ''மாணவர்'' என்னும் பொருள்பற்றியும் பி. மகேஸ்வரி ''பொறுமையின் விளைவு'' என்னும் பொருள்பற்றியும் செல்வர்கள்: எம். இராமசாமி ''என் வாழ்க்கையின் நோக்கம்'' என்னும் பொருள்பற்றியும், சாமுவேல் போல் ''கம்பரை வளர்த்த வள்ளல்'' என்னும் பொருள் பற்றியும் பேசினார்கள்.

இசைச் செல்வர்கள்:செயராசசிங்கம், ஆனந்தராஜா, கிருஷ்டி முதலானோர் இசை விருந்தளித்தனர்.

---

### முற்போக்கு வாலிபர் சங்கம்

முற்போக்கு வாலிபர் சங்கத்தின் 5-வது ஆண்டு இறுதிப் பொதுக் கூட்டம் சென்ற 9-6-57-ல் ஜிந்துப்பிட்டித் தெரு குருகுல உயர் நிலைப் பள்ளி மண்டபத்தில் திரு. சு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் புதிய செயற்குழு உறுப்பினர்களாக கீழ்க்கண்டவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. சு. கணபதிப்பிள்ளை, இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள், வை. குமார், நா. செல்வராஜ். பொருளாளர்: திரு. ஐ பெ கணபதிப்பிள்ளை ஆகியோர்களும் திரு. ஜே. வேலுசாமி (கலைப் பகுதி) திருபாலை கதிரேசன் (இலக்கியப் பகுதி-சொற் பயிற்சிப் பகுதி) திரு. ம. மி. பேதுரு (இராப்பாடசாலை-வாசிகசாலை) திரு. எஸ். சிவராமன் (பத்திரிகைப் பகுதி) திரு. ஸ்டான்லி துரைராசா (விளையாட்டுப் பகுதி) பொறுப்பாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டு (வாலிபர் சக்தி) என்றும் பத்திரிகை நடாத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

---

### வாலிப முன்னேற்றக் கழகம்

கொழும்பு வாலிபர் முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு கூட்டம் கடந்த 25-5-57-ல் புளூமண்டால் வீதியில் உள்ள வாலிப முன்னேற்றக் கழக பணி மனையில், தலைவர் திரு. ச சிவபாதம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

(1) தமிழரசுக் கட்சியின் உரிமைப் போராட்டம் பற்றிய அறிக்கையை கழகம் வரவேற்கிறது. ஆவணி இருபதில் தமிழரசுக் கட்சியினர் நடத்தும் உரிமைப் போராட்டத்தை கழகம் ஆதரிக்கிறது. தமிழரசுக் கட்சியினர்விரும்பினுல் கழகம் போராட்டத்தில் பங்கு கொள்ளதயாராகவிருக்கிறது.

வாலிபர் முன்னேற்றக் கழகத்தின் கிளை ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று கிராண்ட்பாஸைச் சேர்ந்த 50 உறுப்பினர்கள் விரும்புவதால், கிராண்ட்பாஸில் ஒரு கிளை ஆரம்பிக்க திரு. ஆ. ஏசையாவிற்கு இக் கழகம் அனுமதி வழங்குகிறது.

கடைசியாக திரு. எப். பத்மநாதன், தமிழரசுக்கட்சியின் உரிமைப் போராட்டம் பற்றி விரிவாக ஒரு உரை நிகழ்த்தினுர். தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ள எல்லாக் கழகங்களும், மன்றங்களும் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

---

### திருக்குறள் விழா

நானு ஓயா தோட்ட தி. மு கழகச் சார்பில் சென்ற 11-6-57-ல் கோவில் முன்றலில் சோ. பாலகிருஷ்ணன் தலைமையில் திருக்குறள் விழா கொண்டாடப்பட்டது.

திரு செ. க. கந்தையாவும் திரு வீ. செ. சிவனும் ''வள்ளுவர் தந்தகுறள்'' என்னும் பாடலைப் பாடி விழா வைத் தொடக்கிவைத்தார்.

திரு செ. க. சுப்பிரமணியம், ''வள்ளுவர் கண்ட சமுதாயம்'' திரு வை ப. சுப்பிரமணியம், ''மாணவர் கடமை'' திரு மா. பொன்னன் அன்புவழி திரு செ. வே. செட்டி, 'குறளின்பெருமை' என்னும்தலைப்புகளில்சொற்பொழிவாற்றினர்.

தோட்டப் பள்ளிக்கூட மாணவ மாணவிகள் கூட்டுப் பாடல்கள் பாடினர்.

---

### ஆயுள் வேத பரீட்சை முடிவுகள்

வட இலங்கை சுதேச வைத்திய சபையார் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுள் வேத வைத்தியக் கல்லூரியில் சென்ற மார்ச் மாதம் நடைபெற்ற வருடாந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயரை தராதர ஒழுங்கின்படி வெளியிட்டிருக்கிறுர்கள்.

விசேடவகுப்பு (எல் ஏ எம் பி) (1) பி. எட்வேட்.

நான்காம் வருடம்: (டி எம் ஏ) (1) எம். சுப்பிரமணியம் 2-ம் பிரிவு (2) என் உருத்திர சிங்கம் (3) வி. தங்கக்கணபதி 3-ம் பிரிவு.

மூன்றும் வருடம்: (1) வி. மயில்வாகனம் 3-ம் பிரிவு (2) வி. திருநாவுக்கரசு 3-ம் பிரிவு (3) ஆர். கந்தையா 3-ம் பிரிவு.

இரண்டாம் வருடம்: (1) எஸ். வல்லிபுரம் 3-ம் பிரிவு (2) எம். விஞசித்தம்பி 3-ம் பிரிவு (3) எஸ். இராசவேலு 3-ம் பிரிவு.

முதலாம் வருடம்: (1) பி. சண்முகசேசரம 3-ம் பிரிவு.

---

### ''மலைநாட்டுத் தமிழரின் இன்றைய நிலைக்குக் காரணம்''

''உலகாண்ட தமிழினம் இன்று மற்ற நாடுகளில் அடிமைத் தொழில் புரிந்து நாயினும் கீழான நலிந்த வாழ்வு வாழ்கிறது. வாணிபம் செய்ய வந்த வெள்ளையர் இந்நாட்டின் வளத்தை உயர்த்தி தங்களது செல்வத்தைப் பெருக்க திட்டமிட்டனர். அத்திட்டத்திற்கேற்றவர்களாக நாம் காட்சியளித்தோம். நம்மை இந்நாட்டிற்கு அழைத்து வந்து தங்களது வாழ்க்கையை உயர்த்திக் கொண்ட வெள்ளையர்களே மலைநாட்டுத் தமிழரின் இன்றைய நிலைக்கு காரணம்''.

இவ்வாறு நாமக்கல் திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர் திரு. டி. வி. சுந்தரராசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

பதுளை மாவட்ட ஆலி எலயைச் சார்ந்த [illegible]வாக்கட்டவளை தோட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது.

திரு. சுந்தரராசன்மேலும் பேசுகையில், குடி உரிமை, மொழி உரிமை, இழந்து நிற்கும் நீங்கள் கட்சி பேதங்களை விட்டு இழந்த உரிமைகளைப் பெறஒற்றுமைகளைப் பெற ஒற்றுமைப் பாலதயிலே ஒரே கட்சியில் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதன்பின் திருவாளர்கள் அ. தங்கராசன், என். எஸ். இராசசுந்தரம், மாவட்டச் செயலாளர்—செ. சுப்பிரமணியம் மாவட்ட உப பிரஜிநிதி திரு. எச். சந்திரசேகர ஆகியோரும் கூட்டத் பேசினர்கள்.

---

### ஜமாஅதே இஸ்லாமி

ஜமாஅதே இஸ்லாமி இலங்கை இயக்கத்தின் கூட்டம் சென்ற 2-6-57-ல் ஜனுப் ஏ. டபிள்யூ. எம். இல்யாஸ் இல்லத்தில் கூடி, இந்நாட்டிலே இஸ்லாத்தின் எதிர்கால வளர்ச்சியை முன்னிட்டு, ஜமா அதே இஸ்லாமி (இலங்கை) யுடன், ஜமா அதே இஸ்லாமி ஆதரவாளர் இயக்கம் இணைக்கப்பட்டு, அமீராக (தலைவர்) மவ்லவி பாஸில், யு. எம். தாஸீன் (நத்வி) அவர்களையும், கையிமாக (காரியதரிசி) ஜனுப் பி. டி. எம். முஹியித்தீன் அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

---

ரூபா ஐம்பது:

## ஆகஸ்ட் போராட்டத்திற்கு ஆசிரியர் சங்கத்தின் நன் கொடை

### சகல ஆசிரியர்களும் போராட்டத்தில் குதிக்க தலைவர் வற்புறுத்து

**''தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காக நடத்தப்படும் ஆகஸ்ட்போராட்டத்தை இச் சங்கம் ஆதரிக்கிறது. இதைக் காட்டு முகமாக சங்கத்தின் நன்கொடையாக ரூபா 50/ தமிழரசுக்கட்சிக்குக் கொடுக்க வேண்டுமென இச் சங்கம் தீர்மானிக்கிறது.''**

இவ்வாறு கூறும் தீர்மானம் ஒன்று கடந்த 1-6-57 சனிக்கிழமை கற்றன் அர்ச். யோன்பொஸ்கோ கல்லூரியில் சங்கத் தலைவர் திரு தே. குலசேகரம் தலைமையிற் கூடிய கற்றன் பகுதித் தமிழாசிரிய சங்கப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது ஆவணி மாதப் போராட்டத்திற்கு பண உதவி செய்யும் முதற் சங்கம் க. ப. த. ஆ. சங்கம்என்பது குறிப்பிடததக்கது.

பிரஸ்தாப தீர்மானத்தையொட்டி தலைவர் பேசுகையில், இதுவரை காலமும் தங்கள் நல உரிமைகளுக்காகப் போராடிய தமிழாசிரியர்கள் இன்று மொழி உரிமைப் பாதுகாப்புக்காகவும் போராட வேண்டிய நிலைக்கு உந்தப்பட்டுள்ளார்களென்றும். ஆகவே மொழி உரிமைப் பாதுகாப்புப் [illegible] போராட்டம் என்ற அடிப் [illegible] போராட்டம் நடத்தினலும் அவர்கள் போராட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்றும், இன்றைய நிலையில் மொழி உரிமைப் பாதுகாப்புக்காகப் போராட முன்வந்துள்ள தமிழரசுக் கட்சியின் ஆவணிப் போராட்டத்தில் தமிழாசிரியர்கள் குதிக்க வேண்டியது கடமை யென்றும் கூறினர்.

வீட்டுவாடகை, பிரயாணச் சீட்டுவசதி, இலவச வைத்திய வசதி ஆகிய விசேஷ சலுகைகளை உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டுமென இச் சங்கம் கனம் கல்வி மந்திரியைக் கோருகிறது. கூட்டத்தில் வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஈற்றில் 25-5-57-ல் திருமலையில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் மொழிப் பாதுகாப்பு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வாசித்து அவையினைத்தும் இங்கும் நிறைவேற்றப்பட்டன.

---

### உயிரை, உரிமையை ..

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் எந்தப் போராட்டம் நடத்தினுலும் எமது இன அழிவைத் தடுக்கமுடியுமோ வென்ற பயங்கர நிலையிலிருக்கிறேம். ஆதலால், முதலில் எமது இனத்தைப் பாதுகாப்போம்—அதாவது முதலில் அரசியல் விடுதலைக்காகப் போராடுவோம். அதைத் தொடர்ந்து சோஷலிஸ சமுதாயத்தைச் சிருஷ்டிப்போம்.

#### ஆகஸ்ட் இயக்கத்தில் சேருங்கள்

எம் இனத்தைப் பேணும் போராட்டத்திலே சேர்ந்து கொள்ள ஆகஸ்டு 20 உங்களை அறைகூவியழைக்கிறது. எனவே,

ஆயிரமாயிரக்கணக்கிலே திரள் திரளாகத் ஓடி வாருங்கள், தமிழரசுத் தொண்டர் படையில் விரைந்து சேருங்கள் எனக் கூவி அழைத்து விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

(முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை 28ம் திகதி முதல்!

கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)

மோடர்ன் (பதுளை)

வெல்லிங்டன் (யாழ்ப்பாணம்)



தங்கவேலு, பி. பானுமதி,
டி. எஸ். பாலையா,
எம். என். ராஜம்,
நம்பியார், ஈ. வி. சரோஜா,
எஸ். வி. சுப்பையா,
டி. பி. முத்துலட்சுமி

முதலியோர் நடித்தது.

பின்னணி:

லீலா, ஜிக்கி, சுசிலா, ஏ. ஜி. ரத்னமாலா, கானசரஸ்வதி, டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், கே. எச். ரெட்டி.

கல்பனவின்

# "ரம்பையின் காதல்"

வெற்றி முரசு கொட்டும் 7வது வாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு) கல்யாணி (நாவலப்பிட்டி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ரிச்மென்ட் (களுத்துறை) மொடர்ன் (பண்டாரவளை)

லட்சுமி (இரத்தினபுரி) சிலோன் டூரிங் (அம்பாரை) ஸ்ரீபாத (ஹட்டன்)

நடிகர்கள்:

சிவாஜி கணேசன், சாவித்திரி,
நாகையா, கண்ணும்பா,
ராஜசுலோசனா, சரோஜா, நம்பியார்,
எம். கே. ராதா, தங்கவேலு.

பின்னணி இசை:

எர். வசந்தகுமாரி, பி. சுசிலா, பி. லீலா, ஜிக்கி,
சௌந்தரராஜன், சீர்காழிகோவிந்தராஜன், ஏ. எம். ராஜா,
டி. வி. ரத்னம், கிருஷ்ணன்.

# வணங்காமுடி

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு [illegible] 1957 ஜூன் மாதம் 23ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org